1996ஆம் ஆண்டு சனவரி 25ஆம் நாள் தனது பவள விழாவைக் கொண்டாடியதை முன்னிட்டு, அதுவரை அளிக்கப்பட்டு வந்த இறையியல் இளங்கலைக் கல்வியுடன், இறையியல் முதுகலைக் கல்வியும் இங்கே ஆரம்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஓர் இறையியல் நிறுவனமாக அது தரம் உயர்த்தப்பட்டது.

இதன் வளர்ச்சியின் மற்றொரு மைல்கல்லாக, திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவைசார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கிய ‘‘உண்மையின் மகிழ்ச்சி’’ என்ற ஏட்டின் வழிகாட்டுதலின்படி, 2021-2022ஆம் கல்வியாண்டிலிருந்து, இவ்வில்லத்தின் அருள்பணிப் பயிற்சியகமும், இறையியல் கல்வி நிறுவனமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்ற, ஆனால் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்ட தனித்தனிச் சட்டத் தொகுப்புகளைக் கொண்ட அமைப்புகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

இங்குள்ள இறையியல் கல்வி நிறுவனத்தைத் தன்னாட்சி பெற்ற திருஅவைசார் உயர்கல்வி நிறுவனமாக்கவும், இளங்கலை இறையியல் பட்டம்போல, இளங்கலை மெய்யியல் பட்டம் வழங்கும் நிறுவனமாக இதை மாற்றவும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இறையியல் கல்வியை நேர்முக, இணையவழி பட்டயப்படிப்பாக வழங்கவும் ஆவன செய்யப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளெல்லாம் வருங்காலத்தில் வெற்றிபெறவும், அப்பயணத்தில் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் தனது உருவாக்கப்பணியில் சிறப்புடன் பயணிக்க வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துரை



அருள்பணி. முனைவர் வ. ஞானமுத்து
நிர்வாகி, மெய்யியல் துறை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 423)

எப்பொருள் எவரெவர் சொல்லக்கேட்பினும் அப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதுதான் அறிவு என்ற பின்னணியில் மெய்யியல் என்பதன் பொருளை இக்குறளின் வழியாக நாம் புரிந்துகொள்ள முடியும். பகுத்தறிவின் துணைகொண்டு உண்மையைத் தேடுவதே மெய்யியல் எனலாம்.

கத்தோலிக்கக் கல்விக்கான பேராயம் 28 சனவரி 2011 அன்று ''திருஅவையில் மெய்யியல் கல்வியின் சீர்திருத்தம்'' என்ற தலைப்பில் வெளியிட்ட ஆணை ஏடு, எண் 6 உண்மையை ஒரு பரந்த பார்வையில் நோக்குகிறது. அதன்படி கிறித்தவக் கண்ணோட்டத்தில் உண்மையை அன்பிலிருந்து பிரிக்க முடியாது. காரணம், உண்மைதான் அன்பு அல்லது இரக்கச் செயல்பாடுகளுக்கு அர்த்தத்தையும் மதிப்பையும் தருகிறது. அதுபோன்றே உண்மையும் நன்மையும் நெருங்கிய தொடர்புடையவை. உண்மையை அறிவதன் நோக்கம் நன்மையை அறிவதாகும். உண்மை நம்மை நல்லவர்களாக மாற்றுகிறது; நல்லவை உண்மையாகின்றன. மெய்யியலில் பகுத்தறிவின் துணைகொண்டு நாம் தேடும் உண்மை என்பது வெறும் அறிவுக்கான தாகத்தைத் தணிப்பதற்காக அல்ல; உண்மை என்பது எங்கோ ஓரிடத்தில் தனித்து நிற்பதல்ல. மாறாக, மெய்யியலில் நாம் தேடும் உண்மை, இவ்வுலகம், மனிதர், கடவுள் ஆகிய யதார்த்தங்களை ஆழமாக அறிந்து அவைமீது நாம் கொண்டுள்ள அன்பில் பின்னிப் பிணைந்துள்ளது. இந்த உண்மைக்கான தேடல் இச்சமூகத்தில் என்றுமே நண்மையை நிலைநிறுத்தும் நோக்கம் கொண்டது. இதையே ''உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்'' என யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார் (யோவா 8:32).

1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனித பவுல் குருத்துவக் இக்கல்லூரியில் 1983ஆம் ஆண்டுவரை மெய்யியல், இறையியல் பயிற்சிகள் இணைந்தே நடைபெற்றிருக்கின்றன. 1983ஆம் ஆண்டு மதுரை மறைமாநில அருள்பணி மாணவர்களுக்கான மெய்யியல் பயிற்சியகம், கருமாத்தூரில் உருவாக்கப்பட்டதால் புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வந்த மெய்யியல் துறை கருமாத்தூர், கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. மெய்யியல் அருள்பணிமாணவர்கள் கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரியில் தங்கியிருந்து கருமாத்தூர், அருள்ஆனந்தர் கல்லூரியில் மெய்யியல் பயிற்சி பெற்றனர். 1999ஆம் ஆண்டு திருத்தந்தை ஆட்சிப்பீடத்திலிருந்து வருகை புரிந்த திருத்தூதுப் பார்வையாளர்கள், கிறித்து இல்லத்தை மையமாக கொண்டு நடைபெற்ற பயிற்சிகளை ஆய்வு செய்து, தனியாக மெய்யியல் பயிற்சியகம் ஆரம்பிக்க வேண்டும் என்னும் பரிந்துரையை முன்வைத்தனர். அதன்படி 2006 சூன் மாதம் கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரியிலேயே மெய்யியல் கற்றுக்கொடுக்கப்பட்டது.

2015ஆம் கல்வியாண்டிலிருந்து கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரியில் செயல்பட்ட மெய்யியல் துறை மீண்டும் திருச்சி, புனித பவுல் குருத்துவக் கல்லூரிக்கு மாற்றம் பெற்றது. 2018ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட ''உண்மையின் மகிழ்ச்சி'' என்னும் திருத்தூது அமைப்பு விதித்தொகுப்பைப் பின்பற்றி 2021ஆம் கல்வியாண்டு முதல் ஒன்றுபட்ட இறையியல் பயற்சியின் முதல் பகுதியாக மெய்யியல் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நூற்றாண்டு விழாக் காணும் புனித பவுல் குருத்துவக் கல்லூரி ஆயிரக்கணக்கான அருள்பணியாளர்களையும் பல ஆயர்களையும் தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பிறநாட்டுத் திருஅவைகளுக்குக் கொடுத்த பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கிறது. இக்குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறையில் பணிபுரியும் பேராசிரியர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் சார்பாக உருவாக்கப்பணி சிறக்க எனது வாழ்த்துகள்.

வாழ்த்துரை



அருள்பணி. முனைவர் கூ. சந்தியாகு ராசா
நிர்வாகி, இளங்கலை இறையியல் துறை

''காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து'' (*இன்றைய உலகில் திருஅவை*, எண். 4) புனித பவுல் குருத்துவக் கல்லூரி நூறு ஆண்டுகள் பயணித்துள்ளது. கத்தோலிக்கத் திருஅவையின் இதயமாக இருப்பது குருத்துவக் கல்லூரிகள். காரணம், இங்குப் பயிற்சி பெறும் அருள்பணிமாணவர்களே காலப்போக்கில் திருஅவையை வழிநடத்தும் பெரும் பொறுப்பைப் பெறுகின்றார்கள். தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் எண்ணிக்கை அடிப்படையில் இந்துக்களுக்கு அடுத்தபடியாகக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் இருந்தாலும் கூட கத்தோலிக்கக் கிறித்தவ இறைமக்களை வழிநடத்தும் அருள்பணியாளர்களை உருவாக்கும் இறையியல் குருத்துவக் கல்லூரி ஒன்று கூட 1921க்கு முன்பாக தமிழகத்தில் இருந்ததில்லை. எனவே, 1921ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதுதான் புனித பவுல் குருத்துவக் கல்லூரி.

இக் குருத்துவக் கல்லூரி இரண்டாம் வத்திக்கான் சங்கம் காட்டிய பாதையில் பயணிக்கும் ஒன்று என்றால் அது மிகையாகாது. சங்கம் வகுத்த பாதையில் இந்தியாவிலேயே தாய்மொழியில் இளங்கலை இறையியல் கற்றுக்கொடுக்கும் ஒரே இறையியல் கல்லூரி இதுதான். அவ்வாறே, தமிழ்நாட்டின் சமூக, பண்பாட்டு, சமய, பொருளாதார, அரசியல் சூழல்களைப் பின்னணியாகக் கொண்டு இங்கு இறையியலாக்கம் செய்யப்படுகின்றது. தமிழர் மரபில் உருவான இலக்கியங்கள் இங்கு நடத்தப்படும் இறையியல் கல்விக்கு உறுதுணையாய் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக ஏழைகள் சார்பான இறையியல் இங்கு அழுத்தம் பெறுகின்றது. இவ்வாறு, இங்கு இறையியல் பயிலும் அனைவரும் தமிழ்நாட்டுச் சூழலில் தாங்கள் நம்பும் இறைவன் யார்? என்பதைத் தேட இக் கல்லூரி தூண்டுகின்றது.

இன்று தென் தமிழகத்தில் உள்ள எட்டு மறைமாவட்டங்களில் உள்ள பெரும்பான்மையான மறைமாவட்ட அருள்பணியாளர்கள் தங்களின் இறையியலை இக் குருத்துவக் கல்லூரியில்தான் பெற்றார்கள். தவிர, தமிழகத்தின் ஏனைய மறைமாவட்டங்களிலும் அண்டை நாடான இலங்கையிலும் இங்குப் பயின்ற ஒரு சில மறைமாவட்ட அருள்பணியாளர்கள் உள்ளனர். மேலும், பல்வேறு துறவு அவைகளைச் சார்ந்தவர்களும், 1991ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு பெண் துறவு அவையினைச் சார்ந்தவர்களும் (52 பேர்) பொதுநிலையினரும் (19 பேர்) இங்குப் பயின்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இங்குப் பயிற்சி பெற்றவர்கள்தான் தங்களின் மறைமாவட்டங்களில் அகில உலகத் திருஅவையின் சிந்தனைக்கும் செயல்பாட்டிற்கும் ஏற்பவும், தாங்கள் சார்ந்துள்ள மறைமாவட்ட அருள்பணித் தேவைகளுக்கேற்பவும் செயல்பட்டு, இரண்டாம் வத்திக்கான் சங்கம் காட்டிய பாதையில் இவர்கள் பல்வேறு மாற்றுப் பணிகளை முன்னெடுத்துள்ளார்கள். கோவில், அருளடையாளம் சார்ந்த பணிகளுடன் தங்களின் மறைத்தூதுப் பணியை முடக்கிவிடாது மக்கள் நலப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திச் செயல்படுகின்றார்கள்: மக்களைப் பல்வேறு அமைப்புகளாகக் கட்டியெழுப்புதல், மக்கள் நலப் போராட்டங்களை முன்னெடுத்தல், சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள ஏழைகள், நோயுற்றோர், ஆதரவற்றோர் போன்ற பலதரப்பட்ட மக்களுக்கு பல்வேறு வகையில் நலப்பணிகள் செய்தல், பெண்கள் முன்னேற்றம் போன்ற பல பணிகளையும் இன்று முன்னெடுக்கின்றார்கள். இவ்வாறாக, ஒரு நலமான திருஅவையை, இறையாட்சி மதிப்பீடுகளைத் தன்னகத்தே கொண்டு வாழும் திருஅவையை உருவாக்க இங்கு பயின்ற அருள்பணியாளர்கள் முயன்று வருகின்றார்கள்.

இவ்வாறாக, காலத்தின் தேவை அறிந்து, இம் மண்ணின் மணத்தை நுகர்ந்து, இம் மக்களின் பண்பாட்டைத் தனதாக்கி இளங்கலை இறையியல் பயிற்றுவித்து பல நூற்றுக்கணக்கான அருள்பணியாளர்களை உருவாக்கியுள்ள இக் குருத்துவக் கல்லூரி தனது நூறாவது ஆண்டை நிறைவு செய்துள்ள இவ்வேளையில் அது இன்னும் பல நூறாண்டுகள் சிறப்பாகச் செயல்பட்டு இறையாட்சிப் பணியாளர்களை உருவாக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துரை



அருள்பணி. முனைவர் அ. ஆல்பர்ட்
நிர்வாகி, அருள்பணியியல் துறை

புனித பவுல் குருத்துவக் கல்லூரிக்கு நூற்றாண்டு விழா! நூறு வயது நிரம்பிய எம் கல்லூரித்தாயின் பெருமை வானளாவ உயர்ந்து பட்டொளி வீசிப் பறப்பது கண்டு நூற்றாண்டு விழாவில் எம் உள்ளம் பூரிக்கின்றது; பெருமிதம் கொள்கின்றது; பெருமைப்படுகின்றது; பேரானந்தம் கொள்கின்றது. இவ்வேளையில், இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக பல்லாற்றானும் பாடுபட்டு உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் முதலில் அருள்பணிப் பயிற்சியியல் துறை சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பவுல் குருத்துவக் கல்லூரியின் அருள்பணிப் பயிற்சியியல் துறை மறைமாவட்ட, துறவற அவைகளைச் சார்ந்த திருத்தொண்டர்களுக்குச் சிறப்பு அருள்பணிப் பயிற்சியைக் கொடுக்கிறது; காலத்தின் மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்பப் புதிய அருள்பணிப் பார்வைகளையும், அணுகுமுறைகளையும், வடிவங்களையும் அறிமுகம் செய்து பயிற்றுவிக்கின்றது; அறிவுசார் அருள்பணி இறையியல் கல்வியோடு அனுபவம்சார் களப்பணி பயிற்சிகளையும் உள்ளடக்கிய பன்முகப் பயிற்சிகள் மூலம் ஆர்வத்தோடும் முனைப்போடும் அருள்பணியாளர்களாகப் பணியாற்ற ஊக்கமூட்டுகின்றது.

குருத்துவக் கல்லூரியின் நிர்வாகக்குழு ஆயர்களில் ஒருவர் இத்துறையின் வழிகாட்டியாக இருந்து உற்சாகமூட்டுவதால் புதுப்பொலிவோடு இத்துறை தொடர் வளர்ச்சி காண்கின்றது. இவ்வேளையில், இது வரையிலும் இத்துறையைச் சிறப்பாக வழிநடத்திய மேனாள் ஆயர் பெருமக்கள், இந்நாள் வழிகாட்டி மேதகு ஆயர் நசரேன் சூசை ஆகியோருக்கு சிறப்பான நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அதோடு, கடந்த நூறு ஆண்டுகளாக அருள்பணிப் பயிற்சியில் தங்களை ஈடுபடுத்தி எம் அருள்பணி மாணவர்களுக்குக் கல்லூரியிலும் களங்களிலும் பயிற்சி அளித்துள்ள அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகியோருக்கு உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவைசார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கிய *உண்மையின் மகிழ்ச்சி (Veritatis Gaudium)* என்ற ஏட்டின் வழிகாட்டுதலைப் பின்பற்றி 2021-2022ஆம் கல்வியாண்டிலிருந்து அருள்பணியியல் மாணவர்களுக்கு ஓராண்டுப் பட்டயப் படிப்பு அறிமுகம் செய்யப்பட்டிருப்பது அருள்பணியியல் துறையின் அடுத்தக்கட்ட வளர்ச்சியே என்று சொன்னால் மிகையாகாது.

இக்கல்லூரியில் அருள்பணிப் பயிற்சி பெற்ற ஆயர்கள், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் என யாவரும் பல்வேறு துறைகளிலும் தளங்களிலும் ''தொண்டு ஆற்றிடவே'' (மத் 20:28) எனும் உயர்ந்த இலக்கோடு இறைமக்களின் ஒருங்கிணைந்த நலன்களுக்காகவும் விடுதலைக்காகவும் தங்கள் வாழ் வை ஈடுபடுத்தி இறையாட்சிப் பணியாற்றுவதைப் பார்க்கின்றபொழுது நூற்றாண்டு காணும் நம் இல்லத்தாய் வெற்றிக் களிப்பில் இனிதே மகிழ்கின்றாள்.

புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் ஓர் அங்கமான அருள்பணியியல் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஓங்கி வளர்ந்திட வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன். அருள்பணியியல் துறை நிர்வாகி எனும் முறையில் இந்நூற்றாண்டு விழாவில் எம் குருத்துவக் கல்லூரியின் திருத்தொண்டர்கள், அருள்பணியியல் துறைப் பேராசிரியர்கள் அனைவர் சார்பிலும் குருத்துவக் கல்லூரிக்கு எனது இனிய வாழ்த்துகளை அன்போடு காணிக்கையாக்குகின்றேன்.

வாழ்த்துரை



அருள்பணி. முனைவர் மைக்கில் ராஜ்
நிர்வாகி, முதுகலை இறையியல் துறை

புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நூறாண்டு வரலாறு கண்ட எம் கல்லூரியின் முன்னாள் மாணவர் என்பதிலும் இன்றைய இறையியல் பேராசிரியர் என்பதிலும் நிறைந்த நன்றி உள்ளத்தோடு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் நிகழ்வுக்காய் எம் கல்லூரியை உருவாக்கி வளர்த்தெடுத்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

தொடக்கத்தில் (1921) இயேசு அவையினரால் நிர்வகிக்கப்பட்ட எம் புனித பவுல் குருத்துவக் கல்லூரி அதன் 75ஆம் ஆண்டு பவள விழாவை 1996ஆம் ஆண்டு கொண்டாடிய போது, அதன் போற்றத்தக்க நினைவாக முதுகலை இறையியல் படிப்பைத் தொடங்கியது. தமிழகத்தில் எந்தக் குருத்துவக் கல்லூரிக்கும் இல்லாத, கிடைக்காத சிறப்பு மிக்க இந்த முதுகலை இறையியல் கல்வி உருவாக்கம் எம் பவுல் கல்லூரிக்கு அமையப் பெற்றுள்ளது ஒரு தனிச்சிறப்பு. இதுவரை ஏறக்குறைய 40 மாணவர்கள் முதுகலை இறையியல் பட்டத்தைப் பெற்றுள்ளனர். அவர்களில் ஒரு சிலர் இதே குருத்துவக் கல்லூரியில் இறையியல் பேராசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர், இப்பொழுதும் பணியாற்றுகின்றனர் என்பது கூடுதல் சிறப்பு. தரமான, மக்கள் ஈடுபாடு நிறைந்த திருஅவை குறித்தும் திருஅவையின் இறையியல் நிலைப்பாடுகளையும் கோட்பாடுகளையும் கற்றுத் தெளிவதிலும் அறிவியல் முறையிலான ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் கூடிய இறையியல் உயர்கல்வியைப் பெற இந்தப் படிப்பு இங்கே மிகச் சிறப்பாக வழங்கப்படுகிறது. அருள்பணியாளர்கள் மட்டுமல்ல, அருள்சகோதரிகளுள் ஏன் பொதுநிலைச் சகோதரிகளும் இங்கே முதுகலை இறையியலில் நிறைவுடன் கூடிய சாதனையை நிகழ்த்தியுள்ளனர் என்பது நூற்றாண்டு விழாவில் பாராட்டுக்குரிய விடயமாக மாறியுள்ளது. இறையியலில் முதுகலைப் பட்டத்தை வெளிநாடு சென்றால்தான் படிக்க இயலும் என்ற கடந்த கால வரலாற்றை மாற்றியமைத்து தமிழகத் திருஅவையின் தனிப்பெரும் வாய்ப்பாக, எம் தமிழ் மண்ணிலேயே மிகச் சிறப்பான உயர் கல்வியைத் தொகுப்பு இறையியலில் பெற வழிவகுத்துள்ளது எம் புனித பவுல் இறையியல் கல்வி நிறுவனம். முதுகலை இறையியல் இங்கே வெற்றிகரமாகச் செயல்படுவதால் 1997ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாள் புனித பவுல் குருத்துவப் பயிற்சிக் கல்லூரி என்ற நிலையிலிருந்து இறையியல் கல்வி நிறுவனம் என்ற தற்போதைய உயர்வை எட்ட முடிந்திருக்கிறது என்று சொன்னால் அது உண்மை.

இத்தனை சிறப்புக் கொண்ட முதுகலை இறையியல் துறையின் நிர்வாகி என்ற நிலையில் எம் குருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில், முதுகலை முன்னாள், இந்நாள் மாணவர்கள் பெயரிலும், கற்றுக் கொடுக்கும் எம் வருகைதரும் பேராசிரியர்கள், நிரந்தரப் பேராசிரியர்கள் அனைவரின் பெயரிலும் எம் இனிய வாழ்த்துகளையும் வணக்கத்தையும் அன்புடன் இக்கல்லூரிக்கு உரித்தாக்குகின்றேன். இத்தனை ஆண்டுகளாக (1996-2022) எம் முதுகலை இறையியல் கல்வி இங்கே செயல்பட ஆதரவளிக்கும் அனைத்து ஆயர்களுக்கும், உள்ளன்பு கொண்ட நன்கொடையாளர்களுக்கும் எம் நூற்றாண்டு விழா மகிழ்வையும் அன்பையும் பகிர்ந்து கொள்கிறேன். புனித பவுல் கல்லூரியின் சிறப்புமிக்க அங்கமான முதுகலை இறையியல் கல்வி சீரான வளர்ச்சி பெற்று அடுத்தகட்ட வளர்ச்சி நிலையை எட்டி, பல முனைவர்களை இறையியல் கல்வியில் உருவாக்கி, வளர்த்தெடுக்கும் பல்கலைக் கழகமாக உருவெடுக்க என் மனமார்ந்த வாழ்த்துகளை உளமாரத் தெரிவித்து மகிழ்கிறேன். நன்றி.

பகுதி - 2

புனித பவுல் கல்லூரியின்
வரலாறும் பங்களிப்பும்





Explanation of the Logo of St. Paul's Seminary

- *'Segregati in Evangelium Christi'* - This Latin verse is taken from the letter of St. Paul to the Romans. In English it is rendered as "Set apart for the Gospel of Christ" (Rom 1:1).
- From below on the left side is the Bible marked with the Cross.
- In the upper left is the acronym IHS which means Jesus the Saviour of humans.
- In the right side above are the writings of St. Paul with the writing instrument and the sword which is the symbol of St. Paul's martyrdom.
- In the lower right is the figure of the chalice and host which especially represent the Eucharist, the ever-abiding sacramental presence of Jesus.
- In the middle is Jesus' heart from where flow the seven sacraments symbolized by seven small lines.
- The whole logo is gloriously crowned signifying the glory to be given to God by the presbyters who following the model of St. Paul, continue the ministry of the Word and Sacraments.

இல்லப்பண்

தரிசனம் பெற்றவர் புதுவழி கண்டவர்
சரித்திர நாயகன் பவுல் வாழ்கவே – அவர்
சத்திய நெறியில் குருகுலம் வாழ்கவே – 2(2)

இயேசுவின் செய்தியை இலட்சியமாக்கி – ஆ... ஆ...
எல்லாம் அவரென பணியினை ஏற்று – ம்... ம்... ம்...
பேச்சிலும் மூச்சிலும் அவர் மயமாகி – 2
பேரின்ப வாழ்க்கையைப் பிறருக்குத் தந்தவர்
பவுலின் பெருமை பாடுவோம் – அவர்
பாதை நாமும் செல்லுவோம் – 2

மொழிகளும் இனங்களும் இடங்களும் கடந்து – ஆ... ஆ...
இறைவனின் அன்புக்குச் சான்றெனத் திகழ்ந்து – ம்... ம்... ம்...
விடுதலைப் பணியில் விழுமியம் தேடி – 2
மீட்பின் செய்தி பரவிடச் செய்தவர்
பவுலின் பெருமை பாடுவோம் – அவர்
பாதை நாமும் செல்லுவோம் – 2

நூற்றாண்டு விழாச் சின்னம்



புனித பவுல் குருத்துவக் கல்லூரி
வரலாறும் வாழ்வும்

தமிழ்நாட்டின் இதயமாக நிலப் பரப்பளவில் இயங்கிக் கொண்டு, 'சோழநாடு சோறுடைத்து' எனும் பழம் பெருமைக்குச் சொந்தமான சோழமண்டலத்தைச் செழிக்க வைக்கும் காவிரித்தாயின் மடியில், கரிகால் பெருவளத்தான் கட்டிய கவின்மிகு கல்லணையில் பாய்ந்து வரும் வெள்ளத்தின் தாலாட்டில் துயில்கொண்டிருக்கும் தன்னிகரில்லாத மாநகரம் திருச்சிராப்பள்ளி. கல்வி, கலை, மருத்துவம், போக்குவரத்து, வணிகம் என எல்லாத் தளங்களிலும் சிறப்புற்றுச் சங்ககாலம் முதல் தொன்மப் புகழோடு திகழும் மாநகர் திருச்சிராப்பள்ளி. இம்மாநகரின் மையத்தில் நூறாண்டுகள் கடந்து நீண்ட பாரம்பரியத்தோடும் எண்ணற்ற வரலாற்றுச் சிறப்புகளோடும் அழகுறச் செம்மாந்து வீற்றிருப்பது புனித பவுல் குருத்துவக் கல்லூரி. இப்பயிற்சியகம் அருள்பணிப் பயிற்சித்தளமாக, அறிவுக்கோவிலாக, அருள்வாழ்வின் ஊற்றாக, அருள்பணி மாணவர்களை பல கலைகளில் வார்த்தெடுக்கும் பட்டறையாக முழுமனித வாழ்விற்கான விழுமியங்களின் விளைநிலமாக, தமிழ் இறையியலின் தோற்றுவாயாக, தாயாம் திருஅவைக்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் தன்னாலான எல்லா வழிகளிலும் பாங்குறப் பணியாற்றி வருகிறது.

"வாழ்க! இப்பயிற்சியகம் – எம் தாயகம்"


"கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட" என்னும் விருதுவாக்கை இலக்காகக் கொண்டு இயங்கும் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் போதனைகளை ஆழமாக உள்வாங்கி, காலத்தின் அறிகுறிகளைக் கண்டறிந்து, "இதயத்தில் இயேசுவாய்... பணியில் பவுலாய்" இதுவரை 25 ஆயர்களையும் 1746 அருள்பணியாளர்களையும் கடந்த நூறாண்டுக் காலத்தில் உருவாக்கி, தமிழகத் திருஅவைக்கும் இந்தியத் திருஅவைக்கும் தந்துள்ளது. இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து மட்டுமல்லாது, ஈழத்திலிருந்தும் பல துறவற அவைகளிலிருந்தும் எண்ணிறந்த மாணவர்கள் இங்கு வந்து, பயிற்சி பெற்றுச் சிறப்பாக உலகெங்கும் அருள்பணியாற்றுகிறார்கள் என்பது இப்பயிற்சியகத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது. அருள்சகோதரர்கள் மட்டுமல்லாது அருள்சகோதரிகள், முதுகலை அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் எனத் திருஅவையின் படிநிலையில் உள்ள அனைவரையும் இப்பயிற்சியகம் இன்முகத்தோடு இரு கரம் விரித்து வரவேற்று, இறையியல் பயிற்சியை இன்றளவும் வழங்கிக்கொண்டிருக்கிறது. இப்பயிற்சியகம் நூற்றாண்டினைக் கொண்டாடும் இப்பொழுதினில், இப்பயிற்சியகத்தின் அன்புப் பிள்ளைகள் அனைவரும் அகத்தில் பேரெழுச்சியோடும் முகத்தில் பேருவகையோடும் நாவில் நன்றியோடும் "புனித பவுல் பயிற்சியகம் – எம் தாயகம் வாழ்க!" என ஆர்ப்பரித்துக் கொண்டாடி அகமகிழ்கிறார்கள்; அக்களிக்கிறார்கள்.

விதை, விருட்சமான வரலாறு

இறைஇயேசுவின் இறையாட்சி விதையை இம்மண்ணில் விதைத்தவர் புனித தோமா, அது தென் தமிழ்நாடெங்கும் விருட்சமாக வளர உரமாய், ஊன்றுகோலாய் நின்றவர்கள் பிரான்சு நாட்டைச் சேர்ந்த தூலூசு மாநில இயேசு அவையினர். இவர்கள் 1938ஆம் ஆண்டு மதுரை மறைப்பணித்தளத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்று ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாகியும் போதிய பணம், இடம், பள்ளி வசதிகள் இல்லாமையால் இறை அழைத்தலில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்று சமயப் பரப்புப் பணியாளர்கள் அறியவந்தார்கள். இக்காலகட்டத்தில்தான் திருச்சியில் புனித வளனார் கல்லூரியினை இயேசு அவையினர் தொடங்கினர். அப்போது தந்தை லக்கோம்பே என்பவர் வளனார் கல்லூரி வளாகத்திலேயே ஓர் இளம் அருள்பணிப் பயிற்சியகத்தைத் தொடங்கினார். அங்குப் பயிற்சிபெற்றோர் அதே ஆண்டில் இலங்கை கண்டியில் உள்ள அருள்பணிப் பயிற்சியகத்திற்கு அனுப்பப்பட்டனர். திருச்சி மறைமாவட்டத்திற்குப் பயிற்சி பெறவேண்டிய மாணவர்களையும் 1910 வரை இலங்கையிலுள்ள கண்டிக்குத்தான் அனுப்ப வேண்டியிருந்தது.

திருச்சியிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் 5 மாணவர்களை மட்டுமே கண்டிக்கு அனுப்பலாம் என்ற நிபந்தனையும் வந்தது. இந்தத் திக்கற்ற நிலையில் மங்களூர் அருள்பணிப் பயிற்சியகம் கைகொடுத்தது. 1914 முதல் 1921வரை அங்குத்தான் திருச்சி மறைமாவட்டத்துக்கான அருள்பணி மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள். காலப்போக்கில் அங்கு இடம் போதாமையால் மங்களூர் அருள்பணிப் பயிற்சியகமும் மாணவர் எண்ணிக்கையை வரையறை செய்தது. அதே வேளையில் அங்குப் பயின்ற தமிழக மாணவர்களுக்கு, தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்குக்கேற்ற வகையில் பணிபுரியப் பயிற்சிபெறும் வாய்ப்பு இல்லாமல் போனது.

காலத்தின் அறிகுறிகளை முன்னுணர்ந்த திருச்சி ஆயர் பெசாந்தியர் திருச்சியில் ஒரு பெரிய அருள்பணிப் பயிற்சியகம் நிறுவ வேண்டியது காலத்தின் கட்டாயமென எண்ணினார். இதன் விளைவாக 1921ஆம் ஆண்டு, சூன் மாதம் பாண்டமங்கலத்தில் இயேசு அவையினரின் புனித வளனார் கல்லூரிக்குச் சொந்தமான ஒரு வீட்டில் 21 மாணவர்களுடன் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் தொடங்கப்பட்டது. இதில்தான் முன்னாள் திருச்சி ஆயர் ஜேம்ஸ் மென்டோன்சா பயின்றார். தந்தை கிரான்ஞே அருள்பணிப் பயிற்சியகத்தின் இல்லத் தலைவராகவும், தந்தையர்கள் ஹீப்பர், சபாத்தியர், அசுட்ருக், வின்சென்ட் முதலியோர் பேராசிரியர்களாகவும் பணியாற்றினர்.



மேதகு ஆயர் அ. பைசாந்தியர்



தொடக்ககாலக் குருத்துவக் கல்லூரி



மெய்யியல் மாணவர்கள் வளாகம்

அக்காலத்து அனைத்துப் புதிய உள்கட்டமைப்பு வசதிகளான பேருந்து நிலையம், இரயில் நிலையம், அஞ்சல் நிலையம், தந்தி நிலையம், தொலைபேசி நிலையம், மேலும் நடந்து செல்லும் தூரத்தில் வானொலி நிலையமென அமையப்பெற்ற திருச்சி மாநகரிலே தற்போதைய அருள்பணிப் பயிற்சியகம் அமைந்ததற்கு நீண்ட நெடிய வரலாறும் உண்டு. 1861ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ஆம் தேதி 'மரியின் பரிகார அவை' என்னும் பெண்கள் துறவற அவையினர் மருந்தகம் கட்ட இப்போதைய அருள்பணிப் பயிற்சியகம் அமைந்துள்ள நிலத்தை வாங்கினர். ஆனால் அவர்களின் எண்ணம் நிறைவேறவில்லை. எனவே 1903ஆம் ஆண்டு வரை இராணுவ அலுவலர்கள் பயன்படுத்தவும் அலுவலகங்கள் செயல்படவும் இவ்விடத்தைக் குத்தகைக்கு விட்டனர். இச்சகோதரிகள் இந்தியாவை விட்டுச் சென்றபோது 1881ஆம் ஆண்டு செப்டம்பர் 21இல் இவ்விடத்தை மறைமாவட்டத்திற்கு விற்றனர். 1921ஆம் ஆண்டு காடாகக் கிடந்த இவ்விடத்திற்கு அருள்பணிப் பயிற்சியகம் இடமாற்றம் செய்யப்பட்டது. இங்கிருந்துதான் இயேசுவின் இறையாட்சிப் பணிக்கான பணியாளர்கள் உருவாக்கம் பெறவேண்டுமென்பது இறைத்திருவுளம் போலும்!

1921ஆம் ஆண்டு அருள்பணி. வரின் அருள்பணிப் பயிற்சியகத்தின் இல்லத் தலைவரானார். அருள்பணிப் பயிற்சி மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் போதிய கட்டட வசதிகள் இன்மையாலும் 1925ஆம் ஆண்டில் அருள்பணியாளர்கள் தங்குவதற்காகப் புதிதாகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. இது 1957இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

1927ஆம் ஆண்டிலிருந்து 1933ஆம் ஆண்டுக்குள் அருள்பணிப் பயிற்சி மாணவர்களின் எண்ணிக்கை 21லிருந்து 61ஆக உயர்ந்தது. இந்த ஆண்டுகளில்தான் திருத்தொண்டர்கள் தங்குவதற்கான தனி அறைகள் கட்டப்பட்டன. 1927ஆம் ஆண்டு, சூன் மாதம் அருள்பணி. கூப்ளே இல்லத் தலைவரானார். அருள்பணி மாணவர்களின் உள்ளக்கிடக்கை அறிந்து உதவுவது, அவர்கள் தளர்ந்தபோது ஆற்றுப்படுத்துவது, அறிவுரையும் அறவுரையும் கூறி அவர்களை ஊக்குவிப்பது, ஒப்புரவு அடையாளம் வழங்கி இறையுறவிலும் மனிதவுறவிலும் ஒப்புரவாக வாழ வழிசெய்வது ஆகியவை அவருடைய தனித்துவமிக்க பணிகளாக இருந்தன.

புனித அகுஸ்தின் அருள்பணிப் பயிற்சியகம்

இப்பயிற்சியகத்தின் வளாகத்தின் ஓரத்தில் அமைந்திருக்கும் புனித அகுஸ்தின் அருள்பணிப் பயிற்சியகம் 1932ஆம் ஆண்டு அன்றைய மதிப்பீடு ரூ.20,000இல் தொடங்கப்பட்டது. இங்கு அருள்பணி மாணவர்களுக்கு இலத்தின், ஆங்கிலம் என மொழிப்பயிற்சி, பேச்சுப்பயிற்சி என பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அருள்பணி. அர்னால்ட் இவ்வில்லத்தின் பொறுப்பாளராக பணியமர்த்தப்பட்டார்.

1933ஆம் ஆண்டு அருள்பணி. சா.பீ. லெயோனார்டு அவர்கள் இல்லத் தலைவரானார். இவர்தான் பின்பு 1936ஆம் ஆண்டு திருச்சி மறைமாவட்ட ஆயராகவும், அதன்பின் மதுரைப் பேராயராகவும் பொறுப்பேற்றவர். இவருக்கு அருள்பணிப் பயிற்சியகம் அதிகம் கடமைப்பட்டுள்ளது. சிறிது காலமே இல்லத் தலைவராக இருந்தாலும் இவர் காலத்தில் அருள்பணிப் பயிற்சியகம் அளப்பரிய வளர்ச்சி அடைந்தது. கிறித்து அரசர் மொழிப்பயிற்சி மன்றம் தொடங்கி அருள்பணிப் பயிற்சி மாணவர்களின் மொழியறிவைக் கூர்மையாக்கியதோடு மட்டுமல்லாமல் மறையுரைப் பயிற்சிக்கு இது ஒரு நல்ல தளமாகப் பயன்பட்டது.

1937ஆம் ஆண்டு சமயப் பணியிலும் மேய்ப்புப் பணியிலும் தலைசிறந்த அருள்பணி. லெமாய் அவர்கள் இல்லத் தலைவரானார். கடின உழைப்புக்குப் பெயர்போன இவர் அருள்பணிப் பயிற்சியகத்திற்கு மிகுந்த பயன்தரும் வகையில் விமான நிலையம் அருகில் பண்ணை ஒன்றை வாங்கினார். அருள்பணிப் பயிற்சியகத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அது உறுதுணையாக இருந்தது.



பேராசிரியர்கள் வளாகம்



இல்லக் கோவில்

1942இல் அருள்பணி. உகார்த்தே இல்லத் தலைவரானார். கடமைகளைக் கருத்தாய்ச் செய்வதில் இவர் வல்லவர். அருள்பணிப் பயிற்சி மாணவர்களின் படிப்பில் அதிகக் கவனம் செலுத்தினார். இவர் காலத்தில்தான் அருள்பணிப் பயிற்சியகம் தன் வயதில் கால் நூற்றாண்டைக் கடந்தது. இறைவேண்டல், படிப்பு, பிறரன்பு என்ற விருதுவாக்குகளை முன்னிறுத்தி, பவுல் அருள்பணிப் பயிற்சியகம் தனது வெள்ளிவிழாவை மட்டற்ற மகிழ்ச்சியோடு கொண்டாடி வீறுநடைபோட்டது.

அருள்பணி. லாரன்சு பெர்னாண்டசு 1948இல் அருள்பணிப் பயிற்சியகத்தின் இல்லத் தலைவரானார். முன்னையோரது முயற்சியான கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் முழு மூச்சோடு இவர் செயல்பட்டார். அருள்பணிப் பயிற்சி மாணவர்கள் அருள்வாழ்வில் ஏற்றம் பெறச் சிறு கோவில் ஒன்று கட்டினார். இதுதான் இன்றைய அறிவுக் கோவிலான நூலகமாகத் திகழ்கின்றது.

1953இல் அருள்பணி. சாக்கோ இல்லத்தலைவரானார். எப்போதும் இருந்திராத அளவு இவர் காலத்தில் 149 அருள்பணிப் பயிற்சி மாணவர்கள் பயின்றனர். அவர்களுக்கு அக்கறையுள்ள தந்தையாகவும் அன்புள்ள தாயாகவும் திகழ்ந்தார். உடல் நலம் குன்றிய மாணவர்கள்மேல் தனிக்கவனம் செலுத்தியது மட்டுமல்லாமல் அவர்களுக்கென மருந்தகம், தங்கத் தனியறை கட்டியது இவரது முயற்சியில்தான். அத்துடன் நில்லாது மெய்யியல் மாணவர்களுக்கெனத் தனியாக ஒரு கட்டடம் எழுப்பினார். இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் விவிலிய அருங்காட்சியகம் அமைந்திருந்தது.

அருள்பணிப் பயிற்சியகத்தின் தேவைகளை நன்குணர்ந்தவரும் பயிற்சி மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவருமான **அருள்பணி. தனசாமி 1958ஆம் ஆண்டு இல்லத் தலைவரானார்.** இவர் 1942ஆம் ஆண்டு முதல் அருள்பணிப் பயிற்சியகத்தின் பேராசிரியராக, அருள்வாழ்வு வழிகாட்டியாக, காசாளராக,


கல்விப்பணிகளாற்றியபின் இல்லத் தலைவரானார். நகைச்சுவையால் மாணவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இவருடைய இனிய உரையாடல்களை அவருடைய மாணவர்கள் இன்றும் நினைவுகூர்கின்றார்கள்.

1959இல் அருள்பணியாளர்களின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியான்னியின் நூற்றாண்டு விழாவை அருள்பணிப் பயிற்சியகம் பொருத்தமாகக் கொண்டாடும் வகையில் மெய்யியலார் தங்கியிருந்த கட்டடத்தில் மேல்மாடி எழுப்பி அதற்கு ''வியான்னி மன்றம்'' என்ற (பின்னர்தான் அது கலையரங்கமாக மாற்றப்பட்டது) பெயரைச் சூட்டினார். இச்சிறப்புமிக்க காலத்தில் அதாவது 1953 முதல் 1966 வரை திருஅவைச் சட்டத்தில் வல்லுநரான தந்தை ஜஸ்டின் திரவியம் மதுரைப் பேராயராக உயர்த்தப்பட்டார்.

அருள்பணி. துரைராஜ் 1962இல் இல்லத்தலைவரானார். மாணவர்கள் மொழிகளில் புலமைபெறத் தமிழ், ஆங்கில இலக்கிய மன்றங்களைத் தொடங்கிய புகழ் இவரையே சாரும். ஏட்டுக்கல்வியோடு முடங்கிக்கிடந்த மாணவர்களிடையே பார்வை விரிவடைய, உலக வாழ்வின் நடைமுறைகளை அறிய, மனிதர்களின் அவல வாழ்வுபற்றிய அறிவுத் தெளிவு பெற, பயிற்சியகத்தின் வாயிலைத் திறந்துவிட்டு அருள்பணிப் பயிற்சி மாணவர்கள் மக்கள் அனுபவம் பெறப் பாதை வகுத்துத் தந்தவர் இவரே. தனிமையில் தவிக்கின்ற சிறையன்பர்களைச் சந்திப்பது, உடல் அளவிலே வலுவிழந்த நோயுற்றோரைச் சந்திப்பது, அவர்களுக்கு ஊக்கம் தருவது முதலான பிறரன்புப் பணிகளைத் தொடங்கி வைத்தவரும் இவரே. இன்றும் இப்பணிகள் மிகச் சிறப்புடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



பேராசிரியர்களும் மாணவர்களும்



உணவகம்



திருத்தொண்டர்கள் வளாகம்

1962இல் அருள்பணி. ஜேம்ஸ் லொசே இல்லத் தலைவரானார். புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் புத்தெழுச்சியும் மறுமலர்ச்சியும் புதிய வரலாறும் படைத்த ஒரு காலம் உண்டென்றால் அது புகழ்மிக்க தந்தை ஜேம்ஸ் லொசேயின் காலம்தான். தம்மால் இயன்ற அளவு எல்லாத் தளங்களிலும் பணி செய்து தமது முத்திரையைப் பதித்தவர் இவர். எப்போதும் ஓயாது செயல்படுபவர். இனிமையான உரையாடலிலே மற்றவர்களை மகிழ்வித்தவர். முன்மாதிரியான வாழ்விலே பிறரை எளிதில் ஈர்த்தவர். தெளிவான சிந்தனைத் திறன் உடையவர். இப்படி எண்ணற்ற பன்முகப் பண்பு படைத்த தந்தை ஜேம்ஸ் லொசேயின் காலம்தான் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தின் புகழ்மிகு காலம் எனலாம். காலத்தின் அறிகுறிகளைக் கண்டறிந்து, இரண்டாம் வத்திக்கான் சங்க வழிமுறைகள், பார்வைகளை மனத்தில் இருத்தி எல்லாத் தளத்திலும் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தை மறுசீரமைப்புச் செய்தார். எல்லாத் துறைகளுக்கும் புத்துயிர் தந்தார். இன்று இருக்கும் சுதந்திரம், கூட்டுப் பொறுப்புணர்வுக்கு அன்றே வித்திட்டவர் இவர். அருள்வாழ்வில் மாணவர்களைக் கட்டியெழுப்புகின்ற புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் என்றும் பெயர் சொல்லும் இன்றைய நிலையான கட்டடங்கள் அனைத்தையும் இவர் திறம்படக் கட்டி முடித்தார். இவ்வாறு தந்தை லொசே தம்முடைய நீண்ட நிழலைப் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தின் குறிப்பேட்டிலும் அவர் எழுப்பிய கட்டடங்களிலும் நமக்குச் சான்றாக விட்டுச் சென்றுள்ளார்.


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் பேராசிரியர்களாலும் மாணவர்களாலும் மொழிபெயர்க்கப்பட்டன. இது தமிழ்த் திருஅவை, தலைமுறைதோறும் நினைவுகூரத்தக்க தனிப்பெரும் பங்களிப்பும் வரலாற்றுச் சாதனையும் ஆகும்.

1971ஆம் ஆண்டு புனித பவுல் அருள்பணி பயிற்சியகம் தன் பொன்விழாவைச் சீரும், சிறப்பாகக் கொண்டாடியது. புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தின் தனிச்சிறப்பு என்னவெனில், இங்குப் பயிற்சி பெற்ற அருள்பணியாளர்களே பெரும்பாலும் தற்போதைய பேராசிரியர்களாக உள்ளனர்.

அருள்பணி. மரிய லூயிஸ் 1971ஆம் ஆண்டு சூன் 16ஆம் நாள் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தின் இல்லத் தலைவராகப் பொறுப்பேற்றார். மாணவர்களோடும் இல்லப் பணியாளர்களோடும் இனிமையாக உறவாடும் பண்பாளர் இவர். சிறந்த பேராசிரியராகவும் திகழ்ந்தார். மாணவர்களின் உருவாக்கத்தில் அதிக அக்கறை கொண்ட இவர் கல்வியின் தரத்தை உயர்த்தப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். இயேசு அவை அருள்பணியாளர்களே பேராசிரியர்களாக இப்பயிற்சியகத்தில் பணியாற்றிவந்த சூழலில், மறைமாவட்ட அருள்பணியாளர்கள் பேராசிரியர்களாகப் பணியாற்றுவது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்தார். எனவே, இந்தப் பயிற்சியகத்தில் சிறப்பாகப் பயின்ற மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் தம் சொந்த மறைமாவட்டங்களில் சிறிது காலம் பணியாற்றியபின் வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பயிற்சி அளித்து, அவர்கள் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றபின் மீண்டும் இப்பயிற்சியகத்தில் பேராசிரியராகப் பணியாற்றக்கூடிய தனிப் பெரும் வாய்ப்பினை உருவாக்கித் தந்தார். இவ்வாறாக, அருள்பணியாளர்கள் ஜோசப் ராஜ் (தஞ்சாவூர்), குருஸ் எரோணிமுஸ் (கோட்டார்) ஆகிய இருவரும் மறைமாவட்டங்களிலிருந்து முதன்முதலாக தேர்வு செய்யப்பட்டவர்கள் ஆவர். நம் அருள்பணிப் பயிற்சியகத்தின் பயணத்தில் இது அடுத்த மைல்கல் ஆகும்.

இவரைத் தொடர்ந்து ஏற்கெனவே பல ஆண்டுகள் இங்குப் பேராசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றிய **அருள்பணி. ஜோசப் 1974ஆம் ஆண்டு சூன் 5ஆம் நாள் இல்லத் தலைவராகப் பொறுப்பேற்றார்.** கடினமான பாடங்களைக்கூட மிகவும் எளிமையாகவும் மாணவர்கள் எல்லாரும் புரிந்துகொள்ளும் வகையிலும் சொல்லிக் கொடுப்பதில் இவர் கைதேர்ந்தவர். மாணவர்களுக்கான பாடத்திட்டங்களை வரையறுப்பதிலும், அதைக் கற்றுத் தருவதிலும் தனித்துவமிக்க ஒழுங்குமுறைகளை இவர் கடைப்பிடித்தார். பயிற்சியக வரலாற்றில் இன்றளவும் எல்லாராலும் பெரிதும் பாராட்டக்கூடிய சில பேராசிரியர்களுள் இவரும் ஒருவர். அருள்பணிப் பயிற்சியில் மாணவர்கள் சிறப்பாக உருவாக்கம் பெற உகந்த சூழலமைவு தேவை. எனவே இல்ல வளாகத்தைப் பசுமையாக உருமாற்றத் தேவையான முயற்சிகளை முன்னெடுத்தார். இயற்கையில் இறைவனைக் காணவும் அனுபவிக்கவும் ஏதுவாகப் பல வகைச் செடிகள், மரக் கன்றுகளை வருவித்து இவ்வளாகம் பச்சை பசேலென்று காட்சியளிக்க வழிகோலினார்.


கல்வாரிப் பீடம்


மாதா கெபி


இறையியல் மாணவர் வளாகம்


புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தின் தனிப்பெரும் அடையாளமாகச் சிறப்புற்றுத் திகழ்வது நூலகம். அதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்த பெருமை இவரையே சாரும். அதுமட்டுமல்லாமல் இசைத்துறை, ஊடகத்துறை, கால்நடைத்துறை, உணவுத்துறை எனப் பல்வேறு துறைகளைப் பிரித்து, பொறுப்புகளைப் பிரித்துக்கொடுத்து, பணிப்பகிர்வினைச் செயல்படுத்தி ஒவ்வொரு துறையும் சிறப்பாக வளரவும் மிளிரவும் காரணியானவர் இவரே. அருள்பணிப் பயிற்சி மாணவர்களைத் தந்தைக்குரிய கண்டிப்புடனும் அன்னைக்குரிய அன்புடனும் வழிநடத்திய இவரின் காலத்தில்தான், நமது புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் 1975ஆம் ஆண்டு டிசம்பர் 4 அன்று உரோமை, உர்பன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இறையியல் இளங்கலைப் பட்டம் தரப்பட்டது.

இக்காலகட்டத்தில், இன்னும் பல மறைமாவட்ட அருள்பணியாளர்கள் இப்பயிற்சியகத்தில் பேராசிரியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். அருள்பணியாளர்கள் ச.தே. செல்வராசு (தூத்துக்குடி), தே. அல்போன்சு (கோட்டார்), பெலிக்ஸ் வில்பிரட் (குழித்துறை), பவுல் லியோன் (கோட்டாறு), செங்கோல் (மதுரை), குழந்தைசாமி (கோட்டார்), அந்தோணி பாப்புசாமி (மதுரை இன்றைய மதுரை உயர்மறைமாவட்டப் பேராயர்), அந்தோணிசாமி (தஞ்சாவூர் – தஞ்சை

மறைமாவட்டத்தின் மேனாள் ஆயர், மரிய ராஜ் (மதுரை), சூசைமாணிக்கம் (மதுரை – சிவகங்கை மறைமாவட்ட மேனாள் ஆயர்) ஆகியோர் இங்கு பேராசிரியர்களாகப் பணியாற்றி தமிழ் நிலத்தின் மண், மக்கள் சார்ந்து தனித்துவமிக்க முறையில் சிறப்பாக உருவாக்கப் பயிற்சியளித்தனர்.

இவரைத் தொடர்ந்து, இப்பயிற்சியகத்தில் **விவிலியப் பேராசிரியராகத் திகழ்ந்த அருள்பணி. ஆர்.சே. இராசா 1977ஆம் ஆண்டு இல்லத் தலைவராகப் பொறுப்பேற்றார்.** திருவிவிலியத்தைத் திறம்பட வகுப்பில் கற்றக்கொடுத்த இவர், விவிலியம் சார்ந்த வரலாற்று இடங்கள், தரவுகள், படைப்புகள், தகவல்கள் முதலியவற்றை எல்லாரும் அறிந்துகொள்ளும் வண்ணம், விவிலிய அருங்காட்சியகத்தைத் தோற்றுவித்துப் பவுல் அருள்பணிப் பயிற்சியகத்துக்கு மேலும் பெருமை சேர்த்தார். அறிவுசார் உருவாக்கத்திற்கு அதிக அழுத்தம் தந்து மாணவர்களை விவிலியத்தின் ஒளியில் வளர்த்தெடுத்த இவரே இப்பயிற்சியகத்தின் இயேசு அவையைச் சர்ந்த இறுதி இல்லத் தலைவராவார்.

திருப்பாடல்கள் (சங்கீதம்) நூலில் பாண்டித்துவம் பெற்று அதனை மிகவும் நயம்பட சிறப்புறக் கற்பித்ததால் ‘‘சங்கீத ராசா’’ என அனைவராலும் அடையாளப்படுத்தப்பட்டு அழைக்கப்பட்டார். மேலும், திருத்தந்தையின் விவிலியப் பணிக்குழுவிற்கு (Pontifical Biblical Commission) நியமனம் செய்யப்பட முதல் இந்தியர் என்ற சிறப்பு இவரையே சாரும் (1990). 1977ஆம் ஆண்டு ஐம்பது ஆண்டுகள் மேலாக எந்த ஆரவாரமுமின்றி காளை வண்டி ஓட்டி பெருந்தொண்டாற்றி வந்த திரு. செபாஸ்டியன் பணிஓய்வு பெற்றார். மேலும், இருபத்து ஐந்து ஆண்டுகளாக தலைமை சமையல் பணியாளராக உணவோடு அன்பையும் சேர்த்து சமைத்து பரிமாறிய திரு. துரைசாமி அவர்களும் பணி ஓய்வு பெற்றார். இவர்களின் அர்ப்பணமிக்க பல்லாண்டுத் தொண்டு என்றென்றும் போற்றுதலுக்குரியது.



கல்லூரியின் வாகனம்



இல்லத்தின் முன்புறத் தோற்றம்



புதிய இல்லக் கோவில்

1978ஆம் ஆண்டு மார்ச் 29 இப்பயிற்சியகத்தின் பயண வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய பொன்னாள்! இப்பயிற்சியகம் அடுத்த கட்ட முன் நகர்வைச் சந்தித்த நாள்! ஆம், 57 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி எண்ணிறைந்த அருள்பணியாளர்களை இறையாட்சிப் பணிக்காக வளர்த்தெடுத்த இயேசு அவையினர் இப்பயிற்சியகத்தின் முழுப்பொறுப்பையும் மதுரை மறைமாநிலத்திற்கு உட்பட்ட ஆயர்கள் குழுவிடம் ஒப்படைத்தனர்.

இப்பயிற்சியகத்தின் தலைவராக கோட்டாறு மறைமாவட்ட அருள்பணி. குழந்தைசாமி 1978ஆம் ஆண்டு, சூன் 5ஆம் நாள் பொறுப்பேற்றார். இப்பொறுப்பு சவால் நிறைந்ததாக இருந்தாலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புமிக்க பெரும்பணியை உளமார உணர்ந்த இவர் தம் சிந்தனை, சொல், செயல்பாடுகள் வழியாக இப்பயிற்சியகத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சினார். எல்லாத் துறைகளிலும் புதிய அணுகுமுறைகள், வழிமுறைகள், தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தினார். எல்லாரும் எப்போதும் அணுகும் வண்ணம் எளிமையாகவும் எல்லாரும் வியக்கும் வகையில் சிறந்த மாதிரியாகவும் வாழ்ந்து பேராசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் என யாவரையும் ஒருங்கிணைத்துப் பயிற்சியகத்தைச் சரியான திசையில் வழிநடத்தினார். இவரது தனிப்பட்ட அருள்வாழ்வு எல்லாரையும் ஈர்த்தது. இவரின் காலத்தில் அதிக அளவில் மறைமாவட்ட அருள்பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பேராசிரியர்களாகப் பணியாற்றுவதற்கான பயிற்சி பெற வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆண்டுக்கூட்டம் 1982ஆம் ஆண்டு சூலை 5 முதல் 14 வரை இப்பயிற்சியகத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

1984ஆம் ஆண்டு சூலை 13இல் தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி. லாம்பர்ட் மிராண்டா இல்லத் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் பயிற்சியகத்தின் முகத்தை மாற்றவும் காலத்திற்கேற்ப எல்லாத் துறைகளையும் புதுப்பிக்கவும் ஆர்வம் காட்டினார். தாய்மொழியான தமிழில் இறையியல் கற்பிப்பிப்பதை அறிமுகப்படுத்தினார். இவருடைய காலத்தில் மேய்ப்புப்பணி இறையியல் திருத்தொண்டர்களுக்கான தனிப் பாடமாக்கப்பட்டது. மேலும் அவர்கள் தத்தம் மறைமாவட்டங்களில் ஆறு மாத காலக் களப்பணி அனுபவம் பெறும் வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டது.

இக்காலத்தில்தான் மெய்யியல் படிப்பு, கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியில் பாடத்திட்டமாக இடம்பெற்றது. மெய்யியலில் இளங்கலைப் பட்டப்படிப்பு மேற்கொள்ள மாணவர்கள் 1984ஆம் ஆண்டு கருமாத்தூருக்கு அனுப்பப்பட்டனர்.

சிவகங்கை மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும் ஏற்கெனவே இங்கு உதவி இல்லத் தலைவராக இருந்தவருமான **அருள்பணி. இராஜசேகரன் 1987ஆம் ஆண்டு, சூன் ஒன்று இந்தப் பயிற்சியகத்தின் இல்லத் தலைவரானார்.** மந்தையின் மணமறிந்த நல்ல மேய்ப்பனாக, மக்களோடு மக்களாக தம் மறைமாவட்டத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டிருந்த இவர். மாணவர்களின் உருவாக்கப்பயிற்சியில் மேய்ப்புப்பணிக்கு அதிக முதன்மை தந்தார். இவர் எளிமையானவர்: ஆனால் எல்லாவற்றையும் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்துபவர். பயிற்சியகத்தின் பொதுநலனையும் முழு வளர்ச்சியையும் தம் இலக்காகக் கொண்டு, எல்லாத் துறைகளையும் முறைப்படுத்தி உருவாக்கப் பயிற்சியைச் செம்மைப்படுத்தினார். குறிப்பாக, இறையியல் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக முதலாமாண்டு மாணவர்கள் ஒரு கிராமத்தில் தங்கி, சமூகப்பகுப்பாய்வுப் பயிற்சி பெற்று, சமூகத்தையும் அதன் இயக்கத்தையும் ஆழமாகப் படித்தனர். மூன்றாமாண்டு மாணவர்கள் மேய்ப்புப்பணிக் களப்பயிற்சிக்காகப் பங்குகளுக்குச் சென்று வந்தனர். வருங்காலத்தில் இப்பயிற்சியகம் வெளிநாடுகளை சார்ந்து இருக்காமல் தன் காலில் நிற்கும் தன்னிறைவு அடையவும் பெரும் கனவோடு கருமண்டபத்தில் இருந்த நிலங்களில் பெரும் பகுதியை விற்று அத்தொகையில் கூட்டுத் தொகுப்பங்காடிகள் கட்டும் பணிகளை முன்னெடுத்தார். இயல்பிலேயே கனிவானவராக இருந்தாலும், தேவைப்படும் சூழலில் அக்கறையோடு கண்டிப்பது இவரது பாணி.



மெய்யியல் மாணவர் கோவில்



நூலகம்



உணவகம்

இவரைத் தொடர்ந்து தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த **அருள்பணி. பீட்டர் பெர்னாண்டோ 1990இல் சூலை எட்டாம் நாளில் இல்லத்தலைவராகப் பொறுப்பேற்றார்.** உளவியலில் பாண்டித்துவம் பெற்ற இவர் மாணவர்களின் முழு உருவாக்கத்தில் கவனம் செலுத்த, மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் பேராசிரியர் தந்தையரை வழிகாட்டிகளாக நியமித்தார். அருள்சகோதரர்கள் மட்டுமல்லாமல் அருள்சகோதரிகளும் ஒருசேர இறையியல் கற்கத் தொடங்கினார்கள். வரவேற்பகம் மாற்றியமைக்கப்பட்டுப் பயிற்சியகம் புதுத் தோற்றம் பெற்றது. இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இறையனுபவத்தில் ஆழப்படவும் தம்மைத் தாமே உருமாற்றிக்கொள்ளவும் ஏதுவாக ஒரு மாத காலத் தியானம் செய்ய வாய்ப்பு தரப்பட்டது. இப்பயிற்சியகத்தின் பயணத்தில் இதுகாறும் பல்வேறு வழிகளில் பணியாற்றிய இயேசு அவைச் சகோதரர்கள் இப்பயிற்சியகப் பொறுப்புகளிலிருந்து நிரந்தரமாக விலக்கிக்கொள்ளப் பெற்றார்கள்.

கோட்டாறு மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும் காலத்தால் அழியாத பல இறைநெறிப் பாடல்களைத் தமிழ்க் கிறித்தவ உலகிற்குத் தந்தவருமான **அருள்பணி. ஜான் குழந்தை 1993ஆம் ஆண்டு சூன் 11இல் இப்பயிற்சியகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.** இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் போதனைகளுக்கு ஏற்ப மண்சார்ந்த இறையியலுக்கு அதிக அழுத்தம் தரப்பட்டது. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இறையியல் எனத் தாயகமாக்கும் இறையியல் இம்மண்சார்ந்த உணர்வு கொண்ட அருள்பணியாளர்களைப் பயிற்சியில் உருவாக்கியது. மேலும், அருள்சகோதரிகள் இங்கேயே தங்கி இறையியல் கற்கும் நடைமுறை வந்தது. முத்தாய்ப்பாக, இறையியல் முதுகலைப் படிப்பு 1995இல் தொடங்கப்பட்டது.

இதுவரை எல்லா அருள்பணிப் பயிற்சி மாணவர்களும் மறைக்கல்விப் பணிக்காக மட்டுமே சென்று வந்தனர். அதனை மாற்றி வார இறுதிக் களப்பணிக்கென இரண்டாம், மூன்றாம் ஆண்டுச் சகோதரர்கள் சனிக்கிழமைதோறும் மாலையில் கிராமங்களுக்குச் சென்று மக்களோடு தங்கி அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துப் பணிசெய்தபின் ஞாயிறு மாலை பயிற்சியகம் திரும்பும் நடைமுறை தொடங்கப்பட்டது. இந்தக் களப்பணிப் பயிற்சி மண்ணையும் மக்களையும் நேசித்து அவர்களில் ஒருவராகப் பணிசெய்யும் உணர்வு கொண்ட நூற்றுக்கணக்கான அருள்பணியாளர்களைத் தமிழ்த் திருஅவைக்குத் தந்துள்ளது என்றால் மிகையாகாது.

5 ஜனவரி 1994, நூலகப் பொறுப்பாளர் திரு. ஆரோக்கியசாமி அவர்கள் இவ்வுலகப் பயணத்தை நிறைவு செய்தார். இறைமக்கள் அன்றாடம் அருள்வாக்கினை வாசித்து தியானிக்கவும் அதனை வாழ்வாக்கவும் ஏதுவாக காலத்தின் அறிகுறிகளின் அடிப்படையிலான கருத்தாழமிக்க அன்றாட அருள்வாக்குச் சிந்தனைகளை தாங்கிவரும் காலாண்டு இதழ், '*அருவி*' வெளிவந்து தமிழ் மக்களின் சமய-சமூக தாகம் தணிக்கத் தொடங்கியது என்றால் மிகையாகாது.

தலித் கிறித்தவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்க, திருச்சி புனித மரியன்னை பெருங்கோயிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நடந்த தலித் கிறித்தவர் பேரணியில் இக்கல்லூரியின் பேராசிரியர்களும் மாணவர்களும் சமூக நீதிக்கான வேட்கையோடு பங்கெடுத்து, சமூகம்-அரசியலில் விளிம்புநிலை மக்களுக்கான உரிமைக்குரலில் தமது குரலையும் இணைத்துக் கொண்டார்கள்.

இப்பயிற்சியகத்தின் 75ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் 25 சனவரி 1996ஆம் ஆண்டு மிகவும் பொருளுள்ள முறையில் கொண்டாடப்பட்டது. அதன் பொருட்டு, சமகால சிக்கல்கள், மாற்றங்களைக் கருத்தில் கொண்டு காலம், சூழமைவுகளுக்கு ஏற்ப, காலத்தின் அருங்குறிகளுக்கு பதிலிறுப்பை வெளிப்படுத்தும் வகையில் விவிலிய இறையியல் கட்டுரைகளைத் தாங்கும் ஆங்கில இதழ் '*வைகறை*' வெளிவரத் தொடங்கியது. கருத்தியலில் முதிர்ச்சியும் களப்பணி அனுபவமிக்க இறையியல் பேராசிரியர்கள், மாணவர்களின் எழுத்துகளில் தரமான முறையில் இவ்விதழ் இன்றளவும் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது.



பவளவிழாக் கொண்டாட்டம்


பவளவிழாத் திருப்பலி


கலந்தாய்வரங்கம்

ஐம்பது ஆண்டுகளாக (1994-1996) சலிப்பின்றி அயராது சலவைப் பணியாளராக பெருந்தொண்டாற்றி வந்தவர் திரு. தேவசகாயம். மிகுந்த அர்ப்பணம், நேர்மை, காலந்தவறாமையுடன் இனிமையாக பணியாற்றிய இவர், 1996ஆம் ஆண்டு பணிஓய்வு பெற்றார்.

பொருளாளர் அருள்பணியாளராக 1991 முதல் 1997 வரை சிறப்பாக பணியாற்ய அருள்பணி. எஸ். ஜெயபாலன் (பாளையங்கோட்டை), இப்பயிற்சியகம் தன்னிறைவடையும் நோக்கோடு தொடங்கப்பட்டு *தென்றல், வைகறை, அருவி, பவளம்* என அழகுத்தமிழில் பெயரிடப்பட்ட தொகுப்பங்காடிகள் (Complexes) கட்டும் பணியை நிறைவு செய்தார்.

திருவிவிலியத்தில் பாண்டித்துவம் பெற்றவரும் தமிழத் திருஅவை அறிந்த ஆற்றல்மிக்க எழுத்தாளரும் சிந்தனை, சொல், செயலில் சிறந்தவருமான மதுரை உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த **அருள்பணி. செ. சூசைமாணிக்கம் இப்பயிற்சியகத்தின் இல்லத் தலைவராக 1999ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.** கனிவான புன்னகையோடும் கரிசனை நிறைந்த சொற்களோடும் மாணவர்களுடன் இணக்கமாகப் பழகுவதில் இவர் வல்லவர். மாணவர்கள் அறிவுத்தேடலிலும் அருள்வாழ்விலும் ஆழப்பட பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தார். இவரின் காலத்தில் தமிழ்நாடு விவிலிய இறையியலார் கூட்டம் 28.10.1999 அன்றும் 30.11.2000 அன்றும் இப்பயிற்சியகத்தில் நடைபெற்றது. மேலும் இல்லப் பணியாளர்களுக்கான குடியிருப்பு தந்தை ஒய். இருதயராஜ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆண்டுக் கூட்டம் மீண்டும் இப்பயிற்சியகத்தில் வைத்து நடைபெற்றது இவரின் பொறுப்புக் காலத்தில் முத்தாய்ப்பாக அமைந்தது.

மேதகு அந்தோணி பாப்புசாமி, 10 நவம்பர் 2003 அன்று திருச்சியிலிருந்து உருவான திண்டுக்கல் மறைமாவட்டத்தின் முதல் ஆயரானார். பவுல் கல்லூரியின் ஆட்சி மன்றத்தில் இணைந்தார்.

தமிழ் இறையியலின் முன்னோடிகளில் ஒருவரும் புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பு இறையியல் பேராசிரியராகவும் சிறப்புறத் திகழ்ந்த கோட்டாறு மறைமாவட்டத்தைச் சேர்ந்த **அருள்பணி. அல்போன்சு அவர்கள் இந்த இல்லத்தின் தலைவராக 2004ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார்.** விவிலியம், திருஅவையின் படிப்பினைகள், திருஅவை வரலாறு, அறநெறி இறையியல், போன்றவற்றை கற்றுக்கொடுப்பதோடு நின்றுவிடாமல் இன்றைய காலம், சூழமைவுக்கு ஏற்ப இறையியலாக்கம் செய்து அதற்கு ஏற்ப பதிலிறுப்பு கொடுப்பது இந்த குருத்துவக் கல்லூரியின் தனிப்பெரும் சிறப்புகளில் ஒன்றாகும். அதன்படி, 2005ஆம் ஆண்டு 'நடப்பு நிகழ்வுகளின் இறையியலாக்கம்', 'இறையியலாக்க ஒருங்கிணைப்பு' அறிமுகப்படுத்தப்பட்டு பாடத்திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

2005ஆம் ஆண்டு உலகையே உறைய வைத்தது ஆழிப்பேரலை. அதன் கோரதாண்டவம் முடிந்ததும், பேரிடர் மீட்புப் பணிகளில் ஈடுபட 29 அருள்பணி மாணவர்கள் மனமுவந்து பாண்டிச்சேரி மறைமாவட்டத்திலுள்ள திருமலைராயன் பட்டினம் என்னும் பங்கில் முழுமுச்சுடன் ஈடுபட்டனர். அருள்பணி. கு. எரோணிமுசு அவர்களின் முயற்சியில் அருள்பணியாளர்கள் வில்லியம் லூர்துராசு, ஜீவராஜ், ரெய்மண்ட் ஆகியோரின் வழிகாட்டுதலில் முன்னெடுக்கப்பட்ட இம் மீட்புப் பணிகள் அருள்பணி மாணவர்களுக்கு என்றென்றும் மறக்க முடியாத அனுபவங்களாகவும் மாற்றுப் பணிகளில் ஈடுபாட்டினையும் வளர்த்தன.

13 ஆகஸ்ட் 2005, திருஅவைச் சட்டத்தொகுப்பு தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. அருள்பணியாளர்கள் ஒய். இருதயராஜ், அ. இராயப்பன், அ. அழகுச் செல்வன், ஆண்ட்ரு டி ரோஸ் ஆகியோர் பதிப்பாசிரியர்களாகப் பங்காற்றி தமிழ்க் கத்தோலிக்கத் திருஅவைக்குப் பெரும் பங்காற்றினர். காலத்தின் போக்கினையும், தேவைகளையும் கருத்தில்கொண்டு, 2006ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இணையதள வசதி ஏற்படுத்தித் தரப்பட்டது.

அருள்பணி மாணவர்கள் வார இறுதி களப்பணிக்குச் செல்லும் கிராமங்களில் உள்ள மாணவர்கள், இளையோர் தங்கள் திறமைகளை வெளிக்காட்டவும் மண்ணின் கலைகளைக் கற்றுக்கொள்ளவும் ஏதுவாக 'பண்பாட்டு நாள்' அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறப்பான விவிலியக் கண்காட்சியினை (ஆகஸ்ட் 25, 26, 27 – 2000) திருச்சிக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து 32,000 பேர் கண்டுகளித்தது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு ஆகும். புனித பவுலின் ஆண்டைப் பொருள்தரும் வழியில் கொண்டாடும் பொருட்டு இறைமக்களுக்கு பவுலடியாரின் வகுப்புகள் நடத்தப்பட்டன; நூல்கள், காணொலிகள், வன்தட்டுகள் வெளியிடப்பட்டன; ஆய்வரங்கம் நடந்தது; விவிலியத்தின் அடிப்படையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், சிறப்புமிக்க ஒலி-ஒளி காட்சி முன்னெடுக்கப்பட்டு மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

23 சூலை 2009 இக்குருத்துவக் கல்லூரி பெங்களூரு, புனித பேதுரு குருத்துவக் கல்லூரியின் நிர்வாக ஒருங்கிணைப்போடு செயல்படத் தொடங்கியது.

சிவகங்கை மறைமாவட்டத்தைச் சேர்ந்த **அருள்பணி. பி.எஸ். செபாஸ்டின் இப்பயிற்சியகத்தின் இல்லத்தலைவராக 2010ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.** மாணவர்கள் அருள்வாழ்விலும் அறநெறி வாழ்விலும் ஆழமாக வேரூன்றி உருவாக வேண்டும்; திருஅவைக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்ற கொள்கைப்பிடிப்புடன் இவர் இப்பயிற்சியகத்தை வழிநடத்தினார். இவரின் காலத்தில் மேதகு பேராயர் அந்தோணி பாப்புசாமி தலைமையிலான வழிநடத்தும் குழு பல்நோக்கு மண்டபம் ஒன்றினை கருமண்டபத்தில் கட்டியெழுப்ப முடிவெடுத்தது. இத்திட்டத்தை நிறைவேற்றப் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி. எம்.எஸ். அந்தோணிசாமி நியமிக்கப்பட்டார்.

இப்பயிற்சியகத்தின் தலைவர் அருள்பணி. செபாஸ்டின், தூத்துக்குடி ஆயர் மேதகு இவான் அம்புரோஸ் ஆகியோர் இணைந்து இத்திட்டத்தை நிறைவேற்ற நிதி திரட்டினர். அருள்பணி. செபாஸ்டின் அவர்களின் பொறுப்புக்காலத்தில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் நிகழ்ந்தன. அருள்சகோதரர், சகோதரிகளின் உருவாக்க இல்லங்களில், அன்றாடக் காலஅட்டவணையை முறையாகக் கடைப்பிடிக்க மணி அடிப்பது வழக்கம். அதனால்தான் அருள்பணியாளர்களையும், துறவியரையும் ''மணியடிச்சா சாப்பாடு'' என மற்றவர்கள் நகைச்சுவையாகக் கேலி செய்வார்கள். அருள்சகோதரர்கள் காலத்தின் அருமையையும் தங்களுக்கான கடமைகளையும் உளமார உணர்ந்து, தங்களையே உருவாக்கிக்கொள்வதற்கு ஏதுவாக மணியடிக்கும் வழக்கத்தைத் தந்தை செபாஸ்டின் இப்பயிற்சியகத்திலிருந்து முற்றிலும் நீக்கினார். மேலும் மாதத்தில் ஒரு நாள் பயிற்சியகத்தின் கால அட்டவணையை மாணவர்கள் பின்பற்றாமல் தங்களுக்கென ஒரு கால அட்டவணையைத் தனிப்பட்ட முறையில் உருவாக்கி, அதனைச் சுதந்திரத்துடன் கடைப்பிடிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார். இவ்விரு வாய்ப்புகளும் மாணவர்களின் தன்னுருவாக்கத்தில் பெருமளவுக்குக் கைகொடுக்கின்றன என்றால் மிகையாகாது!

மதுரை விரகனூரிலிருந்த அருள்வாழ்வு உளவியல் உருவாக்கப் பயிற்சி மையம் புனித பவுல் கல்லூரிக்கு மாற்றப்பட்டு, பிறகு கருமாத்தூர் கிறிஸ்து இல்லத்திற்கு இடம் மாறியதால், அங்கிருந்த மெய்யியல் துறை மீண்டும் இப்பயிற்சியகத்தில் ஓர் அங்கமானது. 2015ஆம் ஆண்டு முதல் மெய்யியல், இறையியல் கல்வியும், உருவாக்கப் பயிற்சியும் ஒருசேர இங்கு வழங்கப்படுகின்றன. இது இப்பயிற்சியகத்தின் நூறாண்டுக் காலப் பயணத்தில் அடுத்த மைல்கல் ஆகும்.

தமிழ் இறையியல் மன்றத்திற்கு வெள்ளிவிழா 31.08.2011 – 01.09.2011 வரை இப்பயிற்சியகத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. 26 சூன் 2014 மேதகு பேராயர் அந்தோணி பாப்புசாமி இப்பயிற்சியகத்தின் புதிய ஆட்சி மன்றக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றார். 22, பெப்ரவரி 2015 கோட்டாறு மறைமாவட்டத்திலிருந்து உருவான குழித்துறை மறைமாவட்டத்துக்கு முதல் ஆயராக மேதகு ஜெரோம்தாஸ் (சலேசியன் அவை) அவர்கள் பொறுப்பேற்று, இப்பயிற்சியகத்தின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களில் ஒருவரானார்.

திருவழிபாட்டில் தெளிந்து தேர்ந்த பேராசிரியரும் திண்டிவனம் முப்பணி நடுநிலையத்தில் பணியாற்றியவரும் திருச்சி மறைமாவட்டத்தைச் சேர்ந்தவருமான **அருள்பணி. ஆரோக்கியராஜ் 2016ஆம் ஆண்டு இப்பயிற்சியகத்தின் இல்லத் தலைவராகப் பொறுப்பேற்றார்.** இவர் பழகுவதற்கு இனியவர். திருவழிபாடுசார் வகுப்புகள் நடத்துவதில் பழுத்த அனுபவம் கொண்டவர். பேராசிரியர்களோடும் மாணவர்களோடும் இயல்பாக உரையாடி, இதயத்திலிருந்து உறவாடி, உரிமையோடு மாணவர்களிடத்தில் காணும் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சுதந்திரமாக உருவாக்கம் பெறும் சூழலை அருள்சகோதரர்களுக்கு உருவாக்கித் தந்தார். இவரின் காலத்தில் 2017ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் அன்று எஸ்.பி.எஸ். மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. உலகையே திரும்பிப் பார்க்கவைத்த ஏறுதழுவுதலுக்கான போராட்டத்தில் மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டு தம் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்நாடுமீது கொண்டிருந்த அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தினர். மேலும், திருத்தந்தையின் வழிகாட்டுதலுக்கிணங்க 2018–2019 மூன்றாண்டுகள் இறையியல் கல்வியும், ஓராண்டு முழுவதும் மேய்ப்புப்பணிப் பயிற்சியும் வழங்கும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கான செயல்திட்டங்கள் தீட்டப்பட்டு தயாரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டன.

தமிழ்த் திருஅவை வரலாற்றில் முதன் முறையாக மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சாதனை என பெருமை பாராட்ட தகுதி படைத்த ஒரு நகர்வு இப்பயிற்சியகத்தில் முதன்முறையாக முன்னெடுக்கப்பட்டது. அதன் பயனாக, நீண்ட நெடிய தொன்மை கொண்ட கத்தோலிக்கத் திருஅவையின் ஈராயிரமாண்டு வரலாற்றை முழுவதுமாக தமிழில் வாசித்து அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை என்ற ஏக்கமும் ஏமாற்றமும் முடிவுக்கு வந்தன. ஆம்! இலத்தின், ஆங்கிலம், பிரெஞ்சு என உலகப் பொதுமொழிகளில் இருப்பதைப் போன்று உலக செம்மொழியாம் தமிழிலும் வெளிவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பேராசிரியர்கள் அருள்பணியாளர்கள் வில்லியம் லூர்துராசு, அல்போன்சு, சூ. சந்தியாகு ராசா ஆகியோரைத் தொகுப்பு ஆசிரியர்களாகக் கொண்டு திருஅவை வரலாற்றிலும் இறையியலிலும் பாண்டித்துவம் பெற்ற பல பேராசிரிய அருள்பணியாளர்களால் பாங்குற எழுதப்பட்டு தரமான எட்டு தொகுதிகளாக வெளிவந்தது. இது அருள்பணி. வில்லியம் லூர்துராசை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட தேடல் வெளியீடுகளால், 9 சூலை 2017 அன்று வேளாங்கண்ணியில் வைத்து நடைபெற்ற தமிழக ஆயர் பேரவை (TNBC) ஆண்டுக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.



வகுப்பறை



இறையியல் கல்லூரிகளின் ஒருங்கிணைவுக் கூட்டம்



நூற்றாண்டு விழா தொடக்கத் திருப்பலி

14, சூன் 2018, தஞ்சை மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு தேவதாஸ் அம்புரோஸ் அவர்கள் திருச்சி மறைமாவட்டத்தின் திருத்தூதுசார் நிர்வாகியானார்; 24, பெப்ரவரி 2019, இப்பயிற்சியகத்தின் மேனாள் பேராசிரியர் ஸ்டீபன் அந்தோனி தூத்துக்குடி மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்று இப்பயிற்சியகத்தின் ஆட்சிமன்றக் குழுவின் உறுப்பினர்களாக இருவரும் இணைந்தனர்.

திருஅவைச் சட்டத்தில் வல்லுநரும் தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்தவருமான **அருள்பணி. ஆண்ட்ரூ டி ரோஸ் 2019ஆம் ஆண்டு இவ்வில்லத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்**. மாணவர்களின் முழு உருவாக்கத்தில் அதிக அக்கறை கொண்ட இவர், அருள்வாழ்விற்கு அதிக அழுத்தம் தருகிறார். மாணவர்களோடு உரையாடும்போதெல்லாம் நகைச்சுவை கலந்து சிரிக்க வைப்பதிலும் ஆழ்ந்து சிந்திக்க வைப்பதிலும் கைதேர்ந்தவர். புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம் தன்னிறைவு அடையும் நோக்கோடு கட்டப்பட்ட எஸ்.பி.எஸ். மகால் 2020ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் புனிதப்படுத்தப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது.

இப்பயிற்சியகத்தின் நூற்றாண்டு தொடக்க விழாத் திருப்பலிக்கு மேதகு மதுரைப் பேராயர் தலைமைதாங்க, பாளையங்கோட்டை ஆயர் அந்தோணிசாமி ''இதயத்தில் இயேசுவாய்... பணியில் பவுலாய்'' என்னும் மையச்சிந்தனை பற்றி மறையுரை ஆற்ற, மதுரை மறைமாநிலத்தின் மற்ற ஆயர்கள் கூட்டுத் திருப்பலியில் பங்கேற்று மன்றாடினார்கள்.

எதிர்பாராத வகையில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக 2020-2021ஆம் கல்வியாண்டு தடங்கலைச் சந்தித்ததால் பெரும் எதிர்பார்ப்புகளோடு இருந்த நூற்றாண்டு விழாவும் தள்ளிப்போனது.

ஆட்சிமன்றக் குழுவிலுள்ள ஆயர்களின் வழிகாட்டுதலின்படி 01.09.2020 முதல் 20.12.2020 வரை கொரோனா பெருந்தொற்று காரணியால் இணையவழி வகுப்புகள், தேர்வுகள் நடந்தன. பின் சனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை நேரடி வகுப்புகளும் தேர்வுகளும் நடைபெற்றன.

கொரோனா 2வது அலையின் காரணமாக 2021-2022 கல்வியாண்டிற்கான வகுப்புகள் சூன் 2021 தொடங்கி ஆகஸ்ட் 2021 வரை இணையவழி வகுப்புகளாக அமைந்தன. பின் 29 ஆகஸ்ட் 2021 மீண்டும் பயிற்சியகம் திறக்கப்பட்டது. இப்பயிற்சியகத்தின் வரலாற்றில் முதன்முறையாக அருள்பணிப் பயிற்சி மாணவர்கள் தங்களுக்கு சொந்தமான கைப்பேசி பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டு முறையாகவும் நெறியாகவும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

இக் கொரோனாப் பேரிடர் காலத்தில் பழுத்த அனுபவமிக்க தொகுப்பு இறையியலார் அருள்பணி. தேவராஜ், அறநெறி இறையியலார் அருள்பணி. ஜீவராஜ், விவிலியத்தில் பாண்டித்துவம் பெற்ற தன்னிகரில்லா பேராசிரியரும் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இப்பயிற்சியகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அருள்பணி. குருஸ் எரோணிமுசு (கோட்டார்), இப்பயிற்சியகத்தின் இறையியல் துறையின் அருள்வாழ்வு வழிகாட்டி அருள்பணி. ஜெகநாதன் (மதுரை) ஆகியோர் கொரோனா தொற்றுக்குப் பலியானது, தமிழ்த் திருஅவைக்கும் புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பானது!

தொடரும் பயணம்...

புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகத்தை நிறுவி, நல்ல அடித்தளமிட்டுக் கட்டியெழுப்பி, புனித பவுலின் பாதையில் இறையாட்சிக் கனவோடு இத்தனை ஆண்டுகளாக வழிநடத்திவரும் ஆயர் பெருமக்கள், இயேசு அவை அருள்பணியாளர்கள், மறைமாவட்ட அருள்பணியாளர்கள், பொருளுதவியாலும் இறைவேண்டல்களாலும் தாங்கிப்பிடிக்கும் நல்லுள்ளங்கள், உறுதுணையாக இருக்கும் இல்லப் பணியாளர்கள், இறைமக்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்களே! புனித பவுலின் பாதையில் காலத்தின் அறிகுறிகளை அரவணைத்து, நற்செய்தியின் ஒளியில் பன்மடங்கு பயன்தரும் இப்பயிற்சியகத்தின் பயணம் புத்தெழுச்சியுடனும் புது எண்ணங்களுடனும் கனவுகளுடனும் தொடரட்டும்... மண்ணின் மணமறிந்து, மக்களை முதன்மைப்படுத்தி, மரபுகளைப் போற்றி, தாயகமாக்கலைத் தன்வயப்படுத்தி, தமிழ்கூறும் நல்லுலகிற்கும் தாயாம் திருஅவைக்கும் பணியாற்றும் இலட்சியமிக்க இறையாட்சியின் பணியாளர்களை வளர்த்தெடுக்கட்டும்!

“வாழ்க! இப்பயிற்சியகம் – எம் தாயகம், வளர்க! தமிழ் இறையியல்.”

தொகுப்பாளர்கள்



சகோ. **ஜே. ஜான் ஜிஜோ,**



சகோ. **சி. மிக்கேல் ராஜ்**



நூற்றாண்டு விழாக் காணும் புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் காலச் சுவடுகள்

1921 புனித பவுல் குருத்துவக் கல்லூரி திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த மேதகு. அகஸ்டின் பைசாந்தியர் சே.ச. அவர்களால் நிறுவப்பட்டு (08.06.2021) திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, மதுரை, பாளையங்கோட்டை, சிவகங்கை, திண்டுக்கல், வட தமிழகத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய இயேசு அவையின் மதுரை மறைப்பணித் தளத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அருள்பணி. கிரான்ஞ் குருத்துவக் கல்லூரியின் தலைவரானார்.

1922 திருஅவையின் சட்டமுறையிலான அனுமதியைப் புனித பவுல் குருத்துவக் கல்லூரி பெற்றது. அருள்பணி. வரின் குருத்துவக் கல்லூரியின் தலைவரானார்.

1925 பேராசிரியர்களுக்கான புதிய இல்லம் புனிதப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

1927 புதிய இறையியல் வளாகம் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

1930 ஞான இருக்கை அரங்கமும் (Sedes Sapientiae Hall) திருத்தொண்டர்களுக்கான தனி அறைகளுடன் கூடிய திருத்தொண்டர்கள் வளாகமும் புனிதப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

1938 அன்றைய திருச்சிராப்பள்ளி (1886இல் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது), தூத்துக்குடி (1923இல் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது), மதுரை (1938இல் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது) மறைமாவட்டங்களுக்கான குருத்துவக் கல்லூரியாக (29.03.1938) வளர்ச்சிபெற்றது.

1940 இயேசு அவையின் 400வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது.

1942 தென்னிந்தியக் கத்தோலிக்கப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பு விழாவில் (02-03.01.1943) அருள்பணி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

1946 குருத்துவக் கல்லூரியின் வெள்ளிவிழா (23-25.01.1946) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தென்னிந்தியக் கத்தோலிக்க மாநாட்டில் அருள்பணி மாணவர்கள் (12-14.01.1946) பங்கேற்றனர்.

1947 புனித அருளானந்தர் புனிதராக உயர்த்தப்பட்டதை முன்னிட்டுக் கூட்டுத் திருப்பலி (22.06.1947) நிறைவேற்றப்பட்டது.

1950 இந்தியா குடியரசு நாடாக உயர்ந்த முதல் குடியரசுநாள் விழா (26.01.1950) கொண்டாடப்பட்டது.

1952 புனித தோமா வருகையின் 19ஆவது நூற்றாண்டு விழாவும் புனித பிரான்சிசு சவேரியார் வருகையின் நான்காவது நூற்றாண்டு விழாவும் (16-19.01.1952) கொண்டாடப்பட்டன.

கடுமையான புயலில் மெய்யியல் அறைக் கட்டடம், உணவகம், திருத்தொண்டர்கள் கட்டடம் ஆகியவை (30.11.1952) பழுதடைந்தன.

1953 திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய மறைமாவட்டங்களை உள்ளடக்கிய உயர்மறைமாவட்டமாக (19.09.1953) மதுரை மறைமாவட்டம் உயர்த்தப்பட்டது.

1955 வியான்னி அரங்கம் புனிதப்படுத்தப்பட்டுத் (25.07.1955) திறந்து வைக்கப்பட்டது.

இல்லத் தலைரான அருள்பணி. சாக்கோ சே.ச அவர்கள் விவிலிய அருங்காட்சியகத்தைக் கல்லூரியில் (14.09.1955) திறந்து வைத்தார்.

புனித நல்ல ஆலோசனை நாயகி தமிழ்க் கழகத்தின் வெள்ளி விழா (08.12.01955) கொண்டாடப்பட்டது.

1963 புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் நிர்வாகக் குழுவோடு கோட்டாறு மறைமாவட்டம் இணைந்தது.

1966 தமிழகத் திருஅவையின் வரலாற்றில் முதன்முதலாகக் கிறித்தவ ஒன்றிப்புக் கூட்டம் கல்லூரியில் (17.07.1966) நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள துப்பாக்கித் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதற்காக வந்த திருமதி. இந்திரா காந்தியை மாணவத் தலைவர் சந்தித்து (03.07.1966) பூங்கொத்து கொடுத்துக் குருத்துவக் கல்லூரியின் பெயரால் வாழ்த்தினார்.

1967 *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்* இந்தியாவில் முதன்முதலாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது நமது கல்லூரியின் தனிச்சிறப்பாகும்.

அருள்பணி. சைராக் சே.ச அவர்களின் வழிகாட்டுதலில் செம்பட்டில் உள்ள இயேசு அவைப் பண்ணையில் அன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரால் குமுகப் பகுப்பாய்வுப் பயிற்சி தொடங்கிவைக்கப்பட்டது.

செயற்கைக் கருத்தடை, குடும்பக் கட்டுப்பாடு போன்றவற்றைச் சட்டமுறையில் அங்கீகரிக்க ஒன்றிய அரசால் மக்களவையில் நிறைவேற்றப்படவிருந்த மசோதாவை எதிர்த்துக் கத்தோலிக்க சங்கத்தால் உலக மீட்பர் பேராலய வளாகத்தில் (03.09.1967) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் அருள்பணி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட ஆயர் மேதகு. ஜேம்ஸ் மென்டோன்சா அவர்களால் கல்லூரியின் புதிய கட்டடம் புனிதப்படுத்தப்பட்டுத் (08.12.1967) திறந்து வைக்கப்பட்டது.

1969 தனி அறைகளுடன் கூடிய அருள்பணி மாணவர்களுக்கான கட்டடம் புனிதப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.இதுவரை 'இல்லத்தலைவர் நாள்' எனக் கொண்டாடப்பட்ட நாள் 'குழும நாளாக' (22.09.1969) மாற்றம் பெற்றது.

1970 இறையியல் மாணவர்களுக்கான வாசிப்பு அறை புனிதப்படுத்தப்பட்டுத் (16.01.1970) திறந்து வைக்கப்பட்டது. புதிய இல்லக் கோவில் புனிதப்படுத்தப்பட்டுத் (08.08.1970) திறந்து வைக்கப்பட்டது.

1971 குருத்துவக் கல்லூரி தன் பொன்விழாவைச் (25-27.01.1971) சிறப்பாகக் கொண்டாடியது. ஏறக்குறைய 350 அருள்பணியாளர்களும் 8 ஆயர்களும் பங்கேற்றனர்.

கல்லூரியில் பேராசிரியர்களாகப் பணியாற்றும் வாய்ப்பினை இங்குப் பயின்ற மறைமாவட்ட அருள்பணியாளர்கள் பெற்றனர்.

1972 பெங்களூரு, நம்பிக்கைப் பரப்புதல் பணிக்குழுவின் 150வது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்திய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த (26.11.1972) கட்டுரைப் போட்டியில் நமது குருத்துவக் கல்லூரியைச் சார்ந்த சகோ. திவ்வியானந்தம் என்பவர் முதல் பரிசை வென்றார்.

1973 மதுரை உயர்மறைமாவட்டத்திலிருந்து புதிய மறைமாவட்டமாகப் பாளையங்கோட்டை பிரிந்து (17.05.1973) கல்லூரியின் நிர்வாகக் குழுவோடு இணைந்தது.

தமிழகத் திருஅவையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையப்பெற்ற சமய நல்லிணக்கக் கூட்டம் கல்லூரியில் மாதந்தோறும் நடைபெறத் தொடங்கியது.

1975 உரோமையில் உள்ள அர்பன் பல்கலைக் கழகத்தோடு கல்லூரியின் இறையியல் துறை (04.12.1975) இணைக்கப்பட்டது.

1976 அருள்பணி. டி.வி. ஜோசப் அவர்களின் வழிகாட்டுதலில் கல்லூரியின் *Home Review* என்ற ஆண்டு இதழ் *Paulist* எனப் பெயர் மாற்றம் பெற்றது.

வழிபாட்டில் பயன்படுத்துவதற்கான பாடல்களோடு அவற்றின் இசை வடிவங்களின் குறிப்புகளையும் உள்ளடக்கிய *இசை அருவி*எனும் இசைநூலை அருள்பணி. மி. அமலதாஸ் வழிகாட்டலில் கல்லூரி வெளியிடத் தொடங்கியது.

1977 *மறைஅருவி* என்னும் இறையியல் முத்திங்கள் இதழினைக் கல்லூரி வெளியிடத் தொடங்கியது.

1978 புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பைத் திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கோட்டாறு, பாளையங்கோட்டை ஆகிய மறைமாவட்டங்களை உள்ளடக்கிய மதுரை மறைமாநிலத்திடம் இயேசு அவை (29.03.1978) ஒப்படைத்தது. தொடர்ந்து, இயேசு அவையினர் கல்லூரியில் பணியாற்றுவதற்கான ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டது.

"கிறித்தவ மீட்பின் வரலாற்றில் பிற சமயங்களின் பங்கு" எனும் தலைப்பில் அருள்பணி. ரெய்மண்ட் பணிக்கர் கல்லூரியில் (14.07.1978) உரையாற்றினார்.

1979 சமய சுதந்திரத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட மசோதாவைக் கண்டித்துக் கல்லூரியிலிருந்து புனித வளனார் கல்லூரி வரை நடைபெற்ற பேரணியில் அருள்பணி மாணவர்கள் (15.07.1979) பங்கேற்றனர்.

1980 கவிஞர் கண்ணதாசன் கல்லூரிக்கு வருகைதந்து (01.08.1980) உரையாற்றினார்.

இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் குருத்துவக் கல்லூரிகளுக்கான பணிக்குழுவின் கலந்தாய்வுக் கூட்டம் கல்லூரியில் (09.10.1980) நடைபெற்றது.

1982 இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆண்டுக் கூட்டம் கல்லூரியில் (05-12.06.1982) நடைபெற்றது.

1983 பவுல் குருத்துவக் கல்லூரி, திரு இருதய குருத்துவக் கல்லூரி, நல்லாயன் குருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் பேராசிரியர்களுக்கான முதல் ஒருங்கிணைவுக் கூட்டம் (Inter-Seminary Colloquium) கல்லூரியில் நடைபெற்றது.

1985 கல்லூரியின் மெய்யியல் துறை மதுரையில் உள்ள கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டது.

1987 மதுரை உயர்மறைமாவட்டத்திலிருந்து தனி மறைமாவட்டமாகச் சிவகங்கை பிரிந்து குருத்துவக் கல்லூரியின் நிர்வாகக் குழுவோடு (03.07.1987) இணைந்தது.

முதலாமாண்டு இறையியல் மாணவர்களுக்கான ஒரு மாத குமுகப் பகுப்பாய்வுப் பயிற்சியும் மூன்றாமாண்டு இறையியல் மாணவர்களுக்கான இரண்டு வார மேய்ப்புப்பணிப் பயிற்சியும் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நமது குருத்துவக் கல்லூரியால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் இறையியல் மன்றத்தின் முதல் கருத்தரங்கு (27.06.1987) கல்லூரியில் நடைபெற்றது. அருள்பணி. தே. அல்போன்சு அவர்களாலும் பேராசிரியர்களாலும் எடுக்கப்பட்ட இம்முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

இயேசு அவையின் தலைவர் அருள்பணி. பீட்டர் ஹான்ஸ் கோல்வென்பாக் சே.ச. கல்லூரிக்கு வருகை தந்தார்.

1990 அருள்பணி மாணவர் உருவாக்கத்தில் 'குழும உருவாக்கப் பயிற்சி முறைமை' (Moderator System) அறிமுகப்படுத்தப்பட்டது.

1991 பிறரன்புச் செயல்களுக்கான புதிய துறை (Charity Department) உருவாக்கப்பட்டது.

பெண் துறவியரும் பொதுநிலையினரான கிறித்தவ நம்பிக்கையாளர்களும் இறையியல் கல்விகற்க வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டனர்.

தலித் கிறித்தவரின் உரிமைக்காக அருள்பணி மாணவர்கள் பிரதம மந்திரிக்கும் மக்கள் நலத்துறை அமைச்சருக்கும் கடிதம் (18.11.1991) எழுதினர்.

1992 ஒரு மாத மருத்துவ நுழைவுத்தேர்வுப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட தலித், ஏழை மாணவர்கள் தங்குவதற்கு இடம் தந்து உதவியது குருத்துவக் கல்லூரி.

பாரதியார் சாலையில் கல்லூரியின் புதிய வணிக வளாகம் புனிதப்படுத்தப்பட்டுத் (10.06.1992) திறந்து வைக்கப்பட்டது.

1994 அலுவலகப் பணியாளராகப் பணியாற்றிய திரு. டேவிட் என்ற ஆங்கிலோ இந்தியர் உணவகத்திற்கும் கால்நடைப் பண்ணைக்கும் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

நூலகராகப் பணியாற்றிய திரு. ஆரோக்கியராஜ் 05.01.1994 அன்று இயற்கை எய்தினார்.

கிறித்தவ நம்பிக்கையாளர்களுக்கும் துறவியருக்குமான சூழமைவு இறையியல் வகுப்புகள் (Course on Contextual Theology) தொடங்கப்பட்டன.

விவிலிய, மறையுரைச் சிந்தனைகளை உள்ளடக்கிய *அருவி* என்ற இதழினைக் கல்லூரி வெளியிடத் தொடங்கியது.

1995 பட்டியலினக் கிறித்தவருக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் இட ஒதுக்கீடு தரப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி புனித மரியன்னை தலைமைக் கோவிலிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நடந்த பேரணியில் (21.01.1995) அருள்பணி மாணவர்களும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஆதரவாகத் திருச்சியைச் சார்ந்த அருள்பணியாளர்களும் அருள்சகோதரிகளும் ஏற்பாடு செய்திருந்த பேரணியில் அருள்பணி மாணவர்களும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

1996 புனித பவுல் குருத்துவக் கல்லூரி தன் பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

கல்லூரியின் பவள விழாவினை முன்னிட்டு முதுகலை இறையியல் மேற்படிப்பு (Licentiate Programme) தொடங்கப்பட்டது.

பவள விழாவின் நினைவாக *வைகறை* என்ற ஆங்கிலக் காலாண்டு இறையியல் இதழினைக் கல்லூரி வெளியிடத் தொடங்கியது.

புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் அருள்பணிப் பயிற்சிபெறும் மாணவர்களின் உருவாக்கத்தை மதிப்பீடு செய்யும் பொறுப்பு அருள்பணி. யுவான் அம்புரோஸ், பேராசிரியர் இராமச்சந்திரன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மதிப்பீடுசெய்த அறிக்கையைச் (11.02.1998) சமர்ப்பித்தனர்.

1997 நமது குருத்துவக் கல்லூரி இறையியல் நிறுவனமாக (Institute of Theology) உயர்த்தப்பட்ட பின் உரோமையில் உள்ள அர்பன் பல்கலைக் கழகத்தோடு இணைந்தது.

1998 நமது குருத்துவக் கல்லூரியில் 30.10.1998 முதல் 01.11.1998 வரை திருத்தூதுசார் ஆய்வு நடைபெற்றது.

1999 சிறு குழும உருவாக்கப் பயிற்சி முறைமை (Animation System) நடைமுறைப்படுத்தப்பட்டது.

2001 அருள்பணி ஒய். இருதயராஜ் அவர்கள் இல்லப் பணியாளர்களுக்கான இல்லத்தை புனிதப்படுத்தித் (08.09.2001) திறந்து வைத்தார்.

2002 கத்தோலிக்க நம்பிக்கையாளர்களுக்கான விவிலியப் பாட வகுப்புகள் தொடங்கப்பட்டன.

இந்தியாவிற்கான திருத்தந்தையின் தூதர் மேதகு. லொரன்சோ பால்திசேரி அவர்கள் நமது குருத்துவ கல்லூரிக்கு (12.02.2002) வருகை தந்தார்.

2003 இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் 15வது ஆண்டுக் கூட்டம் குருத்துவக் கல்லூரியில் (15-19.01.2003) நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்திலிருந்து புதிய மறைமாவட்டமாகத் திண்டுக்கல் பிரிந்து (10.11.2003) கல்லூரியின் நிர்வாகக் குழுவோடு இணைந்தது.

2005 இறையியல் ஒருங்கமைவு, சூழமைவு இறையியலாக்கம் போன்றவை இறையியல் பாடத்திட்டத்தோடு இணைக்கப்பட்டன.

அருள்பணி. எரோணிமுசு குருசு அவர்களின் தலைமையில் அருள்பணியாளர்கள் வில்லியம், ஜீவராஜ், ரெய்மண்ட் ஆகியோரின் வழிகாட்டுதலில் 29 சகோதரர்களைக் கொண்ட குழு பாண்டிச்சேரி உயர்மறைமாவட்டத்தில் உள்ள டி.ஆர். பட்டினம் என்னும் பங்கில் சுனாமி பாதித்த பகுதிகளில் துயர் நீக்கப் பணிகளில் ஒரு மாதம் (25.03.2005 - 25.04.2005) ஈடுபட்டது.

கத்தோலிக்க நம்பிக்கையாளர்களுக்கான இறையியல் பட்டயப் பயிற்சி வகுப்புகள் (08.08.2005) தொடங்கப்பட்டன.

திருஅவைச் சட்டத் தொகுப்பினை நமது குருத்துவக் கல்லூரி தமிழில் மொழிபெயர்த்து (13.08.2005) வெளியிட்டது.

2006 விவிலிய ஆண்டை முன்னிட்டு மாபெரும் விவிலியக் கண்காட்சி கல்லூரியில் ஏற்பாடு (25.08.2006) செய்யப்பட்டது.

2008 நமது குருத்துவ கல்லூரியின் பாதுகாவலர் புனித பவுலின் ஆண்டு (28.06.2008 - 29.06.2009) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு மாபெரும் விவிலியக் கண்காட்சியும் ஒலி-ஒளி நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டன.

2009 பெங்களூரில் உள்ள புனித பேதுரு பாப்பிறை இறையியல் நிறுவனத்துடன் நமது குருத்துவக் கல்லூரி இணைக்கப்பட்டது.

2011 தமிழ் இறையியல் மன்றத்தின் வெள்ளிவிழாவினை முன்னிட்டு இரண்டுநாள் கருத்தரங்கு (31.08.2011 - 01.09.2011) நமது குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது.

திருத்தந்தையின் இந்தியாவுக்கான தூதர் மேதகு சால்வத்தோர் பினாக்கியோ நமது குருத்துவ கல்லூரிக்கு வருகைதந்து (24.10.2011) திருப்பலி நிறைவேற்றினார்.

2014 பேராயர் அந்தோணி பாப்புசாமி அவர்கள் நமது குருத்துவ கல்லூரியின் நிர்வாகக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

கோட்டாறு மறைமாவட்டத்திலிருந்து தனி மறைமாவட்டமாகக் குழித்துறை பிரிந்து (22.12.2014) குருத்துவக் கல்லூரியின் நிர்வாகக் குழுவோடு இணைந்தது.

மதுரையிலுள்ள புனித பேதுரு குருத்துவக் கல்லூரியில் தரப்பட்டு வந்த ஓராண்டு அருள்வாழ்வுப் பயிற்சி நமது குருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு அடுத்த ஆண்டில் மதுரையிலுள்ள கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது.

2015 மதுரையிலுள்ள கிறித்து இல்லக் குருத்துவக் கல்லூரியில் செயல்பட்டுவந்த மெய்யியல் துறை புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் ஓர் அங்கமாக மீண்டும் மாற்றப்பட்டது.

2016 சிதம்பரம், கடலூர் பகுதிகளுக்கு சகோதரர்கள் சென்று (17-20.01.2016) புயலில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் நீக்கப் பணிகளில் ஈடுபட்டனர்.

2017 திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமை நீதிமன்றத்திற்கு அருகில் நடைபெற்ற ஏறு தழுவுதலுக்கான ஆதரவுப் போராட்டத்தில் (19.01.2017) அருள்பணி மாணவர்களும் பேராசிரியர்களும் பங்கேற்றனர்.

திருஅவையின் வரலாற்றை எட்டுத் தொகுதிகளைக் கொண்ட தொகுப்பாகத் தமிழில் வடிவமைத்து வேளாங்கண்ணியில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவை கலந்தாய்வுக் கூட்டத்தில் வெளியிட்டமை (09.07.2017) நமது குருத்துவ கல்லூரிக்குப் பெருமையாகும்.

எஸ்பிஎஸ் திருமண மண்டபத்திற்கான அடிக்கல் கருமண்டபத்தில் (15.02.2017) நாட்டப்பட்டது.

2018 *உண்மையின் மகிழ்ச்சி* என்ற திருத்தூதுசார் அமைப்பு விதித்தொகுப்பின்படி இரண்டு வருட மெய்யியல், மூன்று வருட இறையியல், ஓராண்டு மேய்ப்புப்பணி என்ற பயிற்சிமுறை கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2020 புனித பவுஸ்தீனா, புனித இரண்டாம் ஜான் பால் ஆகியோரின் திருப்பண்டங்கள் குருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டு (22.01.2020) மரியாதை செலுத்தப்பட்டது.

"இதயத்தில் இயேசுவாய்... பணியில் பவுலாய்..." என்ற மையச் சிந்தனையோடு நமது குருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா (25.02.2020) தொடங்கியது.

கொரோனா பெருந்தொற்று முதல் அலை காரணமாக இணையவழி வகுப்புகள் 01.09.2020 முதல் டிசம்பர் 2020 வரை நடத்தப்பட்டன; பிறகு நேரடி வகுப்புகளுக்காகக் குருத்துவக் கல்லூரி (04.01.2021) திறக்கப்பட்டது.

கருமண்டபத்தில் கட்டப்பட்ட திருமண மண்டபம் புனிதப்படுத்தப்பட்டுத் (10.12.2020) திறந்து வைக்கப்பட்டது.

2021 நூற்றாண்டு விழாவைப் பயனுள்ள விதத்தில் கொண்டாடும் விதமாக முன்னாள் மாணவர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் (10.03.2021) நடைபெற்றது.

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை காரணமாக 2021ஆம் கல்வி ஆண்டுக்கான வகுப்புகள் இணையவழியில் தொடங்கப்பட்டன. கத்தோலிக்க நம்பிக்கையாளர்களுக்கும் துறவியருக்கும் ஓரா ஆண்டு, ஈராண்டு இறையியல் பட்டயப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டன.

2022 புனித பவுல் குருத்துவக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை (29.06.2022) மகிழ்வுடன் கொண்டாடுகிறது.

தொகுப்பாளர்கள்



சகோ. **அ. பிரகாஷ்,** அருள்பணி.



முனைவர் **மை. வில்லியம் லூர்துராசு**

"இறையாட்சிப் பணி"

"நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும்; ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கேன்" (மாற் 1:38).

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்;... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத் 28:19-20).

"திருஅவையின் உள்ளியல்பிலிருந்தே நற்செய்திப்பணி பிறக்கிறது."

– *திருஅவையின் நற்செய்திப்பணி*, 6.

"நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திருஅவையின் இயல்பான பணி."

– *திருஅவையின் நற்செய்திப்பணி*, 2.

திருஅவை "நற்செய்தியின் தூதுரையால் உலகம் அனைத்தையும் ஒளிரச் செய்"கிறது.

– *இன்றைய உலகில் திருஅவை*, 92.

அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விட்டவர்கள்!



அருள்பணி. வலண்டின் ஜோசப்
புனித பவுல் இறையியல் கல்லூரி

புனித பவுல் இறையியல் கல்லூரி என்ற ஆலமரத்தின் நிழலில் அமர்ந்துகொண்டு, அதன் வேர்களை, விழுதுகளை, வியக்கவைக்கும் கிளைகளை, வந்து செல்லும் பறவைகளை, வளர்ந்து நிற்கும் வனப்புகளை எண்ணிப்பார்க்கிறேன். பல நூறாண்டுகள் வாழவேண்டிய இந்தக் கல்லூரி முதல் நூற்றாண்டைக் கொண்டாடி மகிழ்கிறது. காலங்கள் தோறும் காவியங்கள் படைக்க வேண்டிய இந்தக் கல்விக் கலைக்கூடம் இன்று தனது முதல் காவியத்தை பெருமிதத்தோடு வெளியிடுகிறது. இந்த ஒரு நூறு ஆண்டுகளில் எத்தனையோ முத்தாய்ப்புகளை இந்தத் தமிழ்த் திருஅவைக்கு வழங்கியிருக்கிறது என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். 1921ஆம் ஆண்டு இந்த இறையியல் கல்லூரி துவங்கப்பட்டதன் நோக்கம் மிகத் தெளிவானது. இறையியல் கல்விக்காக தமிழகத்திலிருந்து இலங்கையில் உள்ள கண்டிக்குச் சென்ற மாணவர்கள் சந்தித்த பயணச் சிக்கல்கள்; தமிழகத்திலேயே தமிழ்த் திருஅவையின் தேவைகளுக்கு ஏற்பப் பயிற்சிகள் அளிக்க வேண்டிய காலத்தின் கட்டாயம்; வளர்ந்து வந்த இறையழைத்தலுக்கு ஈடுகொடுக்கவேண்டிய அறைகூவல்கள் போன்றவைதான் கல்லூரியைத் தமிழகத்தின் மையமான திருச்சியில் துவங்க வைத்த காரணிகள்.

காலத்தின் அறிகுறிகள்

அன்றைய காலகட்டத்தில் இயேசு அவையினரின் எழுச்சி மிக்க பணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. புதிய மறைமாவட்டங்களையும், பங்குகளையும் நிறுவி அவற்றில் திறமையும் தொலைநோக்கும் மிக்க பணியாளர்களை நியமித்து ஆழமான, ஆற்றல்மிக்க அடித்தளத்தை இந்த மண்ணில் உருவாக்கியவர்கள் அவர்களே! அவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திருச்சி ஆயர் பெசாந்தியர். அவரின் இலட்சியக் கனவுதான் இந்த அருமையான இல்லம். அவரின் பெயரால் ''பெசாந்தியர் கூடம்'' என்ற வகுப்பறையே இன்று இக்கல்லூரியில் இருக்கிறது. தரமான பயிற்சி தந்து மறைமாவட்ட அருள்பணியாளர்களை உருவாக்குவதைத் தனது தலையாய பணிகளில் ஒன்றாக அன்றைய இயேசுஅவை கைகளில் எடுத்துச் செயல்பட்டது.

திருச்சி வளனார் கல்லூரிக்கும் புனித பவுல் இறையியல் கல்லூரிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அந்தக் கல்லூரியின் நிழலில்தான் பவுல் கல்லூரி பல்வேறு சிறப்புகளைப் பெற்றது. அன்று பணியாற்றிய அருள்பணியாளர்கள் இங்கும் வந்து வகுப்பெடுத்தனர். அங்கு தலைவர்களாக இருந்தவர்கள் இங்குள்ள தேவைகளையும் கண்டறிந்து பூர்த்தி செய்தனர். அவர்களுக்குத் திருச்சி நகரில் இருந்த செல்வாக்கின் விளைவாக கல்லூரியில் பல்வேறு முயற்சிகள் வெற்றிபெற்றன.

பவுல் இறையியல் கல்லூரியின் இல்லத் தலைவராக இருந்து, பின் திருச்சி ஆயராகி, அதன்பின் மதுரைப் பேராயராகி அருமையாக உருவாக்கப் பணி செய்த பீட்டர் லெயனார்டு பேராயரின் வழிகாட்டுதல் பல ஆண்டு இக்கல்லூரியை நேரிய பாதையில் நடத்திச் சென்றது.

கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக ஒதுக்கப்பட்டவராய்...

புனித பவுல் கல்லூரியின் விருது வாக்கு ''கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக ஒதுக்கப்பட்டவராய்''. அருள்பணி மாணவர்களைப் பிரித்தெடுத்து வளர்த்து மறுபடியும் சமுதாயத்திற்கு அனுப்பும் பணியை பவுலின் பாணியில் வடிவமைப்பதே கல்லூரியின் நோக்கம்.

தொடக்ககாலத்தில் மாணவர்கள் சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சாதி, இனம், மொழி ஆகிய பாகுபாடுகள் இன்றி பயிற்சி தரப்பட்டது. பல மாநிலங்களிலிருந்தும் இலங்கையிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து படித்தார்கள். புனித நிலைக்கு உயர்த்துவதே முதல் நோக்கமாக இருந்தது. 'விளையாடுகின்ற நேரத்திலும் குருத்துவ உடையை அவர்கள் அணிந்திருந்தார்கள்' என்ற குறிப்பு நம்மையெல்லாம் இன்று வியக்க வைக்கிறது. அறிவுஜீவிகளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஆன்மிகவாதிகளாக இருக்கவேண்டும் என்று தொடக்ககாலத்தில் வலியுறுத்தப்பட்டது. இலத்தின் மொழியே பாட மொழி, கிரகோரிய இசையே வழிபாட்டு மொழி. பங்குத் தளத்தில் ஆன்மிகப் பணிபுரிவதே மாணவர்களின் நோக்கம் என்ற பாணியில் 25 ஆண்டுகள் வளர்ந்தன. அருள்பணி. லெமாய், அருள்பணி. உகார்த்தே போன்றவர்கள் கல்லூரியை 'வெள்ளிவிழாக்' கோலத்திற்கு இட்டுச் சென்றனர்.

கட்டடங்கள் வளர்ந்தன

இன்று கல்லூரியைப் பார்ப்பவர்கள் அதன் கட்டடக் கலையில் மெய்மறந்து போகிறார்கள். இவ்வளவு அருமையாகக் கட்டியவர்கள் யார் என்று பலரும் கேட்கிறார்கள். அந்தப் பெருமைக்குச் சொந்தகாரர்கள் இயேசு அவை அருள்பணியாளர்களே! அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் அருள்பணி. 'ஜேம்ஸ் லோசே' அவர்கள். ஏன் இவ்வளவு பெரிய கட்டடத்தை மறைமாவட்ட மாணவர்களுக்குக் கட்ட வேண்டும் என்ற வினா பலருக்கும் எழுந்த காலகட்டத்தில், மாணவர்களின் நலன்தான் திருஅவையின் நலன் என்று உரக்கச் சொன்னார் லோசே! அவரின் தனிப்பெரும் கவனத்தில் கல்லூரி உயர்ந்து வளர்ந்தது. அழகான இன்றைய அமைப்புமுறை உருவானது. இறையியலாருக்கும் மெய்யியல் மாணவர்களுக்கும் தனித்தனியே அறைகள் கட்டி, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து உருவாக்கப்பணியில் முத்திரை பதித்தார் அருள்பணி. லோசே!

விவிலியமும் இசையும்

காலத்தின் தேவைக்கு ஏற்பப் பயிற்சிப் பணிகளை வடிவமைத்துச் செயல்படுவது இந்த இறையியல் கல்லூரியின் தனிப்பெரும் சிறப்பு. விவிலிய, திருவழிபாட்டு இயக்கங்கள் 1950-1970 ஆண்டுகளில் திருஅவையின் பணி வாழ்வில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தன. அந்தக் காலகட்டத்தில் பயிற்சி மொழி ஆங்கிலமாக மாறியது, இலத்தினிலிருந்து ஆங்கிலத்திற்கு மாறிய நேரங்களில் விவிலியப் பயிற்சிகள் வளம் பெற்றன. ஏராளமான விவிலிய நூல்கள் கல்லூரியை வந்தடைந்தன. பல்வேறு விளக்கவுரைகளை மாணவர்கள் ஆர்வத்துடன் படிக்கத் துவங்கினர். அருள்பணி. ஏரோணிமுசு, ஆயர் சூசைமாணிக்கம் போன்றோர் மாணவர்களாக இருந்த காலகட்டமது. கத்தோலிக்கத் திருஅவையிலிருந்து வெளியே சென்ற அருள்பணி. பெர்க்மான்ஸ், தம்முடைய விவிலிய அறிவுக்கும் ஆர்வத்திற்கும் காரணம் பவுல் இறையியல் கல்லூரிதான் என்று எத்தனையோ மேடைகளில் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார். அருள்பணி. பெர்க் சே.ச., அவர்கள் விவிலிய வேட்கையை மிகச் சிறப்பாக மாணவர்களின் நெஞ்சத்தில் உருவாக்கினார்.

விவிலியத்தோடு இசையும் இங்கு இணைந்து நடனமாடின. விமா. அமலன், பெர்க்மான்ஸ், ஜான் குழந்தை போன்றோர் மாணவர்களாக இருந்த காலகட்டத்தில் பலவிதமான தரமான திருவழிபாட்டுப் பாடல்கள் உருவாகின. இன்றளவும் தமிழகத் திருஅவையில் அவை நின்று நிலைக்கின்றன. திருச்சி வானோலி நிலையத்தில் பவுல் இறையியல் கல்லூரி மாணவர்களின் இசையும் பாடலும் பல நேரங்களில் ஒலிபரப்பப்பட்டு, பல்வேறு தரப்பு மக்களின் உள்ளங்களைத் தொட்டன.

பொன்விழா ஆண்டு

1971ஆம் ஆண்டு குருத்துவக் கல்லூரியின் பொன்விழா ஆண்டு. அந்த நேரத்தில் பல்வேறு சிறப்புகள் கல்லூரியை வந்தடைந்தன. விவிலியம், இசை போன்றவற்றோடு மறைக்கல்விப் பணியும் மாணவர்களை வளர்த்தெடுத்தது. பல்வேறு கிராமங்களுக்கு மறைக்கல்விப் பணிக்காக மாணவர்கள் சென்று கல்விப் பணியும் மறைக்கல்விப் பணியும் தந்தனர். சுற்று வட்டார மக்களுடன் உளபூர்வமான தொடர்பு வைத்துக் கொண்டது கல்லூரி. விவிலியம், இசை, மறைப்பணி போன்ற

மூன்று முத்தான எல்லைகளோடு மாணவர்கள் பொன்விழாவை மூன்று நாட்கள் கொண்டாடினார்கள். அவர்களின் பயிற்சித் தரத்தையும் பக்குவ நிலையையும் பொன்விழா எடுத்துக்காட்டியது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஏற்படுத்திய எழுச்சிகள் உடனடியாக இறையியல் கல்லூரியில் அரங்கேறின. சங்க ஏடுகளை முதன்முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர்கள் இந்தக் கல்லூரியின் மாணவர்களே! வெளிநாட்டு ஏடுகள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்று நூலகம் சிறப்பிக்கப்பட்டது இந்தக் காலகட்டத்தில்தான்.

ஆன்மிகப் பயிற்சி பெற்றவர்களாக இருந்த மாணவர்களை அறிவுஜீவிகளாகவும் வளர்த்தெடுத்ததில் இந்த காலகட்டத்தில் பணியாற்றிய அருள்பணி. மரியலூயிஸ், அருள்பணி. ஜோசப் தெக்குந்தலா, அருள்பணி. இராசா, அருள்பணி. அமலதாஸ் போன்றோரின் பங்கு மிகச் சிறப்பாக அமைந்தது.

இறையியல் துறையில், தன்னுடைய புரட்சிக் கருத்துக்களால் தீப்பிழம்பேற்றிய இறையியலார் அருள்பணி. லூர்துசாமி சே.ச. அவர்கள். இந்தக் கல்லூரியில் முதலில் இலத்தின் மொழியில் பாடம் நடத்திப் பயணத்தைத் துவங்கினார். பின் ஆங்கில மொழிக்கு மாறினார். பின் தமிழ் மொழியில் முதன்முதல் பாடம் எடுத்து மாணவர்களின் வாழ்க்கையில் தனிப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். திருஅவையின் மரபு இறையியலில் துவங்கி, வத்திக்கான் சங்க இறையியலில் வளர்ந்து, பின் நமது மண்ணுக்குத் தேவையான தமிழ் இறையியலாக்க முறையில் புதிய பாதை அமைத்தவர் அருள்பணி. லூர்துசாமி அவர்கள்.

தமிழ் இறையியலாக்கம்

1978ஆம் ஆண்டு இந்தக் கல்லூரியின் பொறுப்பு மறைமாவட்ட ஆயர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் இயேசு அவை அருள்பணியாளர்கள் பேராசிரியர்களாக இருந்தனர். நிர்வாகப் பொறுப்பை மறைமாவட்ட அருள்பணியாளர்கள் கைகளில் எடுத்தனர். இயேசு அவை அருள்பணியாளர்கள் சிறந்த மாணவர்களைத் தேர்ந்துதெடுத்து பயிற்சி தந்து, மேற்படிப்புக்கு அனுப்பிப் பின் பேராசிரியர்களாக உருவாக்கினர்.

இந்தக் காலகட்டத்தில் தமிழ் இறையியலாக்கத்தில் தனிப்பெரும் நிலையமாக உருவெடுத்தது பவுல் கல்லூரி. அருள்பணியாளர்கள் எரோணிமுசு, பெலிக்ஸ் வில்பிரட், தே. அல்போன்சு, சூசைமாணிக்கம், பவுல் லியோன் போன்றோர் இயேசு அவையினரோடு இணைந்து தமிழ் இறையியலாக்கத்தில் தனிப்பெரும் பாதை அமைத்தனர்.

அருங்கொடை இயக்கங்கள் தமிழ் மண்ணில் வளரத் துவங்கிய காலத்தில் தந்தை ச.தே. செல்வராசு போன்றவர்கள் தீவிரமாக ஈடுபட்டுப் பணிக்கான பாதைகள் அமைத்தனர். பின் விடுதலை இறையியல் வீறுகொண்டு எழுந்த காலகட்டத்தில் அதே பேராசிரியர்கள் அந்தத் திசைக்கு மாறி புது ஒளி காட்டினார்கள். மக்கள் கலை, இலக்கியங்கள் பரிணமித்த அடுத்த காலகட்டத்திலும் அதே பேராசிரியர்கள் அந்தத் துறையில் தடம்பதித்தனர்.

தூய ஆவியின் தூண்டுதலால் இறையியல் பல்வேறு திசைகளில் திரும்பிப்பார்த்தது. குருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்களும் ஆவியாரின் அத்தனை அசைவுகளுக்கும் ஏற்றபடி தங்களின் இறையியல் பணியை வளர்த்தெடுத்தனர்.

இன்றைய தேவைகள்

இசை அருவியும் மறை அருவியும் இணைந்து குற்றாலத் தென்றலாக இறையியல் மேடைகளில் புதுமைகள் செய்த காலகட்டத்தில்தான் நான் இந்தக் கல்லூரியில் இறையியல் மாணவனாக வந்து சேர்ந்தேன்.

என்னுடைய மாணவப் பயணத்தில் நான் கண்ட புதுமைகள் ஏராளம். எழுத்துப் பணியில் மாணவர்கள் பலவிதங்களிலும் உற்சாகப்படுத்தப்பட்டனர். விவிலிய நூற்களுக்கு விளக்கவுரை எழுதும் பணியைச் சிறப்பாக நெறிப்படுத்தினார் அருள்பணி. எரோணிமுசு.

திருஅவையின் ஏடுகளை மொழிபெயர்த்துத் தரும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்தினார் அருள்பணி. பவுல் லியோன். இறையியலாக்கப் பணியில் மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள் அருள்பணியாளர்கள் ச.தே. செல்வராஜ், சேவியர் இருதயராஜ் சே.ச., பெலிக்ஸ் வில்பிரட் போன்றோர். ஓவியப் பணியில் ஈடுபட்டு அழகான விவிலியச் சித்திரங்களை

அமைத்து அந்தப் பணியில் ஆர்வம் ஊட்டினார் அருள்பணி. இக்னேசியஸ் அமலதாஸ். மேய்ப்புப்பணியில் ஆர்வமூட்டி மறைக்கல்விப் பணியை ஆர்வமுடன் வளர்த்தெடுத்தார் இன்னாள் மதுரைப் பேராயர் பி. அந்தோனி. வேறுபட்ட நிலைகளில் குருத்துவப் பணி உருவாக்கம் நிகழ்ந்தது.

இன்று அதன் விளைவுகளைப் பார்க்கிறேன். ஊடகம், சுற்றுப்புறச் சூழல், சாதியற்ற சமுதாயப் பார்வை போன்றவற்றில் இன்றைய இறையியல் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஊடகங்களைச் சிறந்த முறையில் கையாண்டு 'இறையாட்சிப் பணியை' மேற்கொள்வதற்கு மாணவர்கள் பல்வேறு திறன்கொண்டு வளர்கிறார்கள். தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள் பலர் இன்று மாணவர்களாக வந்து சேர்கின்றனர்.

மரங்கள் நடுவது, மூலிகைத் தோட்டங்கள் அமைப்பது, பசுமையைப் பாதுகாப்பது போன்ற பணிகளில் மாணவர்கள் புதிய தடம் பதிக்கின்றனர். கல்லூரியைச் சுற்றியுள்ள செடிகளும் மரங்களும் பறவைக் கூடுகளும் விலங்கின வளர்ச்சிகளும் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். மாணவர்களின் உறவுகளும் உணர்வுப் போக்குகளும் சாதியற்ற தமிழ்ச் சமுதாயத்தை இலட்சியமாகக் கொண்டு விரைவதைப் பார்க்கிறேன்.

அருள்பணியாக்கத்தில் இன்றைய அறைகூவல்கள்

புனித பவுல் இறையியல் கல்லூரி கடந்து வந்த பாதை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகத் தெரிகின்ற நிலையில், செல்ல வேண்டிய பாதையையும் சற்று நோக்குவது சாலச் சிறந்தது. இத்தனைச் சிறப்புமிக்க அடித்தளத்தில் இன்று இந்தக் கல்லூரி எவ்வாறு இயங்க வேண்டும் என்று எண்ணிப்பார்ப்பது நூற்றாண்டு விழா சந்திக்கும் மற்றொரு நோக்கு.

1. ஆளுமை உருவாக்கம்

இக்கல்லூரி தொடங்கப்பட்ட காலத்தில் ஆன்மிகப் பயிற்சிகளுக்கு அதிக முதன்மை தரப்பட்டது. பொன் விழாக் காலங்களில் அறிவுக் கூர்மைக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் வெளிவந்த விளக்கவுரைகள், இறையியல் ஏடுகள், மொழிபெயர்ப்புகள், இறையியலாக்கம் போன்றவை இதற்குச் சான்று. பின் வந்த காலத்தில் உணர்வுபூர்வமாகச் சமநிலைக்கு அதிக முதன்மை கொடுத்தார்கள். பேராயர் பீட்டர் பெர்ணான்டோ, தே. அல்போன்சு போன்றவர்கள் உளவியல்ரீதியாக மாணவர்கள் பக்குவம் பெறவேண்டும் என்று அரும்பாடுபட்டனர். இன்று மாணவர்கள் ஊடகங்களினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு சமூக ஊடகங்கள் வளர்ந்த இந்தக் காலகட்டத்தில் அவற்றை எவ்வாறு சரியான முறையில் கையாண்டு ஆளுமையில் வளர்வது என்ற திசை தெரியாமல் திண்டாடுகிறார்கள்.

ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படையானது சுதந்திரம். அடக்குமுறைகளால் எந்தவிதமான ஆளுமையும் வளர்ந்துவிடாது. 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் இங்கு மாணவர்களாக வருகின்றனர். சிறுவர்களைப் போல அவர்களை நடத்துவது சரியாகாது. அதே சமயம், கொடுக்கின்ற சுதந்திரத்தைச் சரியானமுறையில் பயன்படுத்தி ஆளுமையில் வளர்கிறார்களா என்று பார்ப்பது பயிற்சியில் முதன்மையான நிலை. இந்த நிலை உருவாக்கத்தில் ஈடுபடும் அத்தனை பேருக்கும் பெரிய சவாலாக உள்ளது. அலைபேசி, சமூக வலைதளம் ஆகியவை ஒவ்வொரு மாணவருக்கும் அனுமதிக்கப்படுகிறது. அதில் வருகின்ற செய்திகள், நிலைப்பாடுகள், கருத்து மேலாண்மை ஆகியவை எந்த அளவுக்கு 'வடிகட்டி' எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது என்பது பெரிய வினா.

கண்காணிப்பு என்பது புதிய வடிவங்கள் எடுத்துள்ளது. ஒருவரின் ஆளுமைத் திறனில் அது கணிக்கப்படுகிறது. குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழலில் மாணவர்கள் எத்தனை ஆளுமையோடு செயல்படுகிறார்கள் என்பதிலிருந்துதான் அவர்களைத் திறனாய்வு செய்து பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

2. பொருளாதாரம் பேணுவது

'பன்னாட்டு நிறுவனங்கள்' வளர்ந்துவிட்ட காலகட்டம். பணத்தை வாரி இறைத்து, இளைஞர்களைத் திக்குமுக்காட வைத்து அவர்களின் உழைப்பைச் சுரண்டுகின்ற புதிய அடிமைத்தனம் இன்று அரங்கேற்றப்படுகிறது. இதில் அருள்பணி

மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தங்களது வயதில் இருக்கும் இளைஞர்கள் அனுபவிக்கின்ற சொகுசு வாழ்க்கை, நுகர்வுப் போக்கு, உணவுமுறைகள் போன்றவை அவர்கள் வாழ்விலும் வெளிப்படுகிறது.

இந்த நிலையில் 'இயேசுவின்' பொருளாதாரப் பார்வைகளை எப்படி சொல்லித்தரப் போகிறோம் என்பது பெரிய சவாலாக இருக்கிறது! பங்குகளுக்குப் பணியாளர்களாகச் செல்லுகின்ற நேரத்தில் பணம் தேடுவதில் சராசரி எண்ணங்களைச் சிதறடிக்கும் போக்கை இன்று அதிகமாகக் காணமுடிகின்றது. தலை சாய்க்கவும் இடம் இல்லாத தலைமகன் இயேசுவின் வாழ்க்கைப் பாணியை நியாயப்படுத்தக்கூடத் தயங்கும் நிலையைப் பார்க்கிறோம்.

எளிய வாழ்க்கை, பணப் பற்றின்மை, ஏழைகளோடு தோழமை, உழைப்பின் மாண்பு என்பது எல்லா நிலைகளிலும் சொல்லித் தர வேண்டிய பாடங்கள். இத்தனை ஆண்டுகள் படித்த பின்னும், மேற்படிப்பு ஏதாவது செய்யவேண்டும் என்ற நிறைவின்மையை யார் உருவாக்குகிறார்கள்?

3. அரசியல் நிலைப்பாடு

அரசியல் செயல்பாடு என்பது இன்று தவிர்க்க முடியாத இறையாட்சிப் பணி. இயேசு ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்தார். அதுவே அவரை மரணம்வரை கொண்டு சென்றது.

சமுதாயத்தின் அடித்தள இயக்கங்களைக் கற்றுக் கொள்கின்ற மாணவர்கள் பணியாளர் ஆனபின் ஏன் சரியான அரசியல் நிலைப்பாடுகளை எடுக்கத் தயங்குகின்றனர்?

அரசியல் நிலைப்பாடு என்பது ஒடுக்கப்பட்ட, சமுதாயத்தால் கைவிடப்பட்ட மாந்தர்கள்பால்தான் செல்லமுடியும். ஒட்டுமொத்தமான மானிட வாழ்வை உயர்த்தும் இடதுசாரி நிலைப்பாடுகள்தான் இன்றைய தேவைகள். ஒருவர் படிக்கின்ற காலம்வரை இத்தகைய சிந்தனைகளில் நடமாடிவிட்டு, பணித்தளத்திற்குச் சென்றவுடன் சாதிய, வலதுசாரி கொள்கைகள் கொண்ட நிலைப்பாடுகளைத் துணிந்து எடுப்பது ஏன்? வெளிநாட்டு மோகம், வசதிகளைப் பெருக்குவது போன்றவை எத்தகைய நிலைப்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது? இதற்கு இறையியல் கல்லூரிகள் எத்தகைய பொறுப்பு ஏற்கின்றன? நமது பவுல் கல்லூரியில் இதற்கு என்ன செய்யலாம் என்பது சவால்தானே!

அரசியல் செயல்பாடுகளின் மற்றொரு வகை சமுதாய வாழ்வுக்காக நாம் முன்னெடுக்கும் செயல்முறைகள். நமது பணியும் வாழ்வும் திருஅவை என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று போவதேன்? அருள்பணி. லூர்துசாமி, அருள்பணி. பெலிக்ஸ் வில்பிரட் போன்றவர்கள் உலகளாவிய நமது நிலைப்பாடுகள் பற்றித்தான் பாடம் எடுத்தார்கள். திருஅவையின் பதவிகள் பற்றியோ படிநிலைகள் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. அத்தகைய பாணியை இன்று மாணவர்கள் நடுவில் எப்படி உருவாக்குவது என்பது பெரிய சவால்.

4. உடல் நலமும் உணவுமுறையும்

இந்தக் கல்லூரியில் 'விளையாட்டுத் துறை' மிக சிறப்பாகச் செயல்பட்ட காலங்கள் உண்டு. குருத்துவ மாணவர்களுக்கும் புனித வளனார் கல்லூரி மாணவர்களுக்கும் அடிக்கடி போட்டிகள் நடக்கும். நல்ல உடல்நலக் கட்டமைப்புகளோடு மாணவர்கள் வளர வேண்டும் என்று திருஅவையே இன்று விரும்புகிறது.

கொரோனா காலத்தில் பல இளைஞர்களை நாம் பறிகொடுத்து விட்டோம். இன்று இளைஞர்களுக்கு, சமூக வலைதளங்களில் இருக்கின்ற ஆர்வம் விளையாட்டுத் துறையில் இல்லை. குழும உணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, கூரிய சிந்தனை ஆகியவற்றை வளர்க்கும் விளையாட்டுத் துறை இன்று திறம்படச் செயல்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பேராயர் அந்தோனி பாப்புசாமி பெரிய கால்பந்து வீரர். களத்தில் இறங்கி நின்று மாணவர்களை விளையாட்டுத் துறையில் வளர்த்தவர்கள் ஏராளம். அத்தகைய செயல்பாடுகள் இன்று பெரிய சவாலாக உள்ளன.

அருமையான விளையாட்டுத் திடல்கள் இன்று புதர்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. உணவுமுறையும் பல்வேறு சவால்களை உருவாக்கி இருக்கிறது. மாணவர்களுக்குச் சிறந்த உணவு தரவேண்டும் என்பது கல்லூரியின் நிலைப்பாடு. அதற்காக எத்தகைய செலவினங்களையும் ஏற்றுக்கொள்ளக் கல்லூரி தயங்குவதில்லை. ஆனால் இன்று வளர்ந்து வரும் துரித உணவு (Fast food) மோகம் பெரிய சவாலாகத்தான் இருக்கிறது.

கடைகளில் கிடைக்கும் சிற்றுண்டிகள் மாணவர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்கின்றன! பிறந்த நாட்கள், திருநாட்கள், மறைமாவட்டக் கூட்டங்கள் என்று நாளும் ஒரு நிகழ்வு நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதில் பரிமாறப்படும் உணவுகள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி பெரிதும் கவலைப்பட வைத்துள்ளது. கொரோனா காலம் ஏதோ ஒரு விதத்தில் இவற்றைத் தடைசெய்தது. ஆனால், இன்று தடையையும் மீறிக்கொண்டு நுகர்வுப் பண்பாடு குருத்துவ வாழ்க்கையில் தடம் பதிக்கப்பார்க்கிறது. குருத்துவக் கல்லூரியின் அடித்தள விழுமியங்கள் சிதைந்துவிடுமோ என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நூற்றாண்டுக் கனவுகள்

இத்தகைய சவால்களோடு, நூறு ஆண்டுகள் உருவாக்கிக் கொடுத்த சில கனவுகளையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பவுல் இறையியல் கல்லூரியில் படித்த மாணவர்களின் பணியில் சில தனிப்பட்ட முத்திரைகளைக் காணமுடியும். சமூக ஈடுபாடு, மக்களைக் கட்டியெழுப்பும் இறையாட்சிப்பணி, சிந்தனைகளை வெளிக்கொணரும் எழுத்துப்பணி, சமய நல்லிணக்கப் பணிகள், காலத்தின் தேவைக்கேற்ற அரசியல் நிலைப்பாடுகள் என்று அவற்றைப் பட்டியல் இடலாம். வீதியில் இறங்கிப் பணி செய்யும் கலைக்கு இக்கல்லூரி அவர்களை உருவாக்குகிறது. 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால், இன்ப நிலைதானே வந்து எய்தும் பராபரமே' என்ற தாயுமானவரின் சொற்களுக்கு ஏற்ப அன்பர்பணியாற்றி இன்ப நிலைக்கு மனிதர்களை உருவாக்க என்ன பணி செய்யவேண்டும் என்று கனவுகாணும் கூட்டத்தில் நானும் ஒருவன்.

1. பொதுவெளி இறையியலாக்கம்

நாம் படிக்கின்ற இறையியல் நமது வட்டத்தில் மட்டும் சுருங்கிவிடாமல் தமிழகம் என்ற பொதுவெளியில் மக்களின் சிந்தனைகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பது எனது முதற்கனவு. திருஅவையின் ஏடுகளிலேயே எழுதுகின்ற நாம் தமிழகத்தின் பொதுவான பத்திரிகைகளில் எழுதத் துவங்க வேண்டும். நம்முடைய சிந்தனைகளைச் சமயம் கடந்து பொதுவெளியில் மக்களின் நல்வாழ்வுக்காக முன்வைக்க வேண்டும். தினமணி, இந்து போன்ற இதழ்களில் எத்தனையோ பொதுவான கட்டுரைகள் வெளிவருகின்றன. அவற்றில் சில நம்முடைய இறையியல் மாணவர்களின் கட்டுரைகளாக அமையவேண்டும்.

2. ஊடகப் புரட்சி

ஊடகங்கள் இன்று மனிதர்களின் மனங்களை ஊடுருவி, பல எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற கருவிகளாக மாறிவிட்டன. ஊடகத் துறையில் மாணவர்களுக்குப் பயிற்சிகள் தரப்படுகின்றன. ஆனால், திருஅவையின் பணிகளும், நிர்வாகச் சிக்கல்களும் தனித்திறமைகளை வளர்க்க விடுவதில்லை. யாருக்குத்தான் குடும்பம் இல்லை! யாருக்குத்தான் அடித்தள அமைப்புரீதியான செயலாக்கங்கள் இல்லை! எனவே, சராசரி செயல்பாடுகளைக் கடந்து ஊடகத்துறையில் ஒளிவீசும் படைப்பாளிகளாக நமது மாணவர்களும் அருள்பணியாளர்களும் உருவாகவேண்டும்.

எந்தத் துறையில் இத்தனை ஆண்டுப் பயிற்சிகள்? ஒருவர் அருள்பணியாளர் ஆவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பயிற்சிகள் தரப்படுகின்றன. பல்வேறு பயிற்சியாளர்கள் தயாரிக்கப்படுகின்றனர். இத்தனை சிரமத்துடன் தயாரிக்கப்படுபவர்கள் சமுதாயத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒதுங்கிப்போவது என்ன நியாயம்? உந்திச் செல்லும் ஊடகங்களை மிஞ்சும் அளவிற்கு அவர்களின் படைப்பாற்றல் வெளிவர வேண்டாமா? திரைப்படம், தொடர்புக் கருவிகள், இசை, நாடகம் போன்ற துறைகளில் மக்கள் கலை இலக்கிய கழகங்கள் செய்கின்ற பணியைவிடச் சிறப்பாகச் செயல்பட வேண்டாமா? இவையெல்லாம் நேர்மறையான கனவுகள்.

3. சமய நல்லிணக்க இயக்கங்கள்

இன்று 'சமயம்' என்ற பெயரில் வெறுப்புணர்வையும் வன்முறைகளையும் வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் இந்தியாவில் வளர்ந்து கொண்டே வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தச் சமய உரையாடல்களும் சமய நல்லிணக்கங்களும்தான் சரியான வழிமுறை. ஏதோ ஒரு சிலர் செய்யும் நாச வேலைகள் ஒட்டுமொத்த சமுதாயத்தின் உருவகமாகக் காட்டப்படுகின்றன. இதனை எதிர்த்து நல்ல மனம் கொண்ட அத்தனை சமயத்தினரோடும் இணைந்து

செயல்படுவது காலத்தின் கட்டாயம். அதற்கான பயிற்சியும் பக்குவமும் 'தற்கடப்பு' ஆன்மிகமும் நமது இறையியல் கல்லூரியின் பயிற்சி முறைகளிலேயே தொடங்க வேண்டும், தொடர வேண்டும்.

4. மனித நேயப் பார்வைகள்

சமயம் கடந்து மனித நேயத்தை சமுதாயத்தில் விதைக்கின்ற பாதையில் இன்று நமது அருள்பணிப் பயிற்சிகள் சென்று கொண்டிருக்கின்றன என்பது உண்மை. இந்தச் சீர்மிகு பயணங்கள் இன்னும் ஆழமாக, அதிகமாகத் தொடரவேண்டும். நாம் கத்தோலிக்கத் தன்மை கொண்டவர்கள். நாடுகள், மொழிகள், பண்பாடுகள் கடந்து மக்களின் உள்ளங்களைத் தொடர்பு கொள்ளும் இனிய கலைக்குச் சொந்தக்காரர்கள். 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்' என்பது வள்ளுவரின் பார்வை. மனித குலத்தை ஒருங்கிணைத்துக் செல்லும் அணுகுமுறைகளை முன்னேடுக்கும் பணியாக அருள்பணிப் பயிற்சியினை உருவாக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

5. இயேசுவின் புதிய வார்ப்புகள்

இறுதியாக, இயேசுவின் இறையாட்சிக் கனவுகளைத் தொட்டுப் பார்க்கின்றேன். மூன்று ஆண்டுகளில் அவர் செய்த பணிகள் இந்த உலகை இன்றும் புரட்டிப் போடுகின்ற பணிகளாக இருக்கின்றன. அவரின் ஆளுமை, திட்டமிடுவது, தீர்க்கமான கருத்துகள் இன்றைய உலகில் உள்ள மக்களின் வாழ்க்கையில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. அத்தகைய தாக்கங்களை ஓரளவு உருவாக்கி உலக அரங்கில் அதிர்வுகளை ஏற்படுத்தும் அருள்பணியாளர்கள் இந்தக் கல்லூரியிலிருந்து உருவாக வேண்டும். உள்ளத்தில் இயேசுவாக, பணியில் பவுலாகப் பரிணமிக்கும் உயர்நிலைக்கு இந்தப் பவுல் இறையியல் கல்லூரி மாணவர்களை அழைத்துச் செல்ல வாழ்த்துகிறேன்.

அசிசி பிரான்சிசின் இறைவேண்டல்

இறைவா, என்னை உமது அமைதியின் கருவியாக்கும்;
எங்கு பகைமை நிறைந்துள்ளதோ அங்கு அன்பையும்
எங்கு கயமை நிறைந்துள்ளதோ அங்கு மன்னிப்பையும்
எங்கு ஐயம் நிறைந்துள்ளதோ அங்கு பற்றுறுதியையும்
எங்கு அவநம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியையும்
எங்கு மனக்கவலை உள்ளதோ அங்கு அகமகிழ்வையும்
விதைத்திட அருள்புரியும்.
என் இறைவா,
ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும்
புரிந்துகொள்ளப்படுவதைவிட பிறரைப் புரிந்து கொள்ளவும்
அன்பு செய்யப்படுவதைவிட பிறரை அன்பு செய்யவும் வரமருள்வாய்.
ஏனெனில்,
கொடுப்பதில் யாம் பெறுவோம்;
மன்னிப்பதில் மன்னிக்கப் பெறுவோம்;
இறப்பதில் நிலை வாழ்வடைவோம். ஆமென்

புனித பவுல் இறையியல் கல்லூரியின் தமிழ் வளர்ச்சி – தமிழ்ப் பண்பாட்டுக் கொடை



பேராசிரியர் முனைவர் அ. அந்தோனி குருசு
மேனாள் தமிழாய்வுத் துறைத் தலைவர்
புனித வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

100 ஆண்டுகள் என்பது ஒரு யுகத்தின் பகுதி – புனித பவுல் இறையியல் கல்லூரி அதன் வளர்ச்சி வரலாற்றில் இம்மண்ணின் முதன்மைச் செவ்வியல் மொழியாகிய தமிழில், பயிற்று மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவதில், ஒரு பாய்ச்சலை நிகழ்த்தியதை நினைவுகூருவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம். தொட்ட குறை – விட்ட குறை என எண்ணற்றவை இதில் உண்டு என்கிற கருதுகோளுடன் கருத்தாடல் தொடங்குகிறது.

வகைமை இறையியல்கள், இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளின் வரைவியல், திருஅவை வரலாற்றியல், *மறைஅருவி* சிற்றிதழியல் இவைபோன்ற பல்வேறு இயல்களிலும் முதன்மையான – முதல்தரமான – முதன்முதலான – முனைப்பான பதிவேடுகளைப் படைத்து உலகெங்கும் வாழ்கின்ற தமிழ்க் கிறித்தவ மக்களுக்கு என்றும் நெஞ்சில் காலத்தால் அழியாத கல்வெட்டுச் சித்திரமாகியது புனித பவுல் இறையியல் கல்லூரி.

ஐரோப்பியரின் தமிழ்ப் பணி பற்றி முனைவர் பட்ட ஆய்வு செய்த சேலம் அரசு கலைக் கல்லூரியின் மேனாள் முதல்வரும் என் பேராசானுமாகிய பேராசிரியர் கா. மீனாட்சிசுந்தரம் தமிழ் மொழியைச் சமய அடிப்படையில் வளர்த்தவருள் கிறித்தவச் சமயத்தார் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''அவர்கள் தொடாத பொருளில்லை; தொட்டவை ஒளிவீசின; நுழைந்தவை நுண்ணறிவை நல்கின. இவர்கள் நுழையும் வரை செய்யுட் பேராறுகளே ஓடின. உரைநடை நூல்கள் சிற்றோடைகள்போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன; அந்த ஓடைகள் எல்லாம் இப்போது சிற்றாறுகளாகவும் பேராறுகளாகவும் ஓடிக்கொண்டிருக்கின்றன எனில் எவர் மறுக்க இயலும்?''

புனித பவுல் பெயரைத் தாங்கிய இவ்இறையியல் கல்லூரியின் நூற்றாண்டு காலப் பேராசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் இறையியல், மறையியல், மறையுரையியல், மரியியல், கிறித்தியல், அறநெறியியல், பக்திப் பண்பாட்டியல் எனச் சமயப் பண்பாட்டியலுக்குக் காலந்தோறும் அளித்து வந்துள்ள பங்களிப்பு, தமிழியலுக்குப் புதுமையும் மரபின் வளமையும் மொழியின் செழுமையும் வாய்ந்தனவாக வாய்த்துள்ள நற்பேறுகள்.

''வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற தமிழ், நடைமுறைத் தமிழ்; அந்தத் தமிழைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதை வளர்ப்பதற்காக / மேம்படுத்துவதற்காக நாம் பாடுபடவேண்டும். இதுதான் இந்த நூற்றாண்டில் நம் தலையாய பணி.'' (முனைவர் பொற்கோ, *தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆட்சி,* ப.94). இதன் எதிரொலிப்பைப் பவுல் கல்லூரியின் மௌனத்தின் நாவுகளில் கேட்கவும் காணவும் முடியும். *பனித்துளியில் ஒரு பாற்கடல்* என்னும் தலைப்பில் எழுதப்பெற்ற நூலின் தலைப்பே நினைவில் தோன்றி வியப்புறுத்துகிறது. தமிழில் ''விரிப்பின்பெருகும் தொகுப்பின் எஞ்சும்'' என்னும் சான்றோர் மொழியே எஞ்சுகிறது. ஒரு முதுமுனைவர் பட்ட ஆராய்ச்சி செய்தாலும், முடிக்க முடியாத அளப்பரிய தமிழ் வழிப்பணிகள் ஏராளம்! *கிறித்தவத் தமிழ்க் கொடை* பற்றிய இரண்டு பெருந்தொகுதிகளை மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடுகளாக (பக். 367, 366) என் முதுகலைப் பேராசான் சூ. இன்னாசி ''80 தலைப்புகளில்'' பல்வேறு களங்களில் கண்டறிந்தவற்றை விளக்கமுறை அணுகுமுறையில் வெளிச்சப்படுத்தியுள்ளார்: புனித பவுல் கல்லூரியின் நூலகப் புதையலில் அவர் புகுந்து எதிர்கால எழுச்சிப் பயணிப்பின் முனைப்பாகச் செய்யத் தக்கதாகிறது.

இறையியல் சிற்றிதழ் மறை அருவி, அன்னம்

1996இல் அ.மா. சாமி *தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள்: ஓர் ஆய்வு* என்னும் நூலை வெளியிட்டார். 1500 கிறித்தவ இதழ்கள் உள்ளன என்று சுட்டினார். 140க்கு மேற்பட்ட இதழ்களின் (முகப்பு) படங்களைப் பதிப்பித்தார். இவற்றுள் *மறை அருவி* தனித்துவ இடம் பெறுகிறது. நூறாண்டு இதழ்களது பொதுப்போக்கைப் பின்வருமாறு மதிப்பிடுகிறார்

அறிஞர் கூ. இன்னாசி. ''கிறித்தவ இதழ்களுள் இலக்கிய இதழ்களாகவும் சமூக இதழ்களாகவும் குறிக்கப்பெற்றவை, கிறித்தவ நிறுவனங்களையோ, கிறித்தவ ஆசிரியர்களையோ சார்ந்தவை... பெரும்பான்மைக் கிறித்தவ இதழ்களில் கிறித்தவமே உயிர்நாடி ஆகும்'' (*கிறித்தவத் தமிழ்க்கொடை*, தொ. 2. ப.188). *அன்னம்* இறையியல் சிற்றேடு, காலக் குறிகள் காட்டும் திசைகாட்டி.

மறை அருவி இதழ் இறையியல் பேராசிரியர்களின், தமிழாய்வுத்துறைப் பேராசிரியர்களின் கூட்டு முயற்சியின் வழிகாட்டுதலில் வெளிவந்தது. பிழையற்ற தமிழ்நடையும் கட்டுரைகளும் ஆசிரியர்களது, இறையியல் பேராசிரியர்களது தள வித்தகம், திருஅவைக் கோட்பாட்டு விளக்கம் – திறனாய்வு, இறையியல் மாணவர்களே படைப்பாக்கம் செய்த எழுத்து எனப் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில், தமிழ் மணம் கமழ்ந்தது. தொண்ணூறுகளில் 'புனித பவுல்', 'புனித பேதுரு', 'திருஇதய' இறையியல் கல்லூரிகளது கூட்டு ஒருமைப்பாட்டில் பொறுப்பாசிரியர், குழு உறுப்பினர் அடையாளங்களுடன் ஆசிரியர் குழு இயங்கியது. அன்று நடைமுறை ''விளையாட்டு இறையியல்'' (a theology of play) என்ற பெயரில் ஒரு சில இறையியலார் சிந்தித்தது உண்டு. *''விளையாடும் மனிதன்''* (Man of Play) என்ற தலைப்பில் அருள்பணி. பவுல் லியோன் எழுதிய சிறுநூலில்... ''விளையாட்டு என்பது உடலும் உள்ளமும் ஒருங்கே இணையும் விதத்தில் மனிதர் ஈடுபடுகின்ற ஒரு செயல் எனலாம்... பேரின்ப நிலையைக் குறிப்பதற்குத் துன்பதுயர எல்லைகளுக்கு அப்பால் அகமகிழ்வு அளிக்கின்ற ஆனந்தக் கூத்தாகிய நடனத்தைக் காட்டுவது அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவாகும்'' எனக் குறிப்பிடுகிறார். 'ஒலிம்பிக் – 1996' என்னும் தலைப்பில் இவர் எழுதிய ஆசிரியர் உரை, 2021 ஒலிம்பிக் முடிந்துள்ள இத்தருணத்தில் நிச்சயமாகத் திரும்பிப்பார்த்துக் காலக்குறியின் பிரதிபலிப்பு வீச்சில் மறுவாசிப்புச் செய்யத் தூண்டுகிறது *முறை அருவி* (சூலை-செப்) 1996, ப. 104).

விவிலிய விருந்து *இறையியல்*

திருவிவிலியத்தைத் தமிழ் மக்களுக்கு நற்றமிழில் நனிசிறக்கக் கொண்டு செல்லும் மகத்தான பணியை 'அருள்வாக்கு மன்றம்' சாதனைச் சரித்திர முத்திரை பதித்த பணித்தடத்தின் சுடர்களது சுவடுகளாயின. ''ஒரு பத்திரிகை என்பது அதன் வாசகர்களின் ஆதரவோடுதான் நடைபெறுகிறது; எனவே நீங்கள் ஒவ்வொருவரும் *விவிலிய விருந்துக்குக்* குறிப்பிடத்தக்கவர்கள் என இன்றைய ஆயர் சூசைமாணிக்கம் அன்றைய *விவிலிய விருந்து* ஆசிரியர் வேண்டுகோள் விடுக்கும் பெட்டிச் செய்தி இடம்பெறுகிறது. 1999 மார்ச் – ஏப்ரல் இதழ் வழக்கத்துக்கு மாறாகப் பல வண்ணப்பட முகப்புடன் எருசலேமில் நடைபெற்ற குருத்து ஞாயிறு நிகழ்வினைச் சித்திரிப்புச் செய்கிறது.

அருள்பணியாளர்களான விவிலிய வித்தகர்களுடன், நூலாய்வுப் பொறுப்பாளர்களாகத் திரு. பா. வளன்அரசு என்னும் பொதுநிலைத் தலைவரான கிறித்தவக் காப்பியப் பேரறிஞரும் ஆசிரியர் குழுவுடன் ஒன்றிணைந்து சீரிய பணி செய்துள்ளார் (15 அக்.1994).

அருள்பணி. கு. அமிர்தராஜ் போன்றோர் ஞாயிறு சிந்தனைகள், தவக்கால ஞாயிறு, குருத்து ஞாயிறு, உயிர்ப்பு ஞாயிறு சிந்தனைகளைத் திருவிவிலியத் தளத்தில் நிறுத்தி, கிறித்தவர்களது வாழ்க்கையினைப் புனிதப்படுத்தும் விளக்கங்களை நல்ல மனத்தில் வீரிய விதைகளாக வித்திடக் காணலாம். இயேசுவின் உயிர்ப்பு – மீட்புப் பணியின் உறுதிப்பாடு பற்றியது: ''பாவமன்னிப்பு என்பது புதுவாழ்வுக்கான வாய்ப்பு... இந்த மன்னிப்புப் பணியைத்தான் இயேசு செய்தார்... பவுலடியார் சொல்வதுபோல மக்களிடையே இருந்த பிளவுச் சுவர்களை இடித்துத் தகர்த்தார், அதில் அவரும் உடைக்கப்பட்டார்'' (15, பிப்ரவரி 1997).

நற்றமிழில் நற்செய்தி – திருவிவிலியம் – பொது மொழிபெயர்ப்பு

கிறித்தவர்களது வேதநூல் திருவிவிலியத்தை நற்றமிழில் வெளிக்கொணரும் நோக்கத்துடன் 47 திருவிவிலிய வல்லுநர்களின் பல ஆண்டுகள் கடும் உழைப்பின் மூலம், பல அமர்வுகளில் 4000 சோதனைப் பதிப்புகள் (Trial Editions) வெளியிட்டு ஆர்வலர்கள், அறிஞர்கள், வித்தகர்கள் பலருக்கும் அனுப்பி, கருத்தறிந்து, சரிபார்த்து, உயர் மட்டக் குழுவான ஆயர்கள் இசைவு பெற்று திருவிவிலியம் வெளிவந்தது; ஒளிதந்து கொண்டிருக்கிறது. இன்றுவரை தகவல் தொடர்பு

ஊடகங்களில் (Youtube, WhatsApp) எது சீரிய – சிறந்த – நல்ல தமிழ் மொழிபெயர்ப்பு என்கிற கருத்தாடலை விவிலியப் பள்ளிகளிலும் விவிலியக் கல்லூரிகளிலும் கற்பிப்போர் வினா எழுப்பி வருகின்றனர்.

அருள்பணி. கு. எரோணிமுசு புனித பவுல் இறையியல் கல்லூரியின் விவிலியப் பேராசான். 'பொருள் தெளிவே குறிக்கோள்' என்னும் தலைப்பில் அவர் *விவிலிய விருந்து* இதழில் எழுதிய கட்டுரை தெளிதமிழ் மொழிபெயர்ப்புப் பண்பாட்டுக்கு விளக்கம் தருகிறது. சான்றுகள் சில:

- ஒளியைச் சார்ந்தவர்கள் (Sons of light), அமைதியை விரும்புவோர் (Sons of peace), அரசுக்கு உரியோர் (Sons of kingdom), இடியைப் போன்றோர் (Sons of thunder).
- 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்' என்பது பழைய மொழிபெயர்ப்பு. 'அவரது செல்வாக்குப் பெருக வேண்டும்; எனது செல்வாக்கு குறைய வேண்டும்' (யோவா 3:30) என்பது பொது மொழிபெயர்ப்பு.

இவற்றைப்போன்ற பல சான்றுகளால் பொது மொழிபெயர்ப்பில் தமிழின் எளிமை, தெளிவு, துல்லியம், ஆழம், பொருட்செறிவு, புரிதல் முதலிய பல பரிமாண உன்னதங்கள் சிறந்த படைப்பாக்கமாகத் திகழ்கின்றன.

புனித பவுல் இறையியல் கல்லூரி *விவிலிய விருந்து* இதழ்க் குழுவின் போற்றத்தக்க பணி. திருவிவிலிய ஆணைக் குழுத்தலைவரும், மேனாள் பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியரும், ஆயருமான மேதகு செ. சூசைமாணிக்கம், தமிழக விவிலியக் குழுத் தலைவர், பணி. கு. எரோணிமுசு பதிப்புக் குழுப் பொறுப்பாளர் முறையில் கிளெரிசியத் தொடர்பகத்துடன் இணைந்து, ''விவிலிய மரபுகள் மாறாமல், கருத்துத் தெளிவு, பண்பாட்டு வளம், உணர்வுகள் போன்ற பரிமாணங்களில் செம்மையும் செழுமையுமாக்கி'' விளக்கக் குறிப்புகளுடன் பதிப்பித்துள்ள 'விளக்கவுரை திருவிவிலியம்' கூட்டுமுயற்சியின் அருங்கனி. 2009 முதல் 2016க்குள் ஐந்து பதிப்புகள் கண்டது.

திருவிவிலிய விளக்க நூல்கள்

கிறித்தவத் திருஅவைகளுக்கு இடையே நல்லிணக்கம், கருத்து ஒற்றுமை, நல்லிசைவு முதலியன காலத்தின் கட்டாயத் தேவை. இதனை நடைமுறையாக்குவது கிறித்தவ ஒன்றிப்பு உரைப் பதிப்புகள் – வெளியீடுகள். புனித பவுல் இறையியல் கல்லூரியின் அருள்வாக்கு மன்றமும், அரசரடி இறையியல் கல்லூரியின் தமிழ் இறையியல் நூலோர் குழுவும் ஒன்றிணைந்து விவிலிய விளக்க உரைகளை வெளியிட்டுள்ளன. *தொடக்க நூல்* முதல் *திருவெளிப்பாடு* வரை 45 விளக்க உரைகளைத் தமிழ்க்கூறு நல்லுலகம் தனக்கான கிறித்தவம் தந்த விலைமதிக்க இயலாக் கருவூலமாகப் பெற்றுள்ளது. இதனால் அரசரடி இறையியல் கல்லூரியின் விவிலிய வித்தகர் மேமிகு தியான் சந்த் கார் போன்றோரின் ஒன்றிய சிந்தனை ஜக்கியத்துக்கு ஒளியேற்றுகிறது.

எந்த ஒரு திருவிவிலிய நற்செய்திப் பகுதிக்கும் அதன் பின்புலம் சுட்டப்பெறுகிறது. 'பின்புலம்' இல்லாமல் மூல பாடம் இல்லை என்பது அறிஞர் மொழி (There is no text without a context). ஒவ்வொரு சொற்றொடரும் எப்போது? எங்கே? என்ன? ஏன்? யார் கூற்று என்னும் பரிமாணங்களில் 'சொல்விளக்கம்' தரப்பெறுகிறது. தொடர்ந்து அதன் 'செம்பொருள்', அதனோடு தொடர்புடைய கருத்துகள் ஒப்புநோக்கி, அறிந்து, புரிந்து, தெரிந்து, பொருத்திக் காட்டும் முறைமையில் விளக்கம் விரிவாக்கமாகிறது.

உயிர்த்த இயேசு சீடரை விட்டுச் சென்ற கூழல் இயேசுவின் இரண்டாம் வருகை குறித்துப் பல ஐயங்களை எழுப்பியது. அது குறித்துப் பலர் கிறித்தவ நம்பிக்கை பற்றி நகையாடினர்; அதற்கு அருள்பணி. கு. எரோணிமுசு தரும் திட்பநுட்பத் துல்லிய விளக்கம் ஆழமும் தெளிவும் உடையது; ''இயேசுவின் வருகை என்றோ ஒரு நாள் வரப்போகும் ஒன்றல்ல! இரண்டாம் வருகையின்போது நடைபெறவேண்டிய தீர்ப்பு, நிலைவாழ்வு, இறை மகப்பேறு போன்றவை ஏற்கெனவே நிகழ்வுக்கு வந்துவிட்டன... அவர் ஏற்கெனவே துணையாளர் வடிவில் கிறித்தவர்களின் உள்ளத்தில் வந்துவிட்டார்'' (யோவான் அதி 16, ப.345).

கிறித்தவக் கலைச்சொற் களஞ்சியம்

''சொல்லாராய்ச்சி ஒரு தனிக் கலை'' என்பார் பாவாணர். தமிழிற் கலைச்சொற்களாக்கும்போது ஏற்கெனவே ஆங்கில நேர் தென்சொற்களிருக்குமாயின் எளிதாக மொழிபெயர்த்துக் கொள்ளலாம். அங்ஙனமில்லாதவிடத்து மட்டும்

புதுச்சொற்கள் புனையப்படும். அப்புனைவுக்கான நெறிமுறைகளை 20 சான்றுகள் காட்டி எழுதியுள்ளார் (*மொழியாராய்ச்சிக் கட்டுரைகள், கலைச்சொல்லாக்க நெறிமுறைகள்*, ப. 105-108). கிறித்தவக் கலைச் சொற்கள் ''களஞ்சியம்'' என்று போற்றத்தக்க ஓர் ஆக்கத்தை ஆங்கிலம்-தமிழ், தமிழ்-ஆங்கிலம் இயக்காற்றல் மிக்க நிகரன்கள் என முறையே பக்கங்கள் 79, 173 என்னும் அளவில் அருள்பணி. தே. அல்போன்சு, ஆயர் செ. சூசைமாணிக்கம், ஆயர் சூ. நசரேன் ஆகியோர் தொகுப்பு 2016இல் வெளியிட்ட மாபெரும் கொடையைத் தமிழ் பெற்றுள்ளது. தமிழ்மொழியில் புதுப்புதுச் சொற்களின் தோற்றமும் சொற்பொருள் மாற்றமும் இடையறாது பெற்றுவருவதே அதன் இளமைக்கும் வளமைக்கும் முதன்மைக் காரணி. (ப்ராவாணர் நோக்கில்) மொழித் தூய்மை, கருத்துத்தெளிவு, எளிமை ஆகியவற்றுக்கு முன்னுரிமை தந்து செய்த தமிழ்க் கலைச்சொல்லாக்க வரலாற்றில் முத்திரை முனைப்பாக்கமாகிறது (அணிந்துரை, மேதகு ஆயர் செ. சூசைமாணிக்கம், ப.iv).

கட்டுரைப் படைப்பாக்கம் – வரலாற்றின் வரலாறு

திருஅவை வரலாறு எட்டுத் தொகுதிகளாக முதன்முதலில் அருள்பணி. மை. வில்லியம் லூர்துராசு ஒருங்கிணைப்பில் ஒன்பது ஆசிரியர்கள் படைப்பாக்கச் செழுமை சிறக்கச் செந்தமிழில் வெளிவந்தது. ''மண்ணுக்குப் புகழ் சேர்த்த தமிழ்ப்படைப்பு, தனித்தமிழ் நடையில் கிடைத்த கனி'' என்கிற பாராட்டுப் பெற்றது.

ஆய்வரங்க உரைத் தொகுப்பாக அருள்பணி. இ. ரெய்மண்ட் ஜோசப் வெளிக்கொணர்ந்த *இரண்டாயிரத்தில் பவுல்*, அருள்பணி. எஸ். தேவராஜின் *காலச்சுவடுகள், தளிர்க்கும் பிழம்புகள்* எழுதிய அறிஞர் அருள்பணி. பெலிக்ஸ் வில்பிரட் ஆக்கம் ஒரு நற்கனி. அறநெறிப் பேராசிரியர் அருள்பணி. ச.தே. செல்வராசுவின் தெரிவுசெய்த படைப்புகளாக அ. மார்க்சு தொகுத்த *விடுதலையின் பாதைகள்*, அருள்பணியாளர்கள் தே. அல்போன்சு, சூ. சந்தியாகுராசா, அ. மரிய அருள்ராஜா. சே.ச. தொகுத்த *தமிழ் இறையியல் தேடல்களும் திசைகளும்*, ஆயர் ஸ்டீபன் தொகுப்பில் *பவுல் ஒரு பன்முகப் பார்வை*, தொகுப்பிலக்கியம் என்னும் புதுச்சொல் நெறியின் புத்தாக்கமே! உலகின் முதல் தன்வரலாறு – தமிழில் அருள்பணி. யேசு கருணாநிதியின் *ஒப்புகைகள்* – அரிய தமிழ் ஆக்கமே! தொகுப்பாசிரியர் அருள்பணி. லூ. ஜீவராஜின் *நலவாழ்வு அறநெறி* கோவிட்-19 மரணத்துக்குமுன் அவர் விட்டுச்சென்ற அவரது கடைசி மூச்சின் வீச்சுப் பதிவுகளின் தேடல் வெளியீடு.

நிறைவாக

திருவிவிலியக் கண்காட்சி நடத்திய நிகழ்வு இறையியல் கல்லூரி வரலாற்றில் ஒரு மைல்கல். இறைச்சொற்றெடர்கள், திருத்தூதர்கள் போன்றவற்றை ஒளிப்படங்களாக, ஓவியங்களாக, ஆவணப்படங்களாக, இலக்கியமயமாக்கப் பதிவிறக்கங்களாக (Digital Downloads), வகைமை நோக்கில் சமயம் கடந்து மக்கள் பார்வையிடக் காட்சித்தகவல் கலையைத் தமிழ்வடிவில் ஆன்மிக விருந்து படைத்தமையால் திருவிவிலியப் பொதுமொழிபெயர்ப்பு நூல்கள் கண்காட்சி நாளில் அனைத்தும் விற்றுத்தீர்ந்தன. நற்றமிழ் இறைவார்த்தை அனைத்து இல்லங்களுக்கும் சென்று சேர்ந்த சாதனைச் சரித்திரமே! இறையியல் மாணவர்கள் கூட்டுப் பங்களிப்பு அவர்களது கலைத்திறன்களது ஒருங்கிணைப்பு.

- செந்தமிழில் வெளிவந்துள்ள திருவிவிலிய விளக்கவுரைகள் (45) தமிழ்கல்வி கற்பிக்கப்பெறும் 193 நாடுகளில் தமிழ் வாழும் மக்களுக்கு வாய்த்த அருங்கொடை.
- தேடல் வெளியீடுகள் ஒவ்வொன்றும் சமகாலச் சிக்கல்களுக்குத் தீர்வுகள் காணும் தமிழ்-தமிழர் மெய்யியல் புத்தாக்கப் பதிப்புகள்!
- பெண்ணிய இறையியல் நோக்கில் கற்றல்-கற்பித்தல்-நூலாக்கம் செய்தல் முறைமைகள் பாலியல் சமத்துவப் புதுவழிகள்!
- தலித்திய இறையியல் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான மனப்பதிவுக்கான பாடம்!
- முதுகலை இறையியல் (Licentiate) அருள்பணி மாணவருக்குத் 'தமிழ்ப்பண்பாடு' பயிற்றுவிக்க இக்கட்டுரையாளர் பெற்ற வாய்ப்பு!

பொதுநிலையினர் உருவாக்கத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரி



திருமிகு பொன். இலாரன்ஸ்
தமிழ் இறையியல் மன்றம்
திருச்சிராப்பள்ளி

''திருஅவை ஆட்சியாளரோடு எங்கு உண்மையான பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ அங்குத் திருஅவை உண்மையாகவே நிறுவப்படவுமில்லை, முழுமையாக வாழவுமில்லை, மனிதர் நடுவே கிறிஸ்துவின் நிறை அடையாளமாகத் துலங்கவுமில்லை எனச் சொல்லலாம்.... எனவே, ஒரு குழுமத்துக்கு அடித்தளம் அமைக்கும்போதே அங்கு முதிர்ச்சி பெற்ற கிறித்தவப் பொதுநிலையினரை உருவாக்க மிகவும் தனிப்பட்ட கவனம் செலுத்தவேண்டும்'' (*திருஅவையின் நற்செய்திப் பணி*, 21).

இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளையும் திருஅவைப் போதனைகளையும் பொதுநிலையினருக்குத் தெரியப்படுத்தி அவர்களுக்குப் பலவிதமான பயிற்சிகள் அளித்து முதிர்ச்சியும் ஈடுபாடும் அர்ப்பணமும் கொண்ட பல பொதுநிலையினரை உருவாக்கியதில் திருச்சி, புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களின் பணி மிகவும் பாராட்டப்படவேண்டியதாக நான் காண்கின்றேன்.

நாற்பது ஆண்டுகள் உறவு

நூற்றாண்டு விழாக் காணும் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களோடு சென்ற நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எனக்குத் தொடர்பும் உறவும் உண்டு. புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களால் பொதுநிலையினருக்குப் பவுல் இறையியல் கல்லூரியிலும், திருச்சி மறைமாவட்ட அளவிலும், சில பங்குகளிலும் நடத்தப்பட்ட பல பயிற்சிகள், ஆய்வரங்குகள், இறையியல் கருத்தரங்குகள் ஆகியவற்றில் பங்கேற்று நானும் என்னைப்போன்ற பல பொதுநிலையினரும் சான்றும் பட்டயமும் பெற்றுள்ளோம் என்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறாகப் பொதுநிலையினர் உருவாக்கத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் மேற்கொண்ட ஒரு சில பணிகளைப் பற்றிப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்கின்றேன்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் 1965ஆம் ஆண்டு டிசம்பரில் முடிவுற்றதும் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழில்தான் சங்க ஏடுகளை மொழிபெயர்த்து 1967இல் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் வெளியிட்டார்கள். அதேபோன்று 1983இல் வெளியிடப்பட்ட புதிய திருஅவைச் சட்டத்தொகுப்பினைத் தமிழில் மொழிபெயர்த்து 2005இல் வெளியிட்டதும் இக்கல்லூரிப் பேராசிரியர்கள்தாம் என்பதும் பெருமைக்குரிய வரலாற்று நிகழ்வாகும். அதனால் அநேக பொதுநிலையினர் சங்க ஏட்டினையும், புதிய திருஅவைச் சட்டத்தினையும் படித்துப் புரிந்துகொள்ள முடிந்தது.

இறையியல் தொடர் வகுப்புகள்

1982-1984ஆம் ஆண்டுகளில் ''ஒத்தமை நற்செய்தி'' பற்றிய தொடர் வகுப்புகள் திருச்சி நல்லாயன் நிலையத்தில் பொதுநிலையினருக்கு இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களால் நடத்தப்பட்டன. இதில் 100க்கும் அதிகமான பொதுநிலையினர் பங்கேற்றனர். இறுதியில் 70 நபர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1988-1990களில் பொதுநிலையினருக்கு முதல் முறையாகத் திருச்சி நல்லாயன் நிலையத்தில் இறையியல் பட்டயப் படிப்புக்கான வகுப்புகள் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களால் நடத்தப்பட்டன. பயிற்சி முடிவில் 33 நபர்களுக்குப் பட்டயம் வழங்கப்பட்டது.

திருச்சி மறைமாவட்டத்திலும், வேறு பல மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும், பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் பொதுநிலையினருக்கு விவிலியம், இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகள், இறையியல் போன்ற பாடங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்திப் பொதுநிலையினருக்கு விழிப்புணர்வும், திருஅவைப் பணிகளில் ஆர்வமும் உண்டுபண்ணியது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

பொதுநிலையினர் உருவாக்கம்

தமிழகப் பொதுநிலையினர் பணிக்குழு உருவாக்கப்பட்டபோது பணிக்குழு வழியாகப் பொதுநிலையினர் உருவாக்கத்திற்கு என்னென்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்ற திட்டமிடுதலிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் பவுல் கல்லூரிப் பேராசிரியர்கள் வழிகாட்டினார்கள். மேலும், பொதுநிலையினர் பணிக்குழு நடத்திய பயிற்சிகளில் பேராசிரியர்கள் பலர் கருத்தாளர்களாகக் கருத்துரைகள் வழங்கிப் பல பொதுநிலையினரை உருவாக்கியுள்ளனர். அதே போன்று தமிழகப் பொதுநிலையினர் பணிக்குழு நடத்திய அஞ்சல் வழி இறையியல் கல்விக்குத் தேவையான பாடக் குறிப்புகள், கட்டுரைகள் தயாரிப்பதிலும் தொடர்புக் கருத்தரங்குகளில் கருத்தாளர்களாக வகுப்புகள் நடத்துவதிலும் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களின் பணி மறக்கமுடியாத ஒன்று. இதனால் பொதுநிலையினர் பலர் தமிழகத்தில் அனைத்து மறைமாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சிறப்பாகச் சொல்வதென்றால், புனித பவுல் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் பலர் பெங்களூர் தேசிய நடுநிலையம் நடத்திய தமிழ்க் கருத்தரங்குகளிலும் அதிகமான ஈடுபாட்டுடன் பொதுநிலையினருக்குப் பயிற்சி வழங்கியது எங்களுக்கு மறக்க முடியாத நிகழ்வாக உள்ளது.

புதிய திருஅவைச் சட்டப்படி பொதுநிலையினர் பங்கேற்பு அமைப்புகள் குறித்தும், சிறப்பாகப் பங்கு அருள்பணிப் பேரவை குறித்தும் ஒரு வழிகாட்டிக் கையேட்டினை இந்திய கிறித்தவ மறுமலர்ச்சி இயக்கம் 1987ஆம் ஆண்டு வெளியிட்டது. அதற்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டுதல், கூட்டம் நடத்த இடம் போன்றவற்றைப் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் வழங்கி உதவியது மறக்க முடியாத ஒன்று.

2005ஆம் ஆண்டு தொடங்கி 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து புனித பவுல் இறையியல் கல்லூரியில் கல்லூரிப் பேராசிரியர்களால் பொதுநிலையினருக்கு இறையியல் தொடர் வகுப்புகள் ஒவ்வொரு திங்கள் அன்றும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடத்தப்பட்டது. 2005-2007ஆம் ஆண்டு முதல் குழுவில் 175க்கும் அதிகமான பொதுநிலையினர் திருச்சி, குடந்தை, தஞ்சை ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து பங்கேற்றனர். தொடர்ந்து விவிலியம், இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், மரியியல், புதிய திருஅவைச் சட்டம், பொதுநிலையினரின் கடமைகளும் உரிமைகளும், திருஅவையின் சமூகப் போதனைகள், பங்கேற்பு அமைப்புகள் போன்ற தலைப்புகளில் சிறந்த பேராசிரியர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டன. திருச்சி மறைமாவட்டப் பொதுநிலையினர் பணிக்குழுவின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற ஒவ்வொரு பயிற்சி முடிவிலும் பங்கேற்றோருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தமிழ் இறையியல் மன்றம்

சமூகத்தில் நிலவும் சமூக, சமய, பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் சீரழிவுகளை ஆய்வு செய்யவும் இறையியலாக்கம் செய்யவும் தீர்வுகளைப் பரிந்துரைக்கவும் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களால் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுதான் தமிழ் இறையியல் மன்றம். இது ஒவ்வோர் ஆண்டும் இரண்டு நாட்கள் தமிழகத்திலுள்ள ஏதாவது ஓர் இறையியல் கல்லூரியில் ஆய்வரங்கம் நடத்தி, பொதுநிலையினரிடையே சமுதாயச் சிந்தனை வளரவும் நீதியான சமுதாயம் உருவாக்கும் ஆர்வம் வளரவும் வழிவகுத்துள்ளது. இந்த மன்றம் ஒவ்வோர் ஆண்டும் அன்றையச் சூழலுக்கு ஏற்ப ஒரு தலைப்பில் ஆய்வு உரைகள், கருத்துப் பகிர்வு, குழு ஆய்வு இறையியலாக்கம் போன்றவை வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்திவருகின்றது.

சிறப்பாக, புனித பவுல் இறையியல் கல்லூரி மாணவர்களின், திருத்தொண்டர்களின் பணி மறக்க முடியாத ஒன்று. சுற்றியுள்ள கிளைப்பங்குகளில் மாணவர்களுக்கு மறைக்கல்வி போதித்தல், வீடு சந்தித்தல், நோயுற்றோருக்கு உதவுதல், பங்குப் பணியாளருக்கு உதவுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு பங்கு வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

தமிழகப் பெண்கள் பணிக்குழு, திருச்சி மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழு உருவாக்கத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் உதவியுள்ளார்கள். திட்டமிடுதல், பெண்ணிய இறையியல் உருவாக்கப் பாடங்கள் தயாரித்தல், வகுப்புகள் நடத்துதல் என அனைத்து நிலைகளிலும் உதவியுள்ளார்கள். பெண்களுக்கான கருத்தரங்குகளில் பேராசிரியர்கள் பங்கேற்று அவர்களின் உருவாக்கத்தில் ஆர்வம் காட்டியதும் மறக்கமுடியாத ஒன்று.

புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் ஒவ்வோர் ஆண்டும் ஒன்று அல்லது இரண்டு ஆய்வரங்குகள் நடத்தி அதில் அநேக பொதுநிலையினரை பங்கேற்கச் செய்வதை எங்களுக்கெல்லாம் மிகவும் பயனுள்ள ஒன்றாகப் பார்க்கின்றேன். இது காலச் சூழலுக்கு ஏற்ற தலைப்புகளில் நடைபெறும். இதில் அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், இறையியல் கல்லூரி மாணவர்கள், இருபால் பொதுநிலையினர் அதிகமாகப் பங்கேற்பர். இவ் அமர்வுகளில் எங்களின் கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்படுவது எங்களுக்கு மகிழ்சியே. இதில் நடைபெறும் குழு ஆய்வில் திருஆட்சியரோடும் குருமாணவர்களோடும் பொதுநிலையினராகிய நாங்கள் பங்கேற்பது எங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாகும்.

இன்னும் பொதுநிலையினர், திருஅவை பற்றிய தகவல்களையும் போதனைகளையும் அறிந்துகொள்ளும் விதத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்களால் நடத்தப்படும் அருள்வாக்கு மன்றம், தேடல் வெளியீடுகள் போன்றவை வழியாக விழிப்புணர்வு பெறுகிறோம்.

இவ்வாறு பொதுநிலையினர் உருவாக்கத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரிப் பேராசிரியர்கள் பலர் தங்களது மதிப்பு மிகுந்த நேரத்தையும் உழைப்பையும் பொதுநிலையினருக்காக முகமலர்ச்சியோடு வழங்குவதை எங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதுகிறோம். பொதுநிலையினராகிய நாங்கள் நன்றி சொல்லிப் பாராட்டி வணக்கம் செலுத்துகிறோம். புனித பவுல் இறையியல் கல்லூரியின் பணிகள் சிறக்க எங்களின் பாராட்டுகளும் இறைவேண்டலும் என்றும் உண்டு!

திருத்தூதர் பவுலின் அழைப்பு

அவர் புறப்பட்டுச் சென்று தமஸ்குவை நெருங்கிய போது திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்து வீசியது. அவர் தரையில் விழ, "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்று தம்மோடு பேசும் குரலொன்றைக் கேட்டார். அதற்கு அவர், "ஆண்டவரே நீர் யார்?" எனக் கேட்டார். ஆண்டவர், "நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல்; நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார். அவரோடு பயணம் செய்தோர் இக்குரலைக் கேட்டனர். ஆனால் ஒருவரையும் காணாமல் வாயடைத்து நின்றனர். சவுல் தரையிலிருந்து எழுந்தார். தம் கண்கள் திறந்திருந்தும் அவரால் எதையும் பார்க்க முடியவில்லை. எனவே அவர்கள் அவருடைய கைகளைப் பிடித்து அவரைத் தமஸ்குவுக்கு அழைத்துச் சென்றார்கள். அவர் மூன்று நாள் பார்வையற்றிருந்தார். அந்நாள்களில் அவர் உண்ணவுமில்லை குடிக்கவுமில்லை...

அனனியா அங்கிருந்து போய் அந்த வீட்டுக்குள் சென்று கைகளை அவர் மீது வைத்து, "சகோதரர் சவுலே, நீர் வந்த வழியில் உமக்குத் தோன்றிய ஆண்டவராகிய இயேசு நீர் மீண்டும் பார்வை அடையவும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படவும் என்னை உம்மிடம் அனுப்பியுள்ளார்" என்றார். உடனே அவருடைய கண்களிலிருந்து செதிள்கள் போன்றவை விழவே அவர் மீண்டும் பார்வையடைந்தார். பார்வையடைந்ததும் அவர் எழுந்து திருமுழுக்குப் பெற்றார். பின்பு சவுல் உணவு அருந்தி வலிமை பெற்றார் (தி.பணி 9:3-9, 17-19).

புனித பவுல் குருத்துவக் கல்லூரியிலிருந்து வெளியான நூல்கள்

1. *புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் வெள்ளிவிழா நினைவு மலர்* (1921 – 1946), 1946.
2. Mr. J.M.J. Fernando (Ed.), *Symposium on Social Order* (Silver Jubilee Memorial, Trichy), 1946.
3. நல்லாலோசனை மாதா கழகத்தார், *சொற்கடந்த சுந்தரி*, 1955.
4. நல்லாலோசனை மாதா கழகத்தார், *வாழ்விக்கும் வள்ளல்*, 1959.
5. அருள்பணியாளர்கள் குருசு எம். எரோணிமுசு & பவுல் லியோன் வறுவேல் (தொகு.), *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்*, 1967.
6. அருள்பணி. தே. அல்போன்சு, *கடவுள் சொன்ன கதை*, 1969.
7. *புனித பவுல் குருத்துவக் கல்லரியின் பொன்விழா நினைவு மலர்* (1921–1971), 1971.
8. *பொன்விழா நினைவுத் தொகுப்பு*, 1971.
9. *திருப்புகழிசை* (பொன் விழா நினைவு வெளியீடு), 1971.
10. Frs. X. Irudayaraj S.J. & L. Sundaram S.J. (Eds.), *Inter-Faith Dialogue in Tiruchirappalli*, 1978.
11. அருள்பணி. சேவியர் இருதயராஜ் சே.ச. (தொகு.), *பொங்கும் வாழ்வு*, 1978.
12. அருள்பணி. பெலிக்ஸ் வில்பிரட், *இதை என் நினைவாகச் செய்யுங்கள்*, 1979.
13. அருள்பணி. பவுல் லியோன் வறுவேல் (மொழிபெயர்ப்பு), *மனிதனின் மீட்பர்* (*Redemptor Hominis*), 1981.
14. அருள்பணி. ஜெ. சூசைமாணிக்கம் (மொ.பெ), *இரக்கம் நிறைந்த இறைவன்* (*Dives in Misericordia*), 1981.
15. அருள்பணி. பெலிக்ஸ் வில்பிரட், *தளிர்க்கும் பிழம்புகள்*, 1982.
16. அருள்பணி. பவுல் லியோன் வறுவேல் (மொழிபெயர்ப்பு), *மனித உழைப்பு* (*Laborem Exercens*), 1983.
17. அருள்பணி. எஸ். தேவராஜ், *வைகறை உயிர்ப்புகள்*, 1983.
18. அருள்பணி. பவுல் லியோன் வறுவேல் (மொழிபெயர்ப்பு), *குடும்ப வாழ்வு* (*Familiaris Consortio*), 1984.
19. திரு. அருள் செல்லதுரை, *இயேசுபிரான் பிள்ளைத் தமிழ்*, 1985.
20. *சங்கம் ஒரு தொடர் பயணம்* (Final Report of the Extra-Ordinary Synod of Bishops - 1985), 1987.
21. அருள்பணி. க. வலண்டைன் ஜோசப், *மானிடப் பூக்கள்*, 1987.
22. அருள்பணி. ச.தே. செல்வராசு, *புத்துலகம் படைக்கவே*, 1991.
23. அருள்பணி. ஒய். இருதயராஜ், *அன்புடைய நெஞ்சங்கள்*, 1993
24. அருள்பணி. அகஸ்தின் சே.ச., *நந்தவனத் தென்றல்கள்*, 1993.
25. அருள்பணி. தே. அல்போன்சு, *அன்பு இதயங்கள் இன்ப உதயங்கள்*, 1995.
26. அருள்பணி. ச.தே. செல்வராசு (தொகு.), *பாறையைப் பிளக்கும் வேர்கள்*, 1996.
27. அருள்பணி. ஒய். இருதயராஜ், *புது வசந்தம்*, 1996.
28. அருள்பணி. தே. அல்போன்சு, *இறை அனுபவம்*, 2002.
29. அருள்பணியாளர்கள் ஒய். இருதயராஜ், இராயப்பன், அழகுசெல்வன் & நார்பர்ட் தாமஸ் (பதிப்பாசிரியர்கள்), *திருச்சபைச் சட்டத் தொகுப்பு*, 2005.
30. அருள்பணி. இ. ரெய்மண்ட் ஜோசப் (தொகு.), *இரண்டாயிரத்தில் பவுல்*, 2009.
31. அருள்பணி. இ. ரெய்மண்ட் ஜோசப் (தொகு.), *பவுல் ஒரு சகாப்தம்*, 2009.
32. அருள்பணி. பி.எஸ். செபாஸ்டியான் (தொகு.), *பணியே வாழ்வாக...*, 2010.
33. அருள்சகோ. எஸ். ஜெகன், *இதய சிறகுகள்*, 2010.
34. அருள்பணியாளர்கள் தே. அல்போன்சு, சூ. சந்தியாகு ராசா & மரிய அருள் ராசா சே.ச. (தொகு.), *தமிழ் இறையியல்: தேடல்களும் திசைகளும்*, 2011.

35. பவுலார், *தாயன்போடு*, 2011.
36. அருள்பணி. இ. ரெய்மண்ட் ஜோசப் (தொகு.), *உயிரின பன்மயம்*, 2011.
37. அருள்பணி. எஸ். பி. ஜான்சன் (தொகு.), *நூறாவது மலராகப் பூத்த தனிநாயகம் அடிகள்*, 2013.
38. பவுலார், *புதிய தடங்கள்*, 2013.
39. அருள்பணி. ச.தே. செல்வராசு, *எழுச்சி பெரும் மக்கள் சக்தி*, 2013.
40. அருள்பணியாளர்கள் சூ. சந்தியாகுராசா, ச. ஆரோக்கியராஜ் & வ. இரபேல் (தொகு.), *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் சுருக்கம்*, 2013.
41. அருள்பணி. எஸ்.பி. ஜான்சன் (தொகு.), *குடும்பமே ஒரு நற்செய்தி*, 2014.
42. அருள்பணி. எஸ்.பி. ஜான்சன் (தொகு.), *இவ்வுலகம் பேணுதலே இறைப்புகழ்ச்சி*, (*Laudato Si*), 2015.
43. அருள்பணி. சூ. சந்தியாகு ராசா & ஆயர் சூசைமாணிக்கம் (தொகு.), *இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய்* (*Misericordiae Vultus* and *Dives in Misericordia*), 2015.
44. அருள்பணி. சூ. சந்தியாகு ராசா (தொகு.), *திருஅவையின் சமூகப் போதனைகள்*, 2016.
45. அருள்பணியாளர்கள் சூ. சந்தியாகு ராசா, தே. அல்போன்சு, லா. டைனிசியஸ், ஜோ. விக்டர் & லூ. ஜீவராஜ் (தமிழாக்கம்), *அன்பின் மகிழ்ச்சி* (*Amoris Laetitia*), 2016.
46. அருள்பணி. ச. சேசுராஜ், *தொடக்ககாலத் திருஅவை* (கி.மு.4 – கி.பி.720), அருள்பணியாளர்கள் மை. வில்லியம் லூர்துராசு, சூ. சந்தியாகு ராசா & தே. அல்போன்சு (தொகு.), *திருஅவை வரலாறு*, பாகம் – 1, 2017.
47. அருள்பணி. தா. சேவியர் டெரன்ஸ், *திருஅவைத் தந்தையர் இயல், திருஅவை வரலாறு*, பாகம் – 2, 2017.
48. அருள்பணி. வில்லியம் லூர்துராசு, *இடைக்காலத் திருஅவை (720 – 1294), திருஅவை வரலாறு*, பாகம் – 3, 2017.
49. அருள்பணி. ஜா.மி. பெல்லார்மின் ச.ச., *சீர்திருத்தகாலத் திருஅவை (கி.பி. 1294 – 1648), திருஅவை வரலாறு*, பாகம் – 4, 2017.
50. அருள்பணி. மா. சூசை, *புதுக்காலத் திருஅவை (கி.பி. 1648 – 1878), திருஅவை வரலாறு*, பாகம் – 5, 2017.
51. அருள்பணியாளர்கள் தே. அல்போன்சு & சூ. சந்தியாகு ராசா, *இன்றையகாலத் திருஅவை (கி.பி. 1878 – 2017), திருஅவை வரலாறு*, பாகம் – 6, 2017.
52. அருள்பணி. ஞா. லெயோனார்டு சே.ச., *இந்தியத் திருஅவை, திருஅவை வரலாறு*, பாகம் – 7, 2017.
53. அருள்பணி. அ. திரவியம், *தமிழகத் திருஅவை, திருஅவை வரலாறு*, பாகம் – 8, 2017.
54. Fr. V. Gnanamuthu (Ed.), *Democracy and Religion: A Philosophical Appraisal*, 2018.
55. அருள்பணி. லூ. ஜீவராஜ் (தொகு.), *நலவாழ்வு அறநெறி*, 2018.
56. அருள்பணி. சூ. சந்தியாகு ராசா (தொகு.), *விவிலியத்தில் மறைத்தூதுப்பணி: இன்றைய சவால்களும் அணுகுமுறைகளும்*, 2018.
57. அருள்பணி. டைனிசியஸ் லாரன்ஸ் (தொகு.), *மாறிவரும் சூழலில் அருள்பணித்தளங்கள்: சவால்களும் வழிகாட்டுதல்களும்*, 2019.
58. அருள்பணி. வ. ஞானமுத்து (தொகு.), *மானுட உரிமைகள்: எதார்த்தங்களும் எதிர்பார்ப்புகளும்*, 2020.
59. அருள்பணி. மை. வில்லியம் லூர்துராசு (தொகு.), *விடியலின் வேர்களைத் தேடி*, 2020.
60. அருள்பணி. மை. வில்லியம் லூர்துராசு (தொகு.), *பெண் விடுதலை: ஓர் இறையியல் தேடல்*, 2022.
61. Fr. M. William Lourduraj (Ed.), *Priestly Formation: A Centenary Volume, Documentation and Chronicled History*, 2022.


தொகுப்பாளர்கள்

சகோ. **அ. பிரகாஷ்**

அருள்பணி. முனைவர் **மை. வில்லியம் லூர்துராசு**

பகுதி - 3

மலரும் நினைவுகள்
ஈடுபாட்டில் மலரும் பணிவாழ்வு
கலைவழியில் இறையாட்சிப் பணி



உருவாக்கப் பணியில் பவுல் கல்லூரி



அருள்பணி. டி. எல். சுந்தர்ராஜ்
திருச்சி மறைமாவட்டம்

ஏழு ஆண்டுகள்! ஆனால் ஓர் ஆண்டுபோல் பறந்தோடின. 1954ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆண்டுவரை! இயேசு அவைக் குருக்களால் உருவாக்கப்பட்டேன். அனுபவம் பெற்ற இயேசு அவைக் குருக்கள் ஏதோ கற்றுத் தந்தார்கள், சென்றார்கள் என்றில்லாமல் எங்களோடு ஒட்டி உறவாடிக் கற்றுத்தந்தவர்கள், உருவாக்கியவர்கள். அவர்களுடைய தொண்டு மனப்பான்மை, தன்னலமற்ற உழைப்பு, செப வாழ்வு, எளிமை, பொறுமை, கண்டிப்புடன் இணைந்த தாராள மனம், ஒற்றுமை நிறைந்த எடுத்துக்காட்டான வாழ்வு ஆகியவை என்னைக் கவர்ந்தன. அப்படிப்பட்ட உருவாக்கத்தில் நான் வளர்ந்தேன்.

நாங்கள் ஏறத்தாழ 150லிருந்து 200 பேர் பயின்றோம். இரண்டு பிரிவுகள் கொண்ட கூட்டு வாழ்க்கை! ஒரு பிரிவில் இறையியல் மாணவர்கள், மற்றொன்றில் மெய்யியல் மாணவர்கள். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, வட மாநிலங்களிலிருந்து வருகை தந்த மாணவர்கள் சேர்ந்து ஒரே குடும்பமாக வாழ்ந்தோம். அதனால் எங்களுடைய தொடர்பு மொழி ஆங்கிலம். இறையியல், மெய்யியல் மாணவர்கள் சேர்ந்து வாழ்ந்தாலும் தனித்தனியேதான் எங்கள் உறைவிடம்!

எல்லாவற்றிலும் நிர்வாகம் கண்டிப்பாக இருந்ததனால் கட்டுப்பாட்டுடன் வாழக் கற்றுக்கொண்டேன். அது எனக்குக் கடினமாகத் தெரியவில்லை. மறைக்கல்வி கற்றுக்கொடுக்க ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியே செல்வதைத் தவிர வேறு எங்கும் போகக்கூடாது என்ற நிபந்தனை. என் கூடப்பிறந்த அக்காவிற்குத் திருமணம் திருச்சியில்தான் நடந்தது. எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. படிப்பிலும் ஒழுங்குமுறைகளை அனுசரிப்பதிலும் கண்டிப்பாக இருந்தாலும் ஒவ்வொருவரின் திறமை, குணம் அறிந்து நடத்தப்பட்டோம்.

பொழுதுபோக்காக நகைச்சுவை நிறைந்த நிகழ்வுகள் நடத்தினோம். அதில் ஒன்று – சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நம் நாட்டு விழாக்களில் அணிவகுப்பு (Parade) நடத்தி அசத்தினோம். குருத்துவக் கல்லூரியே கூடி மகிழ்ந்தது. சுதந்திர தினத்தன்று திருச்சி ஆட்சியராக எங்களில் ஒருவர் காரில் வர நாங்கள் வரவேற்று, துப்பாக்கி ஏந்தி அணிவகுப்பு மேற்கொண்டோம். துப்பாக்கி என்றால் ஹாக்கி மட்டைதான் (Hockey Stick) எங்கள் தோளில்! நிர்வாகத் தந்தையர் பெருந்தன்மையோடு நகைச்சுவையாகவே அதையெல்லாம் எடுத்துக்கொண்டார்கள்.

நான் அன்னை மரியாவின் பக்தனாய் உருவாகியதற்குக் காரணம் குருத்துவக் கல்லூரியே! அருமையான, அழகுநிறை தோற்றத்தில் லூர்து அன்னை கெபி அமைந்திருந்தது. அங்கே நாங்கள் கூட்டமாகவோ தனித்தனியாகவோ சென்று வேண்டிக்கொள்வோம். நான் மக்கள் பாராட்டும் வண்ணம் மறையுரை ஆற்ற முடிந்ததற்குக் காரணம் குருத்துவக் கல்லூரியில் எனக்குக் கிடைத்த மறையுரைப் பயிற்சியே. பல மறைமாவட்டங்களிலிருந்து பல மொழி பேசும் சகோதரர்கள் இருந்ததனால், உணவறையில் உணவு அருந்தும்போது பேராசிரியர்களில் ஒருவர் மதிப்பீட்டாளராக (Moderator) எங்களோடு அமர்ந்து ஆங்கில மறையுரையைக் கேட்பார். அடுத்த நாள் அவரிடம் சென்று மறையுரையின் நிறைகுறைகளை அறிந்து கொள்வோம். இறுதியாகக் குருத்துவக் கல்லூரியின் கோவிலில் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிப் பங்குகளிலிருந்து திருப்பலிக்கு வரும் இறைமக்களோடு திருப்பலியில் அதே மறையுரையை ஆற்றிய பிறகும் பேராசிரியர் நிறைகுறைகளைத் திருத்துவார். இவ்வாறு நாங்கள் வழிநடத்தப்பட்டோம்.


அருள்வாழ்வில் பலம் பெற ஆன்மிக உரைகள், தியானங்கள், வழிகாட்டுதல்கள் இருந்தாலும், தனிப்பட்ட விதத்தில் அருள்வாழ்வு வழிகாட்டியை ஒவ்வொரு வாரமும் சந்தித்துப் பேசுவோம். அது குருத்துவ உருவாக்கத்தில் எனக்கு உதவியாக இருந்தது. உடற்பயிற்சியின்போது விளையாட்டுடன் மிதிவண்டிகளில் நெடுந்தூரம் பயணம் மேற்கொள்வது. வாடகை மிதிவண்டிகளை எடுத்துக்கொண்டு மைல் கணக்கில் பயணம் செய்வோம்! அந்த விதத்தில் நான் மிதிவண்டிகளில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, மணப்பாறை, மலையடிப்பட்டி, பூண்டி போன்ற இடங்களுக்குச் சென்று பயனடைந்தேன்.

இறையியல் மாணவர்கள் எப்பொழுதும் அங்கி அணிந்துதான் இருக்கவேண்டும். உள்ளேயும் வெளியே போகும்போதும் அங்கியில் இருக்கவேண்டும். விளையாடும்போதுகூட, விளையாட்டுக்கென அங்கி அணிந்து விளையாடினோம்! உணவு அருந்தக் கரண்டி, முள் கரண்டி பயன்படுத்துவது கட்டாயம். இது உணவு பரிமாறிக்கொள்ள உதவியாக இருந்தது. நாங்கள் சாப்பிட்ட தட்டுகள், குவளைகளைக் கழுவிச் சுத்தம் செய்து, ஒவ்வொன்றையும் துடைத்து அதற்கான அடுக்குத் தட்டுகளில் வைப்போம். பிற்கால வாழ்க்கைக்கு இவை எல்லாம் ஒரு முன்பயிற்சியாகவே இருந்தன.

அன்னைமேல் பக்தி உருவாகக் குருத்துவக் கல்லூரியில் லூர்து அன்னை கெபி காரணமாய் இருந்ததுபோல், நற்கருணை பக்தி உருவாகப் பவுல் குருத்துவக் கல்லூரியில் உள்ள எங்கள் உறைவிடக் கட்டடங்களை ஒட்டி இருந்த இல்லச் சிறுகோயில் (Domestic Chapel) காரணமாக அமைந்தது, அடிக்கடி நற்கருணைச் சந்திப்பு, நேரத்திற்கு தகுந்தாற்போல் மேற்கொண்டேன். நற்கருணைமுன் இறைவேண்டலில் அமர்ந்துவிட எனக்கு இவ்வாறு சிறப்பான பயிற்சி கிடைத்தது.

திருத்தொண்டர்களுக்குப் ''பிரியா விடை'' கொடுக்கும் நாள் அன்று மகிழ்ச்சியும் துக்கமும் கலந்த அனுபவம். குருமடமே அதிரும்படி அந்தப் பாடலைப் பாடுவார்கள். நெகிழவைக்கும் பாடல்! "God be with you till we meet again" (நாம் மீண்டும் சந்திக்கும்வரை கடவுள் உங்களோடு இருப்பாராக). திருத்தொண்டர்களாகிய நாங்கள் மேடையில் அமர்ந்திருக்க, இந்தப் பாடலைக் கேட்கும் அந்நேரத்தில் எங்கள் கண்களில் கண்ணீர்!

கல்வியிலும் இறையனுபவத்திலும் பயிற்சி பெற்ற மனநிறைவில் விடைபெற்றேன். 1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு மறைமாவட்டம் திரும்பினேன். மறைமாவட்டத்தில் நான் ஏற்ற எல்லாப் பணிகளிலும் சிறந்து விளங்கினேன் என்றால் அதற்குப் பவுல் குருத்துவக் கல்லூரி கற்றுத்தந்த பயிற்சியே காரணம் என்று சொல்லலாம். மறைமாவட்டத்தில் ஆயர் பணி தவிர்த்து மற்றப் பணிகளை ஏற்றுப் பொறுப்புணர்வுடன் செயலாற்றினேன். இன்று ஆயர் இல்லத்தில் ஓய்வு. இறைவனோடு ஒன்றித்து என்னை ஆண்டவர் அழைக்கும் நாளுக்காகக் காத்திருக்கிறேன். இயேசுவுக்குப் புகழ்! மரியே வாழ்க!



மேய்ப்புப் பணிக்கு உதவும் புனித பவுல் கல்லூரி



அருள்பணி. ஏ.வி. ஆரோக்கியசாமி
திண்டுக்கல் மறைமாவட்டம்

புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர் என்ற முறையில் நான் பெற்ற பயிற்சியின் பயன்களை எண்ணிப்பார்க்கிறேன். நன்றாக ஆங்கிலம் கற்றுக்கொள்ளத் தளம் அமைத்துக் கொடுத்தது குருத்துவப் பயிற்சி என்றால் மிகை இல்லை. அங்குக் கற்றறிந்த ஆங்கில அறிவு பன்முக அறிவைப் பல கோணங்களில் வளர்த்துக்கொள்வதற்கு உதவியது. ஆங்கில நூல்களைப் பிற்காலத்தில் பங்குத்தளங்களிலும் நிறுவனங்களிலும் வாசிப்பதற்கும் எழுத்துப்பணி செய்வதற்கும் கல்விப்பணி அல்லது கற்றுக்கொடுத்தல் பணி செய்வதற்கும் அது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. பல நூல்களை வாசித்ததன் விளைவாக ஆழமான, அழுத்தமான, வாழ்க்கையில் மாற்றமும் தாக்கமும் ஏற்படுத்தக்கூடிய மறையுரைகள், தியான உரைகள், சொற்பொழிவுகள் ஆற்றிட முடிந்தது.

மெய்யியல் பகுதியில் படித்த பாடங்கள் எமது அறிவைக் கூர்மைப்படுத்த, உண்மையைக் கண்டுபிடிக்க, பிரச்சினைகளைக் கண்டுகொள்ள, அதற்குப் பொருத்தமான, சரியான தீர்வுகளைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்தன. பல மெய்யியலாளர்களின் கருத்துகளையும் பற்றுறுதியையும் படித்தபொழுது உருவாக்கவும் அவற்றில் நமது பற்றுறுதியையும் நிலைப்பாடுகளையும் உருவாக்கவும் அவற்றில் உள்ள குறை நிறைகளைத் திறந்த மனத்துடன் அலசிப் பார்க்கவும், உரசிப் பார்த்துத் தேவையான, பயன் தரக்கூடிய மாற்றங்களுக்கு இடம் கொடுக்கவும் முடிந்தது.

குருத்துவக் கல்லூரியில் படித்த இறையியல் பாடங்களைத் தெளிவான விளக்கங்களோடு கற்றுக்கொண்டு படிக்கும்பொழுது எமது அருள்வாழ்வின் முன்னேற்றத்திற்கு மிகவும் பயன் உள்ளதாக அமைகிறது. அந்த விளக்கத்தைத் தெளிவாகப் பங்குத்தளங்களில் கொடுக்கும்பொழுது மக்களிடம் மாற்றமும் காண முடிகிறது. எல்லாப் பாடங்களும் எந்த விதிவிலக்குமின்றி நமக்குப் பயன்படக்கூடியவை. அதனால்தான் நான்கு ஆண்டுகள் அவை போதிக்கப்படுகின்றன. குறிப்பாக, கிறிஸ்தியலை அலசிப்பார்க்கும்போது இயேசுவின் ஆளுமையைச் சிறப்பாக நாம் காண முடியும். அவரின் தெய்வீகம், மனிதத் தன்மை, இரக்கம், பரிவு, கீழ்ப்படிதல், பகிர்வு, பொறுமை, கடின உழைப்பு, செப வாழ்வு, இறைத்தந்தையின்மீதுள்ள நம்பிக்கை போன்றவற்றைக் கடைப்பிடிக்க நம்மைத் தூண்டுகிறது. நற்கருணைப் பாடத்தின் மையக்கருத்துகளான தியாகம், அர்ப்பணிப்பு, பகிர்வு போன்ற பண்புகள் அவற்றைக் கடைப்பிடிக்கத் தூண்டுதல் கொடுக்கின்றன. அதைப் போன்று திருஅவை வரலாறு, கடந்த காலத்தில் திருஅவை பரவிய வரலாறு, சந்தித்த சவால்கள், சிக்கல்கள், பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள், திருஅவையை அழிக்க முயன்ற தீய சக்திகள், மறைச் சாட்சிகளின் வீரமிக்க மரணங்கள் போன்றவை திருஅவைமீது அன்பு, ஆர்வம் கொள்ளவும், அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கவும் துண்டுகின்றன.

புனித கன்னி மரியாவின் அருள்வாழ்வினைத் தெளிவாகவும் தவறின்றியும் மரியியலில் கற்றுக்கொள்கிறோம். அவை யாவும் பங்குத்தளங்களில் நம்பிக்கையாளர்களுக்குப் போதிக்கவும் தெளிவாகக் கற்றுக்கொடுக்கவும் நமது தனிப்பட்ட வாழ்வில் கடைப்பிடிப்பதற்கும் உதவி செய்கின்றன. திருமண இறையியல், குருத்துவத்தைப் பற்றிய இறையியல், திருஅவைச் சட்டவியல் போன்ற பாடங்கள் நமது தனிப்பட்ட வாழ்விற்கும் பங்குத்தளங்களில் பணியாற்றும்போது மக்களுக்குப் போதிப்பதற்கும் அவர்களின் ஐயங்களுக்கு விளக்கங்கள் வழங்குவதற்கும் அவர்களைச் சிறந்த மக்களாக வாழச் செய்வதற்கும் நமக்கு உதவி செய்கின்றன.

அருள்வாழ்வுப் பயிற்சிகளான தினசரி தியானம், மாதாந்திர தியானம், வருடாந்திர தியானம், சிலுவைப்பாதை, செபமாலை, ஒப்புரவு அருளடையாளம், திருப்பலி ஆகியவை வழியாக நாம் குருத்துவக் கல்லூரியில் பக்குவமடைகிறோம், அழைத்தலில் உறுதி அடைகிறோம் என்றால் மிகையில்லை. மறையுரைகள், பங்குத் தளங்களில் சிறப்பாக அமையக் குருத்துவக் கல்லூரிகள் சிறந்த தளம் அமைத்துக் கொடுக்கின்றன. காரணம், மறையுரை எப்படி இருக்க வேண்டும் என்று

பல வகையான கோணங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு தக்க விதத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழ்த்த வேண்டும் என்று பயிற்சி கொடுக்கப்படுவது மிகவும் உதவியாக இருக்கிறது.

கலை நிகழ்வுகள் நடத்துதல், கூட்டங்கள் நடத்துதல், பல வகைப் போட்டிகள் நடத்துதல், விழாக்கள் நடத்துதல் வழியாகக் கூட்டுப் பொறுப்பு, சுமைகளைப் பகிர்ந்துகொள்ளுதல், அனைவரையும் ஒருங்கிணைத்தல், தலைமைப் பொறுப்பு வகித்தல் போன்ற குணங்களைக் குருத்துவக் கல்லூரியில் கற்றுக்கொள்கிறோம். பின்னாட்களில் பங்குத்தளங்களில் அவை நமக்கு மேற்கூறப்பட்ட நிகழ்வுகளை நடத்த உதவியாக இருக்கின்றன.

குருமாணவர்கள் பல மறைமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள்; எனவே பல வகையான வரலாற்றுப் பின்னணி, ஆன்மிகப் பின்னணி, பல வகையான ஆளுமைப் பின்னணி, ரசிகப் பின்னணி, மதிப்பீடுகள் பின்னணி கொண்டவர்கள். எனவே இத்தகைய பலதரப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட குருமாணவர்கள் பயிற்சிக் காலங்களில் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் வாழும்பொழுது அவர்களிடையே பல வகையான தாக்கங்கள் ஏற்படுகின்றன. சிறந்த குணங்களை உள்வாங்கி, பங்களிப்புச் செய்து தங்களை ஒரு புதிய உருவாக்கத்திற்கு உட்படுத்துகின்றனர்.

இந்தப் புதிய உருவாக்கம் பங்குத்தளங்களில் பலதரப்பட்ட மக்களை, நிர்வாகப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு உதவி செய்கிறது.

சிறப்பாகப் பிறர் மீது பரிவு, கனிவு, இரக்கம் காட்டுதல், தன்னலம் துறத்தல், உதவிக்கரம் நீட்டுதல், தேவையில் உதவி செய்தல், பிறர் நலம் பேணுதல், மன்னித்தல், ஒப்புரவு ஆகுதல், செபித்தல், பிணக்குடன் வாழ்பவர்களிடையே பேசிச் சமாதானம் செய்துவைத்தல் ஆகியவற்றை ஏற்கெனவே குருத்துவக் கல்லூரி நமக்கு கற்றுத்தந்துள்ளதால் பங்குத்தளங்களில் இவற்றைச் செயல்படுத்துதல் சற்று எளிதாக அமைகிறது.

பள்ளிகளில் வகுப்பறைகளையும், பங்கு அருள்பணியாளர்களின் அறைகளையும், கோவிலையும், கோவில் வளாகங்களையும் நாம் சுத்தமாக, தூய்மையாக, முறையாக வைத்திருக்க விரும்புகின்றோம். அதற்குக் காரணம் குருத்துவக் கல்லூரியில் அந்த மனநிலை, ஆர்வம், பக்குவம் உருவாகிவிடுகிறது. அந்தப் பயிற்சி நம்மில் ஆர்வத்தைத் தூண்டுகிறது. பணியும் எளிதாகிறது.

எந்தப் பங்குத்தளத்தில் பாடற்குழு நன்றாக, சிறப்பாக உள்ளதோ அங்கே வழிபாடு சிறப்பாக அமைகிறது. அங்கே மக்கள் கூட்டம் அதிகம், இது உண்மை. இதற்குக் காரணம் குருத்துவக் கல்லூரியில் கொடுக்கப்படும் பாடல் பயிற்சி என்றால் மிகையில்லை. அதைப் போன்றே கோவில்களிலும் சரி, பொது இடங்களிலும் சரி, எங்கே நன்றாகப் பலிபீடங்களையும் கோவில் சுரூபங்களையும் அழகுற அலங்கரித்து இருக்கிறார்களோ அங்கே மக்கள் அதிக அளவில் கவரப்படுகிறார்கள், ஈர்க்கப்படுகிறார்கள், பயனடைகிறார்கள். இதற்குக் காரணம் குருத்துவக் கல்லூரியில் கிடைக்கும் அலங்கரித்துப் பழகும் வாய்ப்பையும் நாம் நன்றாகப் பயன்படுத்திக்கொள்வதுதான்.

இக்கல்லூரியில் பயின்று 1977ஆம் ஆண்டு அருட்பொழிவு பெற்றதை எண்ணிப் பெருமகிழ்வடைகின்றேன்.

கடினமான நிலத்தை ஏர்கட்டி உழுபவரிடம்
சாலை அமைக்க சரளைக்கல் உடைப்பவரிடம்
கடவுள் இருக்கிறார்.
அவர்களோடு சேர்ந்து அவர் வெயிலில் உலர்கிறார்
மழையில் நனைகிறார்
அவரது ஆடையிலும் தூசி படிந்திருக்கிறது.

– தாகூர்

சாதனை படைக்கத் தூண்டிய பவுல் கல்லூரி



அருள்பணி. சூ. ஸ்டீபன் கஸ்பார்
திண்டுக்கல் மறைமாவட்டம்

''நூறாண்டுக் காலம் வாழ்க! நோய்நொடி இல்லாமல் வளர்க!'' என்ற மொழிக்கேற்ப நான் பயின்ற, என்னைப் பயிற்றுவித்த பவுல் இறையியல் கல்லூரி நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நாங்கள் கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியில் மூன்றாண்டுகள் மெய்யியலைப் பட்டயப் படிப்பாக முடித்து, ஓராண்டு களப்பணி அனுபவம் பெற்று 1976-77இல் 42 பேர் இறையியல் கற்கப் பவுல் குருத்துவக் கல்லூரியிலே அடி எடுத்துவைத்தோம். காலம் மளமளவென்று மறைந்து, 1981இல் அருட்பொழிவு கண்டு, 40 ஆண்டுகளைக் கடந்து, எம் கல்லூரியின் நூற்றாண்டு விழாவிலே, எங்கள் ரூபி ஜூபிலி வருடத்தில் பங்கெடுக்க வாய்ப்புப் பெற்றதற்கு எம் உளமார்ந்த நன்றி. உடன் பயின்று பயணித்த பணியாளர்களிலே சிலரை இழந்துள்ளோம், அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் இறைப்பணியிலும் அருள்வாழ்விலும் சமூகப் பணிகளிலும் சிறந்தோராய்த் திகழ்ந்தவர்கள்.

நூற்றாண்டு காணும் எம் பவுல் இறையியல் கல்லூரி பேராயர்களையும் ஆயர் பெருமக்களையும் பேராசிரியர்களையும் உருவாக்கித் தந்து கேரளம், தமிழகம், ஆந்திரா போன்ற தென்இந்திய மாநிலங்களிலே முத்திரை பதித்துள்ளது. நாங்கள் முதலாம் ஆண்டில் நுழையும்பொழுது 42 பேர்; நான்காம் ஆண்டின் முடிவிலே 35 பேர் ஆனோம்.

நாங்கள் 1976-77இல் முதலாம் ஆண்டு இறையியல் படித்தபொழுது, அந்த ஆண்டுதான் இயேசு அவை நிர்வாகத்திற்கு இறுதி ஆண்டாகும். அருட்பணியாளர்கள் ஆர்.சே. ராஜா சே.ச எங்களுடைய அதிபராகவும், லூர்துசாமி, பெஸ், மரிய லூயிஸ், கொலாசோ, பால் சேசு ராசா, எக்ஸ். இருதயராஜ், ஜோசப் தெக்குந்தலா போன்ற இயேசு அவை அடிகளார்கள் பேராசிரியப் பெருமக்களாகவும் அவர்களோடு, அருட்பணி. ஓய். இருதயராஜ் திருஅவைச் சட்டப் பேராசிரியராகவும் பணி செய்தார்கள். ஆன்மிக வழிகாட்டிகளாக அருட்பணி. பெர்க் சே.ச, அருட்பணி. துரைசாமி சே.ச. அருட்பணி. லடிஸ்லாஸ் சின்னதுரை ஆகியோர் எங்களை ஆன்மிகத்தில் ஆழப்படுத்தியவர்கள்; படிப்பிலும் இறைஞானத்திலும் உறவுகளிலும் ஆன்மீகத்திலும் எங்களைப் பண்படுத்தி அழகுபார்த்தார்கள்.

நாங்கள் முதலாம் ஆண்டு தொடங்கியபொழுது இறையியல் மாணவர்கள் ஏறத்தாழ 125 பேரும் மெய்யியல் மாணவர்கள் 50 பேரும் சேர்ந்து உறவிலே வளர்ந்தோம். 1977ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு பெருவெள்ளம்; திருச்சியின் பல பகுதிகள் தண்ணீர் வெள்ளமானது. மீட்புப் பணிக்காய்த் திருச்சி, அதன் சுற்றுவட்டாரங்களுக்கு நாங்கள் அனுப்பப்பட்டோம். அது ஒரு சிறப்பு அனுபவமாக எங்களின் இரண்டாம் ஆண்டில் இருந்தது. எங்கள் இரண்டாம் ஆண்டுதான் மறைமாவட்ட அருள்பணியாளர்களின் நிர்வாகம் அருட்பணி. ஐ. குழந்தைசாமி (கோட்டாறு) அவர்களை அதிபராகக் கொண்டு ஆரம்பமானது. நாங்கள் அவரின் பணிக்காலத்தில்தான் திருத்தொண்டர்களாய்ப் பணி செய்ய அருட்பொழிவுக்குத் தயாரிக்கப்பட்டோம். அவரின் தலைமையில் தான் வெள்ள மீட்புப் பணிகள் நிறைவாகச் செய்யப்பட்டன. பல பங்குகளுக்கு அனுப்பப்பட்டு முலையடிப்பட்டி, மாரம்பாடி, துரைக்குடி பணி அனுபவம் பெற்றோம்.

எங்களின் குழுமத்திலே திறமைபல கொண்ட பணியாளர்களைக் காண முடியும். எடுத்துக்காட்டாக, அருட்பணியாளர்கள் சேவியர் அருள்ராஜ், எஸ். லூர்துசாமி, எஸ். தேவராஜ் பேராசிரியர்களாகவும், தமிழக இந்தியப் பணிக்குழுக்களிலும் (SC/ST), பொதுநிலையினர் பணிக்குழுக்களிலும் சட்டப்பிரிவுக் குழுவிலும் செயலர்களாகவும் சிறப்பாக இன்று செயல்பட்டு வருவது கண்கூடாகும்.

நாங்கள் திருத்தொண்டர் பணிக்காக, அருள்பணி. நீதிலால் தலைமையில் கும்பகோணம் மறைமாவட்டத்துக்குச் சென்று குடிசைகளில் தங்கி, உறவாடி, உணவுண்டு அனுபவம் பெற்றது இன்றும் எம் நினைவிலிருந்து நீங்கவில்லை. எம் குழும உறுப்பினர்களுள் பலர் மறையுரையாளர்களாய், 'நம் வாழ்வு' வார இதழின் ஆசிரியராய், ஊடகப் பணியில்

சிறந்தவர்களாய்த் திகழ்ந்து, குருத்துவக் கல்லூரிக்குப் பெருமையும் புகழும் தேடித் தந்துள்ளனர். நாங்கள் நான்கு ஆண்டுகளில் கற்ற, பெற்ற அனுபவங்கள் இறையாற்றலுடன் எங்களைச் சிறப்பாகச் செயல்படச் செய்துள்ளன என்றால் அது மிகையல்ல.

என் குழுமத்தைச் சேர்ந்தவர்களில் (1976-81) நானும் அருட்பணி எம்.ஏ. அந்தோணி அடிகளாரும் திண்டுக்கல் தலத் திருஅவையில் சிறப்பாக வட்டார அதிபர்களாயும், பங்குப் பணியாளர்களாயும், செயல்படுவதோடு நற்செய்தி அறிவிப்பதிலும் கல்விப் பணியிலும் சமுதாய, பொருளாதார முன்னேற்றப் பணியிலும் சிறப்புடன் பணி செய்கிறோம் என்றால் எங்கள் தாய் இல்லம் பவுல் குருத்துவக் கல்லூரியும் பேராசிரியர்களும் எங்களுக்குக் கொடுத்த அனுபவங்களும் பகிர்வுகளும்தான் என்பேன். இதை நாங்கள் நூற்றாண்டு விழா நாளில் பெருமையோடு உரைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். எம் வகுப்புத் தோழர்களில் பத்துக்கு மேற்பட்டோரை இழந்துள்ளோம். எம் தோழர்கள் மறைமாவட்டக் குருகுல முதல்வர்களாகவும் சிறப்பாகப் பணிசெய்துள்ளார்கள்.

இறுதியாக, புனித பவுல் குருத்துவக் கல்லூரி என்னைச் செதுக்கி உருவாக்கியுள்ளது. சிறப்பாக, குருத்துவப்பணியைச் செய்யும்பொழுது என் வாழ்வில் சந்தித்த சோகங்கள், மகிழ்வுகள் அனைத்திலுமே பவுல் அடியாரைப்போல 'எல்லாம் நன்மைக்கே' என்ற விருதுவாக்கில் நான் நாற்பது ஆண்டுகள் நிலைநிற்க இந்தக் குருத்துவப் பயிற்சி எனக்கு வழிகாட்டியுள்ளது என என்னால் கூறமுடியும். இறைவார்த்தையை வார்த்தையாலும் வாழ்க்கையாலும் அறிவிக்கும் ஆற்றலை நான் இங்குதான் பெற்றேன். அதை நான் பணித்தளத்திலே பகிர்ந்து வருகிறேன். நானும் பவுல் அடியாரைப் போல ''இனி வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்'' (கலா 2:20) எனச் சொல்ல முடியும். நான் பவுல் இறையியல் கல்லூரியில் கற்ற, பெற்ற அனுபவங்களை என் குருத்துவ வாழ்வில் கடந்த 40 ஆண்டுகளாய் வாழ்ந்திருக்கிறேன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. என்னையும் என் குழுமத்தையும் உருவாக்குவதிலே, செதுக்கிச் சிற்பமாக்குவதிலே சிற்பிகளாய் நின்ற ஆசான்களுக்கும், வழிகாட்டிய பேராசிரியர்களுக்கும், அருள்வாழ்வு வழிகாட்டிகளுக்கும், அக்கறை கொண்ட அத்தனை நல் உள்ளங்களுக்கும் என் இதய நன்றி. எம் குழுமத்தின் ரூபி ஜூபிலி ஆண்டும், கல்லூரியின் நூற்றாண்டும் இணைந்து கொண்டாடப்படுவதில் நாங்கள் பெருமகிழ்வுடன் இறைவனுக்கு நன்றி கூறிக்கொள்கிறோம்.

என்னுடைய அனுபவப் பகிர்வும் இந்த நூற்றாண்டு மலரில் வெளிவர, எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அருமைத் தோழர் அருட்பணி. வில்லியம் லூர்து ராஜ் அடிகளுக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், கல்லூரியைப் பேரோடும் மங்காப் புகழோடும் காத்து வழிநடத்திவரும் அத்தனை நல் உள்ளங்களுக்கும் எம் இதய நன்றி. காலத்தின் கட்டாயத்தைக் கண்முன் கொண்டு, குருத்துவப் பயிற்சிகளைத் திருத்தியமைத்து, நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்வாக்கி வழங்கும் நல்ல அருட்பணியாளர்களைத் திருஅவைக்கு உருவாக்கித் தரத் தொடர்ந்து புதிய முனைப்போடு செயல்படவும் எம் 1976-81 குழுமத்தின் சார்பாக, எம் நன்றியும் செபங்களும் கலந்த வாழ்த்துகள்!

> கடவுள் அம்மை-அப்பாவாக நம்முடன் இருப்பதால் கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு. காரிருளிலும் ஒளிக் கீறல்கள் மின்னுவதுண்டு; முட்டுச் சந்துக்களில் இருந்தும் முன்னேற்றத்திற்கானப் புதிய பாதைகள் தோன்றுவதுண்டு. முடிந்துவிட்டவையாகத் தோன்றும் தோல்விக் கதைகளுக்குக் கூட வெற்றியின் புதிய தொடக்கங்கள் பிறப்பதுண்டு. ஆம், வாழ்வளிக்கும் வல்லவராகக் கடவுள் மனிதருடன் இருப்பதால் இந்த மண்ணும் மனிதமும் வெல்லுவது உறுதி. காரணம், கடவுளுக்கு இல்லை கல்லறைகள்!
>
> ***(உங்கள் தந்தை ஒருவரே* என்ற நூலிலிருந்து)**

தாய் தந்த சுகமான அனுபவங்கள்



பேரருள்திரு. ஜாண் இராபர்ட்
மறைமாவட்ட நிர்வாகி
வேலூர் மறைமாவட்டம்

எந்த ஒரு குழந்தைக்கும் கருவறைமுதல் கல்லறைவரை நீடித்து நிலைத்து நிற்கும் நீங்கா நினைவுகள், இன்பமான உணர்வுகள் அக்குழந்தையின் தாய் தந்த சுகமான அனுபவங்கள்தாம் என்பது மிகையாகாது. ஏனென்றால் ஒரு கல்லோ மரமோ ஒரு சிற்பியின் கையால் பல நாள்கள் செதுக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு ஒரு சிலையாக வடிக்கப்படும்போது அது எல்லாராலும் போற்றப்படுகின்ற கலையாகப் பரிணமிக்கின்றது. அதுபோல ஒரு தாயிடமிருந்து பெறுகின்ற அனுபவங்கள்தாம் அக்குழந்தையைச் செதுக்கி உருவாக்கி, சமூகத்தில் உயர்ந்த மனிதராக்குகின்றன. அந்த நிலையில் திருச்சி, புனித பவுல் இறையியல் கல்லூரி கடந்த 100 ஆண்டுகளில் எண்ணற்ற அருள்பணி மாணவர்களை ஒரு தாயாக இருந்து பல்வேறு துறைகளில் பயிற்றுவித்து, சிறந்த பணியாளர்களாகச் செதுக்கி அனுப்பியிருக்கின்றது என்பது வெள்ளிடை மலை. அந்த வகையில் அருள்பணி மாணவராகப் படித்தபோதும், அதன்பின் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியபோதும் புனித பவுல் இறையியல் கல்லூரி எனக்குத் தந்த உயர்வான அனுபவங்களைச் சுகமான அனுபவங்களாக உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மிக்க பெருமையும் எல்லையில்லா மகிழ்வும் அடைகிறேன். இவ் அனுபவங்களை இரண்டு நிலைகளில் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

1. பயிற்சியில்

இறையியலைப் படிப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் புனித பவுல் இறையியல் கல்லூரி தனக்கே உரித்தான தனித்துவத்தையும் தனிப் பெருமையையும் கொண்டுள்ளது. ஏனெனில், மற்றெந்த இறையியல் கல்லூரியிலும் இல்லாத வகையில், தமிழ் மொழியில் இறையியல் இங்குப் பயிற்றுவிக்கப்படுகிறதே. இதனால் இறையியல் கருத்துகளை நன்கு உள்வாங்கிப் புரிந்துகொள்ளவும் சிந்திக்கவும் காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப இந்திய மண்ணின் பன்முகத்தன்மைக்கும் நடைமுறைக்கும் உரிய இறையியலாக்கம் செய்யவும் மிகவும் எளிதாக இருந்தது. தமிழ்வழிப் பயிற்றுவித்தலால் தமிழ் வளர்ந்தது; இறையியல் சிந்தனைகள் வளரவும் மக்களுக்கு எளிமையாக எடுத்துச்சொல்லவும் ஏதுவாக இருந்தது. அதனால்தான் தமிழ் இறையியல் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன; அவற்றின் வழியாக இறையியல் கருத்துகள் கலந்துரையாடப்பட்டு இறையியலாக்கம் எழுச்சி பெற்றது. அருள்பணி மாணவனாக நான் இறையியல் படித்தபோது எனக்குள் இது தாக்கத்தையும் ஈர்ப்பையும் ஏற்படுத்தியதில் வியப்பு ஒன்றுமில்லை. இத் தாக்கமும் ஈர்ப்பும்தாம் நான் பிற்காலத்தில் இதே கல்லூரியில் சைவ சித்தாந்தப் பேராசிரியராகப் பணியாற்றுவதற்கும், இந்திய சமயமும் மெய்யியலும் என்ற துறையில் முதுகலைப் பட்டப் படிப்பை முடிப்பதற்கும், முனைவர் பட்டம் பெறுவதற்கும் உந்து சக்தியாக இருந்தது. மேலும், கல்லூரியில் இறையியலாக்கம் செய்வதற்கான சூழ்நிலைகள் பல எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன.

அ) இறையியல் சிந்தனைகளை ஆய்வுக்கட்டுரைகளாக வரைய ஊக்கம் அளிக்கப்பட்டது. அவற்றைத் தயாரிக்க உயர்தர இறையியல் புத்தகங்கள் மட்டுமல்ல, பலவகையான நூல்கள் அடங்கிய சிறந்த நூலகமும் அமைந்திருந்தது. இதுவே பிற்காலத்தில் நான் பல புத்தகங்கள் எழுதுவதற்கு உந்து சக்தியாகவும் இருந்தது.

ஆ) பயிற்சிக் காலங்களில் கொடுக்கப்பட்ட பல வகையான கள அனுபவப் பயிற்சிப் பாசறைகள், நான் பணி செய்யச்சென்ற தளங்களின் சமய, சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழல்களை அறியவும் அதற்கேற்ப என் பணிகளைப் பிற்காலப் பணித்தளங்களில் அமைக்கவும் பயனுள்ளதாக இருந்தன. அதற்கு மெருகூட்டும் வகையில் பேராசிரியர்கள் எங்களுடன் களத்தில் ஒரு மாதம் தங்கியிருந்து, உண்டு, உறங்கி, கள ஆய்வுகளைச் செய்தது எனக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. அதுவே நான் பேராசிரியராகக் கல்லூரியில் பணியாற்றியபோது இப்படிப்பட்ட கள அனுபவப்

பயிற்சிக்கு மாணவர்களோடு செல்வதற்கு ஊக்கமாக இருந்தது மட்டுமல்ல, அவர்களோடு நன்கு பழகி உறவுகளை மேம்படுத்தவும் சுகமான அனுபவத்தைக் கொடுத்தது.

இ பயிற்றுவித்தலில் பவுல் கல்லூரி தனக்கே உரித்தான தனித்துவத்தையும் தனிப் பெருமையையும் கொண்டுள்ளது என்பது உலகறிந்த ஒன்று. அதற்குக் காரணி சிறந்த இறையியல் பேராசிரியர்களேயாவர். நான் அருள்பணி மாணவனாகப் பயின்றபோது ஒவ்வொரு துறைக்கும் சிறந்த பேராசிரியர்கள் இருந்தார்கள். பாடத்தில் அவர்கள் கொண்டிருந்த, பயிற்றுவித்தலுக்கான தொடர் தயாரிப்பும், அவர்கள் பயிற்றுவித்த அழகும், படிக்கத் தூண்டிய கண்டிப்புகளும், கையாண்ட முறைகளும் இறையியலாக்கத்திற்கு வித்திட்ட வழிகளும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவை நான் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியபோது எனக்கு சிறந்த மாதிரியாகவும் உந்துசக்தியாகவும் இருந்தன. அதிலும் என்னுடைய பேராசிரியர்களோடு நானும் உடன்பணியாற்றிய அனுபவம் சொல்லில் அடங்காது.

ஈ வகுப்பறைகளைக் கடந்து கொடுக்கப்பட்ட பல பயிற்சிகள் என்னைப் பல துறைகளில் செதுக்கியது என்பது உண்மையே. மறையுரைப் பயிற்சியாக இருந்தாலும் சரி, விளையாட்டுத் துறையாக இருந்தாலும் சரி, இசைத் துறையாக இருந்தாலும் சரி, நாடக மேடையாக இருந்தாலும் சரி, எல்லாத் துறைகளிலும் நான் பயிற்றுவிக்கப்பட்டேன். மறையுரைப் பயிற்சிகள் பிற்காலத்தில் நான் மறையுரைத் தொகுப்புப் புத்தகம் (மலையருள்) எழுதுவதற்குத் தூண்டியது; இசைத் துறையில் நான் TALEXPO போட்டிகளில் கலந்துகொண்டு 11 பரிசுகளைப் பெற்று, அதற்காக 'சகலகலா வல்லவன்' என்ற பட்டத்தைப் பெறச் செய்தது; பிற்காலத்தில் ஏறத்தாழ 40 திருவழிபாட்டு இசைக் குறுந்தகடுகள் வெளியிடவும் பல பாடல்களை இயற்றித் தமிழகத் திருஅவைக்குப் பங்களிக்கவும் செய்தது. மேலும் நான் படித்தபோது ஒவ்வோர் ஆண்டும் பவுல் இல்ல விழாவில் பல பாடல்கள் இசைக்கப்படும்; அருமையான நாடகம் ஒன்று அரங்கேறும். அப்போது அருள்பணி மாணவனாக ஒவ்வோர் ஆண்டும் மேடையில் இசைக்கருவிகள் வாசித்தது மிகவும் பெருமையாக இருந்தது. ஓர் ஆண்டு நடத்தப்பட்ட நாடகத்திற்கு மேடை உதவி இயக்குநராக நான் செயலாற்றியதும் என் நெஞ்சில் நீங்காத நினைவாக இருக்கிறது. மேலும் நான் அருள்பணி மாணவனாக, விவிலியக் குழுவின் செயலராக இருந்துபோது விவிலியப் பேராசிரியர் முனைவர் கு. எரோணிமுசு அவர்களின் ஊக்குவித்தலினால் எருசலேம் ஆலய மாதிரி வடிவமைக்கப்பட்டது. அதில் உள்ள அத்தனை தூண்களையும் எங்கள் குழு அச்சில் வார்த்தெடுத்தது என்பது இதமான அனுபவமாகும்.

2. உருவாக்கத்தில்

உருவாக்கம் என்பது ஓர் அருள்பணி மாணவரின் இறையியல் பயிற்சி மட்டுமல்ல, மாறாக, அவரின் ஒட்டு மொத்த ஆளுமை வளர்ச்சியுமாகும். ஆளுமை வளர்ச்சி என்பது அவரின் அருள்வாழ்வு, செபவாழ்வு, கூட்டுறவு, குழும உணர்வு, கூட்டுச் செயல்பாடு, சுதந்திரம் முதலியவற்றில் அடங்கும். அந்த வகையில் புனித பவுல் கல்லூரி அருள்பணி மாணவர்களாகிய எங்களைத் தனிமனித சுதந்திர உணர்வோடு உருவாக்கியது என்பது அக்கல்லூரியின் தனித்துவம் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகின்றேன். மேற்சொன்ன அனைத்து நிலைகளிலுமின்றி, கருத்துப் பரிமாற்றத்திலும் கலந்துரையாடலிலும் ஆய்வுப் பார்வையிலும் தனிமனிதச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுப் போற்றப்பட்டது. பொதுத் திருப்பலி, குழுத் திருப்பலி, பொதுச் செபம், குழுச் செபத்தில் மட்டுமல்லாது உணவறையிலும் விளையாட்டு மைதானத்திலும் பேராசிரியர்களின் உடனிருப்பும் கலந்திருப்பும் எங்களுக்கு முன்மாதிரியாகவும் தூண்டுதலாகவும் இருந்தன. இதுவே என் பிற்காலப் பங்குப்பணியில் பிறர்க்குக் கொடுக்கவேண்டிய சுதந்திரப் பகிர்வை நினைவுபடுத்தியது. குறிப்பாக, நான் ஒரு குழு மாணவர்களுக்குப் பொறுப்பாக இருந்தபோது, விடுமுறையில் அம்மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களோடு தங்கி அவர்களின் பெற்றோர், உடன்பிறப்புகளைச் சந்தித்து உறவாடியது விவரிக்க முடியாத அனுபவமாக இருந்தது!

நூற்றாண்டு விழாக் காணும் புனித பவுல் இறையியல் கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகளைக் காண வேண்டும்; தான் பயிற்றுவித்து உருவாக்கி அனுப்பிய தன் பிள்ளைகள் உலகெங்கும் சிறந்த பணியாளர்களாகப் பல துறைகளிலும் திகழும் பெருமையையும் மகிமையையும் பார்த்து, ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'' எனும் நிலையை அடைய வேண்டும் என வாயார வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

ஆசிரம வழி ஆன்மிகத் தேடல்



பணி. சலேத் ஜெயபாலன்
பாளையங்கோட்டை மறைமாவட்டம்

கிறித்தவ வாழ்வின் வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் உதவும் பல காரியங்களில் 'பேசாதிருப்பதும்', 'அமைதி காப்பதும்' கூடத் தனிமனிதருக்கு வேண்டிய இரு பண்புகள் என்றால் மிகையாகாது. அதிலும், குறிப்பாக அருள்பணி புரியத் தங்களையே ஈடுபடுத்துபவர்களின் வாழ்வில் இவ்விரு பண்புகளும் மிகவும் அவசியமானவை. எனவே குருத்துவப் பயிற்சிக் காலத்தில் படிப்புக்கு எவ்வளவு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதோ அதே அளவுக்கு ஒரு நாள் முழுவதும் குறிப்பிட்ட நேரங்களில் பேசாதிருப்பதும் அமைதி காப்பதும் வலியுறுத்தப்படுகிறது. எனது பயிற்சிக் காலத்தில் (1960-1969) இளங்குருமடம் முதல் இறுதிவரை இந்தப் பண்புகளின் சிறப்பினை நான் உணர்ந்ததைவிட பவுல் கல்லூரியிலே பொருளர் பொறுப்பில் (1991-1997) நான் இருந்தபோது நன்றாகவே உணர்ந்தேன். அங்கு அருள்பணி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வாய்ப்பு இந்த உள்ளார்ந்த உணர்வுக்கு உதவியாக இருந்தது; அருள்பணி மாணவர்கள் உரிய பாடங்களைக் கற்றுக்கொள்வதோடு, நடைமுறைப் பயிற்சி பெறும்வகையில் நகர்ப்புறப் பங்குகளில் மறைக்கல்வி கற்றுத்தருவது, கிராமப்புறப் பங்குகளில் ஞாயிறு வழிபாட்டுக்கு மக்களைப் பயிற்றுவிப்பது போன்ற பயிற்சிகளுடன் குறிப்பிட்ட வகுப்பு அருள்பணி மாணவர்கள் அருள்வாழ்வுப் பயிற்சிக்கு அமைதி காத்தலும், பேசாதிருத்தலும் எவ்விதம் உதவும் என்பதைக் கற்றுக்கொள்ளும் வகையில் ஆசிரம வாழ்வுப் பயிற்சிக்காக ஒரு சில நாட்கள் மைசூர், அஞ்சலி ஆசிரமத்திற்கு அனுப்பப்பட்டனர் (ஓராண்டு அருள்வாழ்வு என்ற தனிப்பயிற்சி தொடங்கியபிறகு இப்பயிற்சி கைவிடப்பட்டுள்ளது). அந்தப் பயிற்சிக்குச் சென்ற மாணவர்களோடு செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பெருமகிழ்வோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்களோடு அந்த ஆசிரம நிகழ்வுகளில் பங்குபெற்றது என்னுடைய தனிப்பட்ட தியானத்தில் வளரவும், ஆன்மிகத் தேடலில் அதிகம் ஈடுபடவும் தூண்டுதலாக இருந்தது. இதன் விளைவாக, குருத்துவக் கல்லூரியில் எனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பின் காலம் முடிந்தபின் – சில வருடங்கள் மறைமாவட்டப் பணிகள் புரிந்தபின் – சுகமின்மையால் ஒரு மாத காலம் ஓய்வு கிடைத்தபோது அந்த ஆசிரம வாழ்வில் நாட்டம் கொண்டு அஞ்சலி ஆசிரமத்தில் நடைபெற்ற ஒரு தியானத்தில் பங்கு பெற்றேன் (2004). தியான உரைகள் வழங்கியவர் கொல்கத்தா அருகில் 'யோகானந்தா ஆசிரம' குருவாக இருந்த சுவாமி கொர்க்கோ மோசஸ் சே.ச. அவருடன் என் வாழ்வுநிலையைப் பகிர்ந்துகொண்டபோது, ''மறைமாவட்டங்களில் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அநேக அருள்பணியாளர் இருக்கின்றனர். ஆனால் அருள்பணிகளோடு ஆன்மிக வழிகாட்டிகளாகவும் இருப்போர் மிகக் குறைவு'' என்று கூறியதோடு, அத்தகைய ஆன்மிக வழிகாட்டும் பணிகளில் சிறந்து விளங்கும் சில ஆசிரம குருக்களைச் சந்திக்கவும் அவர்களிடம் பயிற்சி பெறவும் வெவ்வேறு ஆசிரமங்களுக்குச் சென்று அனுபவம் பெறவும் என்னைத் தூண்டினார்.

என்னுடைய ஒப்புதல் பெற்றபின், தாம் இமயமலை அடிவாரத்தில் 'ரிசிகேஷ்' என்ற இடத்தில் உள்ள ஓர் ஆசிரமத்திற்கு ஒரு மாதம் கழித்து அழைத்துச் செல்ல இருப்பதாக அவர் சொன்னார். இரயிலிலும் பேருந்திலுமாக 'ஹரித்துவார்' வழியாகப் பயணம் செய்து ரிசிகேஷியில் உள்ள 'ஜீவன் தாரா சாதனாகுட்டிர்' என்ற ஆசிரமத்தை அடைந்தோம். மறுநாள் காலை அவ்வூரில் இருந்த பெரிய ஆசிரமமாகிய 'சிவானந்தா ஆசிரம' குருவைச் சந்தித்துப் பேச வாய்ப்புக் கிடைத்தது. 'எங்கிருந்து வருகிறீர்கள்? நீங்கள் யார்?' என்பன போன்ற எந்த உரையாடலும் இல்லாமல், 'கடவுள் உங்களை அழைத்து வந்திருக்கிறார். அவரை முழுமையாகக் கண்டுகொள்ள அவரே உங்களுக்கு உதவுவார்' என்று கூறி 'தியானத்திலும் மௌனத்திலும்தான் நீங்கள் அவரைக் காணமுடியும்' என்றார் அவர். அந்த ஆசிரமத்தில் இருந்தவர்களோடு சேர்ந்து தியானத்தில் ஈடுபட்டேன்.

பிறகு, அங்கிருந்து 'உத்திரகாசி' வழியாக கங்கை நதி புறப்படும் 'கோமுக்' என்ற இடத்திற்கு அருகே உள்ள 'கங்கோத்ரி' என்ற ஊரை அடைந்து ஒரு விடுதியில் தங்கினேன். இமயமலையில் வளைந்து வளைந்து சென்ற பாதையில் சிறிய பேருந்து மெதுவாக ஏறிச்சென்றது பயத்தோடுகூடிய வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அடுத்த நாள் எங்களது ஆசிரமத் தேடலை ஆரம்பித்தோம். முதலாவதாக 'யமுனா நகர்' அருகே இருக்கும் 'சாதனா கேந்திரா' எனும் ஆசிரமத்தை அடைந்தோம். அந்த ஆசிரமத்தின் குரு பல வருடங்களாக மௌன விரதத்தில் இருந்தார். பேசக்கூடியவர்; ஆனால் பேசமாட்டார். அவரது தரிசனத்திற்காகக் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மண்டபத்தில் வந்து அமர்வார். பேசுவதே இல்லையாதலால் தாம் சொல்ல வேண்டியதை எழுதித் தருவார்; அவர் எழுதியதை வாசித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஒரு மொழிபெயர்ப்பாளர் சொல்லுவார். ஏதாவது சுவாரஸ்யமான செய்தி என்றால் குருவின் சிரிப்பொலியை மட்டும் கேட்கலாம். பேசாமல் இருப்பதே ஒரு சாதனைதானே!

அங்கிருந்து புறப்பட்டு 'டேராடூன்' செல்லும் வழியில் 'சோட்டாராம்பூர்' என்ற ஊரில் யமுனை நதிக்கரையில் அமைந்திருந்த 'சமர்ப்பணாலயா' என்ற ஆசிரமத்திற்குச் சென்றோம். அந்த ஆசிரமத்தின் குரு அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஓர் அருள்பணியாளர். அவருடைய ஆசிரமத்தில் திருப்பலிக்கென ஒரு இடமும் தியானத்திற்கென ஓர் இடமும் வயல்வெளிகளுக்கு இடையே இருந்தன. நாங்கள் தங்கிய அறைகளும் பசுமையான வயல்களுக்கு இடையேதான் இருந்தன. ஊருக்கு வெளியே இருந்த இந்த ஆசிரமம் ஒரே அமைதியான இடம்! ஆசிரம குரு தம்மைத் தேடி வருபவர்களைத் தனியே சந்திப்பதோடு அவர்களுக்குப் பகலில் ஒரு முறை உரையாற்றுகிறார்; வினாக்களுக்கு விடை தருகிறார். இங்கு நாங்கள் இரு நாட்கள் தங்கிவிட்டு ஆசிரமத் தேடலைத் தொடர்ந்தோம்.

அங்கிருந்து வாரணாசிக்கு இந்திய மறைபரப்பு சபையினரின் மாத்ருதாம் ஆசிரமத்திற்குச் சென்றோம். சுவாமி அனில்தேவ் அவர்களோடு உரையாடி ஆசிரம நிகழ்வுகளில் கலந்துகொண்டோம். இரண்டு நாட்கள் அங்கு இருந்தோம். அங்கிருந்து மகாபாரதப் போரினால் பெயர் பெற்ற 'குருஷேத்திரா'வில் சுவாமி ஈஸ்வர் பிரசாத் குருவாக இருந்த 'பாரத்மாதா' ஆசிரமத்திற்குச் சென்றோம். இங்கு நாங்கள் தங்கியிருந்தபோது ஆசிரம குரு அவர்கள் எங்களை மகாபாரதப் போர் நிகழ்ந்த இடத்திற்கும், அந்தப் போர் நிகழ்வை ஒலி, ஒளிக் காட்சியாகக் காண்பித்த இடத்திற்கும் அழைத்துச் சென்றார். வித்தியாசமான அனுபவம். புனித பூமியில் கிறித்தவர்கள் சந்திக்க விரும்பும் பெத்லகேம், எருசலேம், கல்வாரி போன்ற இடங்களை நினைவூட்டியது. அங்கும் இரு நாட்கள் தங்கியிருந்து ஆசிரம குருவுடன் ஆன்மிக அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டோம்.

அங்கிருந்து எங்களது வழிகாட்டி சுவாமி கொர்க்கோ ஆசிரம குருவாக இருந்து நடத்திவந்த 'யோகானந்தா' ஆசிரமத்திற்குச் சென்றோம்; நீண்ட பயணம். அந்த ஆசிரமம் கொல்கத்தாவிலிருந்து 60 கி.மீ. தூரத்தில், ஹூப்ளி நதிக்கரையில் 'குடேபுள்' என்ற இடத்தில். வயல்களுக்கு இடையே இருந்தது. அங்கு ஐந்து நாட்கள் தங்கியிருந்தோம். எளிமையான தங்கும் இடம், ஓடுகள் போட்ட தனித்தனி அறைகள். மாலை நேரத்தில் நான் மட்டும் குருவுடன் சேர்ந்து நதிக்கரையில் நடந்து அவரது உரையைக் கேட்க மெல்லிய காற்றின் ஊடே இரம்மியமாய் இருந்தது. ஆழ்ந்த சிந்தனைக்கு என்னை உட்படுத்தியது. அவர் கொடுத்த ஒரு பயிற்சி: தலையிலிருந்து கண், காது, மூக்கு, கை, நெஞ்சு என நமது உடலின் ஒவ்வொரு பகுதிக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறி, எவ்விதம் அவற்றைப் பயன்படுத்துகிறோம் எனச் சிந்திப்பது. எனக்குத் துணையாக இருந்த அருள்பிரகாசம், சுவாமி கொர்க்கோவுடன் இன்னும் சில நாட்கள் தங்கியிருக்க விரும்பினார். நான் கொல்கத்தாவிலிருந்து சென்னைக்கு இரயில் ஏறியபின் இருவரும் நன்றியுடனும் மகிழ்வுடனும் பிரிந்தோம். இவ்விதம் எனது ஆன்மிகத் தேடலின் ஒரு பகுதி முடிந்தது.

இத்தகைய முயற்சிக்கு ஊற்றும் தூண்டுதலுமாக இருந்தது நான் பவுல் குருத்துவக் கல்லூரியில் பணி புரிந்தபொழுது மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரம அனுபவம் பெற்றதே என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

அடுத்த பகுதி 2005ஆம் ஆண்டில் சனவரி மாதத்தில் தொடங்கியது. முதலாவதாக காஞ்சிபுரத்திலிருக்கும் **"ஆன்மோதயா"** ஆசிரமத்திற்குச் சென்றேன். மறைந்த சுவாமி ஜோசப் சமரக்கோன் ஓ.எம்.ஐ. அவர்கள் அங்கு ஆசிரம குருவாக இருந்தார். இலங்கை, யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து வந்த அவர் ஆன்மிகத்திலும் சிறந்த அனுபவம் பெற்றவர். அவரோடு ஒரு வாரம் இருந்து பஜன், தியானப்பயிற்சிகளில் பங்கு பெற்றேன்; மனநிறைவாக இருந்தது. தொடர்ந்து எனது

ஆன்மிகத் தேடலில் உதவியாக அவரது வழிகாட்டுதலின்படி சென்னை, பல்லாவரம் அருகே 'பழவந்தாங்கல்' என்ற இடத்தில் இருக்கும் ''தம்மசேது'' எனும் புத்தமத தியான இல்லமாகிய 'விபாசனா' மையத்திற்குச் சென்றேன். அங்கு தியானப் பயிற்சியில் பத்து நாட்கள் பங்கேற்றேன்.

சுவாமி கொர்க்கோ மோசஸ் சே.ச அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள். அவர் கொல்கத்தா இயேசு சபை மாநில அதிபரின் சில நிபந்தனைகளுக்குட்பட்ட அனுமதியோடு தமிழ் மதுரை இயேசு சபையின் அதிபரின்கீழ் கன்னியாகுமரியில் உள்ள **'மைத்திரிபவன்'** (தோழமை இல்லம்) எனும் இயேசு சபை தியான இல்லத்திற்கு வந்தார். இங்கிருந்து கொண்டு தமிழகத்தில் இயேசு சபையினரின் ஆசிரமம் ஒன்றைத் தொடங்குவது அவர் திட்டம். இதற்குரிய இடம் தேர்ந்தெடுப்பதில் நான் உதவி செய்ய முடியுமா என்று பார்க்கவே என்னிடம் வந்தார். இந்த ஒரு சந்திப்பின் பிறகு குரு ஒருவர் வழியாகத் திண்டுக்கல் மறைமாவட்டத்தில், வெள்ளோடு பணித்தளத்தைச் சேர்ந்த, 'கோம்பை' எனும் இடம் சிறுமலையின் மேற்கு அடிவாரத்தில் வயல்வெளி சூழ்ந்த, ஆசிரமத்திற்கு ஏதுவான ஓர் இடம் இருக்கிறது என்பதை அறிந்தேன்.

இவ்விதம் திண்டுக்கல் **'தியானவனம்'** ஆசிரமம் சிறுமலை மேற்கு அடிவாரத்தில், ஒரு நீர்த்தேக்கம் அருகே, பசுமையான வயல்வெளிகளின் ஓரத்தில் இயற்கை எழில் மிகுந்த ஒன்றாக ஆரம்பமானது. சுவாமி தங்கிய வீட்டிலும் தாழ்வாரத்திலும் ஆறு பேர் தங்கும் வகையில் தடுப்புகள் (Partitions) அமைத்தபிறகு ஆசிரம வாழ்க்கை தொடங்கியது. நான் பங்குப் பணியிலிருந்துகொண்டே பணிவிடுப்புவரை சில வார நாட்களில் மட்டும் வந்து போய்க்கொண்டிருந்தேன். 2010 சூன் முதல் பாளை ஆயரின் அனுமதியோடு சுவாமி கொர்க்கோவுடன் தங்கினேன்.

இந்த நான்கு வருட காலத்தில் என் தேடலில் நான் சந்தித்த வேறு சில ஆசிரமங்கள் ஒவ்வொன்றும் ஒரு வகை: திருச்சி, குளித்தலை அருகே 'சாந்தி வனம்' எனும் ஆசிரமம் – மறைந்த பீடு கிரிபித் அடிகளார் வாழ்ந்த, இந்தியமய வழிபாட்டிற்கு (Indian Rite) வழிகாட்டிய ஆசிரமம்; அடுத்து கன்னியாகுமரியில் கோட்டாறு மறைமாவட்ட அருட்பணியாளர் பணிவன்பன் வின்சென்ட் உருவாக்கி வழிநடத்திவரும் 'ஆன்மிகத் தோட்டம்'; புதுச்சேரிக்கு அருகே அரியாங்குப்பம் என்னுமிடத்தில் தூய மரியன்னை இதய அருட்சகோதரிகளால் நடத்தப்படும் 'இதய ஆசிரமம்'; கோயம்புத்தூர் அருகே சீரப்பாளையத்தில் காணிக்கை மாதா சபையினர் வழிநடத்தும் 'ஜோதியகம்' எனும் ஆசிரமம் ஆகியவை. இவைதவிர கேரள மாநிலத்தில் சங்கராச்சாரியார் வாழ்ந்த 'காலடி'யில் 'சமிக்ஷா' என்ற பெரிய ஆசிரமம்; அதையடுத்து கோட்டயம் மாவட்டத்தில் வகமோன் எனுமிடத்தில் 'குருசுமலா' ஆசிரமம்; அதே மாவட்டத்தில் 'முண்டப்பள்ளி' எனும் இடத்தில் அருட்சகோதரியை வழிநடத்துபவராகக் கொண்ட 'மாதா மரியம் ஆசிரமம்' ஆகியவை. இவையனைத்திலும் தியானமும் ஆன்மீகத் தன்னாய்வுமே வலியுறுத்தப்பட்டன. இத்தனை ஆசிரமங்களையும் நான் தியான வனத்தில் இருந்துகொண்டே சுவாமி கொர்க்கோ அவர்களின் வழிகாட்டுதலின்படி இடையிடையே சந்திக்க முடிந்தது.

இதற்கிடையே தங்கும் அறைகள் தயாரான நிலையில் சுவாமி கொர்க்கோ, தம்மைத் தேடி வரும் குருக்கள், துறவியர், பொதுநிலையினக்கு ஆற்றுப்படுத்துதல், ஆன்ம வழிகாட்டுதல் ஆகியவற்றுக்குத் தனியாகவோ, குழுவாகவோ நேரம் ஒதுக்குவதில் மிகவும் சிரமப்பட்டார். இதனால் அவர் ஒருவிதமான பக்கவாத நோய்க்கு ஆளாகி மிகவும் வேதனையுற்றார். இடையிடையே மற்ற ஆசிரமங்களில் உள்ளவர்களையும் சந்தித்து ஆற்றுப்படுத்தியது அவரது உடல்நிலையை மிகவும் பாதித்தது.

நான் அங்கு போய் இருக்கவோ யாருக்கும் உதவவோ முடியாத நிலையில் எனது முதுகுத்தண்டு (Spine) அடிபட்டதால் வயது மூப்பு காரணமாக சரிசெய்ய முடியாத நிலையில் மறைமாவட்ட குருக்களின் முதியோர் இல்லத்தில் அடங்கி இருக்கிறேன்; இறைவனில் அடங்கிவிடும் நாள் என் ஆன்மிகத் தேடலின் இறுதிநாள்.

நான் உணவு கொடுக்கும்போது என்னைப் புனிதன் என்று போற்றுகிறார்கள்.
'ஏன் இவர்களுக்கு உணவில்லை?' என்னும்போது என்னை 'கம்யூனிஸ்ட்' என்று தூற்றுகிறார்கள்.
– பேராயர் ஹெல்டர் காமரா

பெண்களின் முன்னேற்றத்தில் புனித பவுல் இறையியல் கல்லூரி



சகோ. அமலா
திருச்சி அன்னாள் துறவு அவை

திருச்சி, புனித பவுல் இறையியல் கல்லூரி தமிழகத் திருஅவையில் ஒரு மூலைக்கல் என்றே சொல்லவேண்டும். ஏறத்தாழ 1700க்கும் மேற்பட்ட அருள்பணியாளர்களை உருவாக்கி இயேசுவின் இலட்சியக் கனவான இறையாட்சிப் பணியைத் தொடர்ந்திட திருஅவையில் எத்திக்கும் இது அனுப்பியிருக்கிறது என்பது சாதனையின் சகாப்தம். பல்வேறு காலச்சூழல்களில் பல்வேறு சிக்கல்கள் மத்தியில் இக்கல்லூரியை வழிநடத்திய அருள்பணியாளர்கள் தங்களின் பல்வேறு அனுபவங்களை ஆயுதமாக்கி, ''வெறுமனே விவிலியம் படிப்பது மட்டுமல்ல இறையியல்; மாறாக, அதைக் கடந்து சமூகத்தை விவிலியப் பார்வையில் கட்டமைப்புச் செய்வதே இறையியல்'' என்ற கருத்தை விதைத்து, மாற்றங்களை நோக்கி வெற்றிநடை போட்டுள்ளனர் என்பதே உண்மை. அறநெறி இறையியல், தலித் இறையியல், சூழல் இறையியல், விடுதலை இறையியல், பெண்ணிய இறையியல் எனப் பல்வேறு தளங்களில் விவிலியத்தை, சமூகத்தை இறையியலாக்கம் செய்யப் பலரைத் தூண்டியுள்ளது புனித பவுல் இறையியல் கல்லூரி என்னும்போது பெருமையாக உள்ளது. நம் கல்லூரி என்னில் விதைத்த விதைகள் சிலவற்றை மட்டும் சொற்களில் வடிக்க முயலுகிறேன்.

பெற்றுக்கொண்ட பெண்ணிய விதைகள்

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் மானுடச் சமுதாயத்தில் வரம் வேண்டி வந்த வாழ்க்கையாக கருதப்படுகிறது பெண்மை. பெண் இல்லா மனித வாழ்க்கை 'மாலுமி இல்லா மரக்கலம்' போன்றது. ஏனெனில் உயிரை உருவாக்கும் படைப்பாளி பெண். எனவேதான் பெண்ணின்றி மானுட வாழ்க்கை உயிரற்றதாய்க் கருதப்படுகிறது. இச்சூழலில் பெண்களுக்குச் சமூகத்திலும் திருஅவையிலும் சம உரிமையும் வாய்ப்புகளும் மறுக்கப்படுவதால் இன்று வளர்ச்சி குன்றி நிற்பது பெண்கள் மட்டுமல்ல, திருஅவையும் சமூகமும்தான் என்பதை உணர்ந்த தமிழக ஆயர்களும் சிந்தனைத் தெளிவுமிக்க பேராசிரியர்களும் எடுத்த முயற்சியே பெண்களை இக்கல்லூரியில் இறையியல் படிக்க அனுமதித்தது. 1990ஆம் ஆண்டு முதன்முதலில் ஓர் அருள்சகோதரி இக்கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆர்வத்தோடு வந்தார். அதைத் தொடர்ந்து அருள்பணியாளர்களுக்கு மட்டுமே என்று காலங்காலமாக இருந்த இறையியல் கல்வியைக் கடந்த 31 ஆண்டுகளில் ஏறத்தாழ 53 அருள்சகோதரிகளுக்கும், இருபால் பொதுநிலையினருக்கும் கற்க வாய்ப்பளித்துள்ளது. இயேசுவின் இறையாட்சி மலரவேண்டுமென்றால் அது சமத்துவ, சீடத்துவ குழுமங்களைக் கொண்டதாகத் திகழ வேண்டும் என்பதே பெண்ணிய இறையியலார் உணர்த்தும் உண்மை. தகுதியற்றவர்களாகக் கருதிப் பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவது இறையாட்சிக்கு எதிரான செயல்பாடு என்பதை அறிந்ததால் ஆணுக்கு நிகராகப் பெண்களும் மதிக்கப்பட வேண்டும்; சமமான உரிமைகளும் வளர்ச்சி வாய்ப்புகளும் அவர்களுக்குத் தரப்பட வேண்டும்; பணிப்பொறுப்புகளில் பாலினப் பாகுபாடு கூடாது முதலிய மதிப்பீடுகளை முன்வைக்கிறது நம் கல்லூரி.

பெண்ணியம் மலரக் குருத்துவ கல்லூரி முன்னெடுத்த முயற்சிகள்

பெண்ணிய இறையியல் வகுப்பு கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. கற்றுத் தேர்ந்த பல பெண்களையும் அருள்சகோதரர்களுக்கு வகுப்பு எடுக்க அனுமதிக்கிறது. வருடந்தோறும் பயிற்சி முகாம்களிலும் பெண்ணியச் சிந்தனைகளுடன் கூடிய வகுப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அருள்சகோதரர்களைப் போன்று எல்லாத் திறமைகளையும் வளர்த்துக்கொள்ள அருள்சகோதரிகளுக்கும் வாய்ப்புகள் தரப்படுகின்றன; அனைத்துப் பணிகளையும் முன்னின்று செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். பெண்களும் சிறந்த ஆளுமை உள்ளவர்கள், பலம் வாய்ந்தவர்கள் என்ற

எண்ணம் விதைக்கப்படுகின்றது. ஆண் பெண் சமத்துவப் பார்வை, பெண்களின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் பற்றிய கருத்துகளைத் தாங்கிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்கிறது.

என் பார்வையில் அருள்சகோதரர்கள்

உசுப்பிவிடுவோம் உறங்கிக் கிடக்கும் இன்றைய சமூகத்தை என்று அருள்சகோதரர்கள் தாங்கள் செல்லும் களப்பணித் தளங்களில் பெண்ணிய மாண்பு சீர்குலையக் காரணமாக அமைவது எது எனச் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். வன்முறைகளுக்கு உள்ளாகும் ஏழைப்பெண்கள், கல்வி மறுக்கப்படும் ஏழைக் குழந்தைகள், மூடநம்பிக்கைகளுக்குள் சிக்கிப் பல தருணங்களில் ஆதரவற்று நிற்கும் பெண்கள் போன்றோர் பற்றிய கணக்கெடுப்பை முன்னிறுத்தி, அவர்கள் வாழ்வு ஏற்றம் காண முயற்சிகளை மேற்கொள்கின்றனர். உடன்பயிலும் சகோதரிகளுக்கு உற்சாகமூட்டி அவர்கள் கருத்தை மதித்து ஏற்கின்றனர். அனைத்துப் பெண்களையும் தங்களது உடன் சகோதரிகளாக, குடும்பத்தவர்களாகப் பார்க்கின்றனர். பெண் குழந்தைகளுக்கென்று தனித்தனியாகப் போட்டிகள் வைத்து ஆளுமையை வளர்க்கின்றனர்.

என் பார்வையில் அருள்பணியாளர்கள்

''ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் அளவற்ற ஆற்றல் உறைந்து கிடக்கிறது. தங்களுக்குள் இருக்கும் அளவற்ற ஆற்றலை உணர்ந்துகொண்டு அதனை உசுப்பிவிட்டாலே போதும், பெண்கள் தாங்களாகவே தங்களைத் தற்காத்துக்கொள்ளும் நிலைக்கு வந்துவிடுவார்கள்'' என்கிறார் சமூக ஆர்வலர் மேதா பட்கர். ஆம், இதனை உணர்ந்தவர்களாய் இன்று அருள்பணியாளர்கள் சிலர் தங்கள் பங்குகளில் பெண்களின் சக்திக்கு மதிப்புக் கொடுப்பதைக் காண முடிகிறது. பங்குப் பேரவையில் பெண்களுக்குக் கணிசமான தலைமைப் பொறுப்பை உருவாக்கிப் பங்கு வளர்ச்சியில் அவர்களின் ஆலோசனைகளையும் பெறுகின்றனர். பங்கு நிகழ்வுகளில் பெண்களையும் அருள்சகோதரிகளையும் கருத்துரையாளர்களாகவும் நடுவர்களாகவும் அழைக்கின்றனர். பெரும்பாலான பங்குகளில் பெண்கள் பணிக்குழு சிறப்பாக இயங்குகின்றது. ஒரு சில பங்குகளில் அருள்சகோதரிகளுக்கும் பெண்களுக்கும் பங்கு இயக்கங்களில் பொறுப்புகள் வழங்கி பங்கு வளர்ச்சிக்கு அவர்களையும் இணைப்பாளர்கள் ஆக்குகின்றனர். சிறுமிகளையும் சிறுவர்களுக்கு நிகராகப் பீடச்சிறார் இயக்கத்தில் சேர்க்கின்றனர். இளம்பெண்களுக்கும் தனிஇயக்கம் அமைத்து அவர்களுக்கு அவ்வப்போது ஆக்க முறையிலான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

அருள்கோதரிகளின் பார்வையில்

உலகைச் சமத்துவ சகோதரத்துவ இறையாட்சிச் சமூகமாகத் திருஅவை உருமாற்றவேண்டும் என்பதால், தன்னிலுள்ள படியமைப்பு அதிகார ஆட்சி முறையை அது மாற்றியாக வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தாக்கத்தால் அருள்சகோதரிகள் இன்று விவிலியம், அறநெறி, மறைக்கல்வி, மானுடவியல் என அனைத்து வகுப்புகளையும் தாங்களே தயாரித்து தங்களுடைய பயிற்சிச் சகோதரிகளுக்கும் பிள்ளைகளுக்கும் கற்பிக்கும் ஆற்றறையும் அறிவையும் பெற்றுள்ளனர்.

நான்கு சுவர்களுக்குள் அடங்கிச் செபிப்பது மட்டுமல்ல ஆன்மிகம்; நிறுவனங்களோடு முடங்கிவிடுவது மட்டுமல்ல இறையாட்சிப் பணி; ஆலயப் பணிகளோடு ஐக்கியப்படுவது மட்டுமல்ல திருஅவைப் பணி என்பதை நன்கு புரிந்துகொண்டதால் இன்று வழிபாடுகள் மட்டுமன்றி பல்வேறு விழிப்புணர்வுக் கூட்டங்களிலும் அருள்சகோதரிகள் முன்னின்று தங்களது பங்களிப்பைச் செய்கின்றனர்.

தங்களின் மாண்பு, மதிப்பு, வாழ்வு, ஆளுமை யாவற்றையும் தாங்களே நிர்ணயிக்கும் சுதந்திரம் கொண்டு, சமூகத்திலும் திருவையிலும் மேம்பாட்டிற்குப் பங்களிக்கும் உரிமை, கடமை தங்களுக்கு உண்டு என உணர்ந்து செயல்படத் தொடங்கியுள்ளனர். காலச் சூழலுக்குத் தகுந்தவாறு அறிவியல் மாற்றத்திற்கேற்பத் தங்களைக் கல்வியிலும் தரத்திலும் பண்பு நலன்களிலும் கட்டமைத்துக் கொள்கின்றனர். தங்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆற்றலை, சக்தியை, திறமையை, இயல்பான பண்புகளைத் தங்களுக்கே உரிய பாணியில் வெளிக்கொணர ஆரம்பித்துள்ளனர்.

எம் பணித்தளத்தில் பெண்ணியம் மலர எடுத்த முயற்சிகள்

கடவுளின் பார்வையில், பெண் விலையேறப்பெற்றவர். எனவேதான், மனித வளத்தைப் பேணும் பொறுப்பைச் சிறப்பாகப் பெண்களின் வழியாகக் கடவுள் நிறைவேற்றுகிறார் என்பதன் தெளிவு அனைத்துப் பெண்களுக்கும் கிடைக்க வழிசெய்யப்படுகிறது. சிறுமிகள், இளம்பெண்கள், பெண்களைத் தனித்தனியே ஊக்கப்படுத்தி அனைத்துக் காரியங்களிலும் முன்னின்று செயல்பட ஆர்வமூட்டுகிறோம். துறவறப் பயிற்சி பெறும் இளம்பெண்களிடம் சமத்துவப் பார்வையையும், அத்தோடு சாதிக்கப் பிறந்த பெண்ணியச் சிந்தனைகளையும் தருகிறோம். பெண்களால் தனித்துச் செயல்பட முடியும் என்ற உண்மையை இளம் பெண்களுக்கு உணர்த்தி, உற்சாகமாகவும் தன்னிச்சையாகவும் செயல்பட ஊக்குவிக்கிறோம். எம் நிறுவனங்களில் பெண்மை குறித்த சிந்தனைகளை, ஆண்–பெண் சமத்துவப் பார்வையைச் சிறுவயது முதலே விதைத்து, அவர்களுக்கு வழிகாட்டுவதோடு சிறு, குறு தொழில் செய்யவும் வழிகாட்டுகிறோம்.

புனித பவுல் இறையியல் கல்லூரி பல வெற்றிகளைப் பெற்று நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த இனிய தருணத்திலே, என்னைப் போன்ற பயிற்சி பெற்ற பல அருள்சகோதரிகள், அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள், பொதுநிலையினர் பலரைப் பெண்ணியச் சிந்தனையில் இறையாட்சிக் கனவாம் இயேசுவின் விருப்பத்தை இம்மண்ணில் விதைக்க இக்கல்லூரி உருவாக்கியுள்ளது என்று எண்ணும்போது மகிழ்ச்சியாக உள்ளது. தமிழுக்கு, தமிழ்ச் சமூகத்துக்கு, பெண்களுக்கு, ஒடுக்கப்பட்டோருக்கு முன்னுரிமை கொடுத்து, உருவாக்கும் பணியைச் சிறப்பாய் ஆற்றும் புனித பவுல் இறையியல் கல்லூரியின் வெற்றிப் பயணம் இன்னும் பல நூறு வருடங்கள் தொடர மனதார வாழ்த்துகிறேன்.

பெண்களின் மேம்பாட்டிற்கான திருஅவையின் முயற்சிகள்

குடும்பம் ஒரு குட்டித்திருஅவை. இந்த இல்லத் திருஅவையைக் கட்டியெழுப்பும் பணியில் பெரும்பங்காற்றுவோர் பெண்களே. கடவுளின் தாயன்பை மனிதர்கள் உணரச்செய்யும் அரிய செயலை இவர்கள் ஆற்றுகின்றனர். இறைவனின் படைப்புச் செயலை மகப்பேறு வாயிலாக, உலகில் தொடர்ந்து செய்பவர்கள் பெண்கள். இல்லப் பணிகளின் வாயிலாக குடும்ப வளர்ச்சியில் மேலான பங்காற்றி, மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்றனர்.

பெண்கள் தங்களுக்குரிய சமூகத் தகுதியினைப் பெறவேண்டும் என்பதே இறைத்திட்டத்தின் வெளிப்பாடாகும். இதனை நன்குணர்ந்த திருஅவை பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு செயல்திட்டங்கள் உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

கத்தோலிக்கப் பெண்கள் திருஅவையின் வாழ்விலும் பணியிலும் முழுமையான உரிமைகளைப் பெற்றிட வேண்டும். அனைத்திலும் பங்கேற்பும் தலைமைப் பொறுப்பும் பெற்று ஏற்றத் தாழ்வற்ற சமூக உருவாக்கதில் பெண்கள் முழுமையாக ஈடுபட்டுச் செயலாற்ற வேண்டும். திருஅவையில் பெண்களின் பங்கேற்பும் அவர்களின் சான்று வாழ்வும் மிக இன்றியமையானதாகும். சிறப்பாகப் பங்கேற்பு அமைப்புகளில் பெண்களுக்கு உரிய முன்னுரிமையினை வழங்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதும் வழங்கப்பட்டுள்ளதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

எனினும் பெண்கள் வளர்ச்சியில் நாம் இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். ஆகவே பெண்களுக்கான முன்னுரிமைகளுக்கும் செயல்திட்டங்களுக்கும் அழுத்தம் கொடுத்துச் செயலாற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

– பெண்கள் ஆண்டினை முன்னிட்டுத் தமிழக ஆயர்களின் சுற்றுமடல் (2002)

அருங்கொடை நற்செய்திப் பணியாளர்கள்



அருள்பணி. அல்போன்சு நாதன்
சிவகங்கை மறைமாவட்டம்

புனித பவுல் குருத்துவக் கல்லூரி புதுமையானவற்றிற்கும் சுதந்திரச் செயல்பாடுகளுக்கும் திறமைகளை வளர்க்கும் வாய்ப்புகளை அளிப்பதற்கும் பெயர் பெற்றது. அருள்பணி மாணவர்கள் அவரவரின் நல்ல விருப்பங்களின்படி வளர நிர்வாகம் தடை செய்வதில்லை. நான் இக்கல்லூரியில் பயின்றவன் (1972-1978) என்பதில் பெருமிதம் அடைகிறேன்.

தோற்றம்

1977ஆம் ஆண்டின் இறுதியில் 30 திருத்தொண்டர்களுக்கு அருங்கொடை தியானம் குருத்துவக் கல்லூரி நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய அளவிலான அருங்கொடைத் தலைவர் அருள்பணி. ஜீனோ எங்களை வழிநடத்தினார். அருள்பணியாளர்கள் அக்டேவியுஸ் (வேலூர்), பி. சேவியர் (தர்மபுரி) அவர்களுடன் நானும் அருங்கொடை தியானத்தில் பெற்ற அனுபவங்களை வளர்த்துக்கொண்டோம். எங்கள் பங்குத்தளங்களில் அருங்கொடை வழிமுறைகளைச் செயல்படுத்தி இறை நம்பிக்கைப் புரட்சி ஏற்படுத்தினோம். பிற சமயத்தினரும் வியப்படையும் வகையில் நிகழ்வுகள் காணப்பட்டன.

இப்படி எங்கள் பணிகளில் அதிக விருப்பம் காட்டிய பொதுநிலையினரை, சிறப்பாக இளைஞர்களை இனம்கண்டு, எங்கள் சீடர்களாக அழைத்துத் தனிப்பட்ட பயிற்சி கொடுத்தோம்.

நான் சார்ந்துள்ள சிவகங்கை மறைமாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற நற்செய்திப் பணியாளர் மாநாட்டிலிருந்தே இந்த அமைப்பு செயல்படத் தொடங்கிவிட்டது.

வளர்ச்சி

நமது குருத்துவக் கல்லூரியில் பயின்ற அருள்பணியாளர்கள் அந்தோணிசாமி, எஸ். வின்சென்ட், ஜே. அகஸ்டின், சி.ஏ. ஜேம்ஸ் போன்றோர் பணியாற்றிய பங்குத் தளங்களிலிருந்து அதிகமான பொதுநிலையினர் அருங்கொடை வாழ்வை விரும்பி நற்செய்திப் பணியாளர்களாகப் பயிற்சி பெற முன்வந்தனர். இந்தக் காலக்கட்டத்தில் அருள்பணி. ஜாண் பெர்க்மான்ஸ் தம் பாடல்களாலும் ஆதாரனைக் கூட்டங்களாலும் பிற சமய மக்களையும் கிறிஸ்துவின்பால் ஈர்த்துவந்தார். நற்செய்திப் பணியாளர்களுக்கான மாநாடு நான்கு முறை நடத்தப்பட்டது. பொதுநிலை நற்செய்திப் பணியாளர்களே பொறுப்பேற்று இம்மாநாடுகளை நடத்த வழிகாட்டப்பட்டது. இதனால் நற்செய்திப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

பாளையங்கோட்டை திருஇதய அவை சகோதரர்கள் ஜேம்ஸ் ராபின், பங்கிராஸ், அகஸ்டின் ஆகியோரின் உழைப்பும் அமலஅவை அருள் சகோதரிகளின் ஈடுபாடும் இப்பணியில் அதிகம்.

பயிற்சி

ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் மேதகு ஆயர் முன்னிலையில் தங்கள் அர்ப்பணத்தைத் தெரிவிக்கின்றனர். இரண்டு ஆண்டுகள் தொடர் பயிற்சி பெற்ற பிறகே இக்குழுவில் சேர்க்கப்படுகின்றனர். பணிகளுக்குச் சென்றாலும், பயிற்சிகள் ஆண்டு முழுவதும் வழங்கப்படுகின்றன. தற்போதைய நிலையில் 906 நற்செய்திப் பணியாளர்கள் உள்ளனர்.

பணிகள்

தவக்காலத்தில் எல்லாப் பங்குத் தளங்களுக்கும் சென்று, பங்குத் தந்தையர் விரும்புகிறபடி களப்பணியாற்றுகிறார்கள். கிராமங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் இடையே உள்ள பிளவுகளை நீக்கி ஒன்றிணைக்கும் பணிகளைப் பங்கில் நவநாள் நடக்கும் காலங்களில் செய்கிறார்கள். 'புத்துயிர் செபக்குழு' என்ற பெயரில் வீடுகளில் கூடி மன்றாடுகிறார்கள். பிற சமயத்தினரும் இத்தகைய வழிபாடுகளில் கலந்துகொண்டு பயனடைகிறார்கள். தங்களைக் கூர்மைப்படுத்திக்கொள்ள ஆண்டிற்கு மூன்று முறை பொதுத்தியானம் செய்கிறார்கள். மாதம் ஒரு முறை அனைவரும் குறிக்கப்பட்ட இடங்களில் கூடி, பொது நோக்கங்களுக்காக நற்கருணை ஆராதனை செய்கிறார்கள். வட்டார அளவிலும் திட்டங்கள் தீட்டி இக்குழுவினைர் இறைவழிபாடு நடத்துகிறார்கள். வெளி மறைமாவட்டங்களுக்கும் சென்று பயிற்சியளிக்கின்ற ார்கள், மறைமாவட்ட உதவியை எதிர்பார்க்காமல் அவர்களே தங்கள் செலவினங்களைச் சரிசெய்து கொள்கிறார்கள்.

இறுதியாக

1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு பொது நிலையினரின் அமைப்பாகவே எவ்விதத் தொய்வுமின்றி வளர்ந்துகொண்டு இருக்கிறது. நற்செய்தியை வாழ்வாக்கி, தூய ஆவியாரின் துணையோடு நற்செய்தியை அறிவித்து, கிறிஸ்துவின் மனநிலை கொண்டவர்களாய் வாழ்கின்றனர். புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் பயின்ற அருள்பணியாளர்கள் நற்செய்திப் பணியாளர்களை உற்சாகப்படுத்துவதிலும் அவர்களைப் பயன்படுத்துவதிலும் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் பயின்ற தஞ்சை ஆயர் மேதகு அம்புரோஸ் அவர்களும், சிவகங்கை முன்னாள் ஆயர் மேதகு. சூசைமாணிக்கம் அவர்களும் நற்செய்திப் பணியாளர்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனக்காக மன்றாடுங்கள்

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தையைப் பார்ப்பதற்காக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் புனித பேதுரு பெருங்கோயில் வளாகத்திலே குழுமியிருந்தார்கள். பல நாட்டினர்; பல மொழியினர்.

முதல் முறையாக நகருக்கும் உலகுக்கும் ஆசீர் அளிப்பதற்காக மேல்மாடி ஜன்னல் வழியே காட்சியளித்தார் புதிய திருத்தந்தை. வழக்கமாகத் திருத்தந்தையர்கள் இரண்டு கரங்களையும் உயர்த்தி அசைப்பார்கள். திருத்தந்தை பிரான்சிசு தனது வலது கரத்தை உயர்த்தி மெதுவாக அசைத்தார். மிகச் சாதாரணமான உரையாடல் நடையிலேயே தனது முதல் உரையை ஆற்றினார்.

"சகோதரர்களே, சகோதரிகளே, வணக்கம். எனது சகோதர கர்தினால்கள் உலகின் எல்லைக்கே சென்று உரோமைக்கு ஓர் ஆயரைக் கொண்டு வந்திருக்கிறார்கள்... உங்கள் வரவேற்புக்கும் வாழ்த்துக்கும் நன்றி" என்று சொல்லிவிட்டு முன்னாள் திருத்தந்தைக்காக மன்றாடுகிறார். தொடர்ந்து, "நான் உங்களுக்கு இறையாசீர் தருவதற்கு முன்னால் எனக்கு ஒரு வரம் தரவேண்டும். இறைமக்களே, உங்கள் ஆயருக்காக, ஆயரை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று, அமைதியில் மன்றாடுங்கள்" என்று சொல்லி தலைகுனிந்து நின்றார். எங்கும் ஒரே அமைதி. காதுகளை நம்ப முடியவில்லை. இப்படி எந்தத் திருத்தந்தையும் கேட்டதில்லையே! கண்கள் பனிக்கின்றன.

ஒரு சில மணித் துளிகளுக்குப்பின் தலைநிமிர்ந்து, "உங்களுக்கும், உலகத்துக்கும், நல்லுள்ளம் கொண்ட எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனது ஆசீரை வழங்குகிறேன்." என ஆசீர்வதிக்கின்றார்.

புதிய திருத்தந்தை எளிமையும் தாழ்ச்சியும் உள்ளவர் என்று எல்லா மக்களும் அறிந்து கொண்டார்கள்.

– பணி. வ. இராபர்ட், *திருத்தந்தை பிரான்சிஸ்: ஓர் அரிய முன்மாதிரி,* 51.

நற்செய்தித் தம்பதியர் இயக்கம்



அருள்பணி. எர்னஸ்ட் அந்தோணிசாமி
திண்டுக்கல் மறைமாவட்டம்

இயேசு பன்னிருவரைக் கூட்டி உருவாக்கிய இயக்கம் இன்றும் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. இவ்வியக்கச் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் எங்களுள் உருவாக்கியது புனித பவுல் குருத்துவக் கல்லூரி (1982-1989).

ஒவ்வோர் ஆண்டும் குருத்துவக் கல்லூரியின் நிர்வாகக்குழு ஆயர்களின் ஆண்டுக் கூட்டம் நடைபெறும்போதும் பயிற்சி நாட்களில் கள அனுபவம் வேண்டும் என்று பேராசிரியர்களின் ஆதரவோடு வேண்டுகோள் வைக்கப்பட்டது. ஆனால், விடுமுறையின்போது மறைமாவட்ட ஆயர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று சொல்லப்பட்டது. 1984ஆம் ஆண்டு முதல் முறையாக மெய்யியல் 3ஆம் ஆண்டு மாணவர்கள் முக்கொம்பு அருகில் முத்தரசநல்லூரில் கள அனுபவம் பெற அனுமதி வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குருத்துவப் பயிற்சி பெறுகின்ற நாட்களிலேயே ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட மையக் கருத்தைக் கொண்டு களப்பயிற்சி அனுபவங்கள் பெற வாய்ப்புக் கிடைத்தது. 1986ஆம் ஆண்டு முதலாமாண்டு இறையியல் படிப்பின்போது ''பல்சமய ஆன்மிகம்'' என்பதை அடிப்படையாகக் கொண்டு பழனிப்பங்கில் உள்ள புது ஆயக்குடி, பாலசமுத்திரம், புளிய மரத்து செட், தெரசம்மாள் காலனி ஆகிய கிளைப்பங்குத் தளங்களுக்குச் சென்றோம். அருள்பணி. எக்ஸ். இருதயராஜ் அவர்கள் உடனிருந்து வழிநடத்தினார்.

1989ஆம் ஆண்டில் இரண்டாம் ஆண்டு இறையியல் பயிலும்போது ''மக்களின் அன்றாட வாழ்க்கை'' என்பதை மையமாகக் கொண்டு இராமேசுவரம், தங்கச்சிமடம் ஆகிய இடங்களில் வீடுகளில் தங்கி இருந்தோம். அருள்பணி. தே. அல்போன்சு அவர்களின் கருத்துரைகளோடும் துணையோடும் அத்தீவில் அடர்ந்த காடுகளில் தங்கி இருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடம் நேரடியாகக் கலந்துரையாடி அவர்களின் விடுதலை வேட்கையை அனுபவித்தோம். முதன்முறையாக ஏ.கே.47, சயனைடு ஆகியவற்றைப் பார்த்தபோது அவர்கள் மனித மனங்களையும் மண்ணையும் தங்களின் உயிரினும் மேலாக மதிக்கும் தியாக வாழ்வு எங்களது அர்ப்பண வாழ்விற்கு உரமூட்டுவதாக அமைந்தது.

1988ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டு இறையியல் கற்கும்போது ''குடும்ப வாழ்வு'' என்பதைத் தேர்ந்தெடுத்து அருள்பணி. G. சாம்சன் ராஜா அவர்களின் நெறிப்படுத்துதலின்படி திண்டுக்கல் அருகில் உள்ள பஞ்சம்பட்டிப் பங்கில் குடும்பங்களில் கணவன்-மனைவி உறவு பற்றி அறிய வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக, தம்பதியரிடையே ஏற்படும் உறவுச் சிக்கல்கள், கருத்து முரண்பாடுகள், குடும்பக் கட்டுப்பாடு, குழந்தைகளின் மனநிலை ஆகியவற்றில் மக்களின் அனுபவங்களை உணர்ந்தோம்.

இவ் அனுபவங்கள், குருத்துவக் கல்லூரியில் பயின்ற பாடங்கள், எங்களின் அருள்வாழ்வு, உடன் வாழும் அருள்பணி மாணவத் தோழர்களின் சிந்தனைப் பகிர்வு, கூட்டுச் செயல்பாடுகள் ஆகியவை எங்களின் குருத்துவப்பணி வாழ்வுக்கு இன்றும் துணை நிற்கின்றன. மறைமாவட்டப் பங்குப் பணியாளனாக எனது அருள்வாழ்வு, சமூக, கல்விப் பணிகள், இயக்கச் சிந்தனைகள், செயல்பாடுகள் போன்றவற்றுக்குக் குருத்துவக் கல்லூரியின் ஏழு ஆண்டுக்காலக் குருத்துவப் பயிற்சி அடிப்படையாக அமைந்தது.

பங்கு அளவில் மக்களை இயக்கமாக்க அமைப்புகள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக, திண்டுக்கல் மறைமாவட்டத்தில் மேட்டுப்பட்டிப் பங்கில் தொடங்கப்பட்ட இயக்கங்களை இங்குக் குறிப்பிடுகிறேன்:

8-10 வயதினருக்கு பாலன் இயேசு இயக்கம், 11-15 வயதினருக்கு மரிய வியான்னி மாணவர் மன்றம், மிரியம் மாணவியர் மன்றம், 16-24 வயதினருக்கு இளைஞர் இயேசு இயக்கம், போதைப் பொருள் பழக்கங்களிலிருந்து விடுதலை பெற விரும்புவோருக்கு புனித சின்னப்பர் சங்கம், அரசுப் பள்ளிகளில் பணிபுரிவோர் அமைப்பு, முன்னாள் இராணுவத்தினர் குழு, ஆலயப் பணியாளர்கள் கூட்டமைப்பு, நற்செய்தித் தம்பதியர் இயக்கம்.

இவ் அமைப்புகள் வாரத்திற்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளில் (திருப்பலிக்கு முன்போ பின்போ இல்லாமல்) தவறாமல் கூடின. அனைத்து அமைப்புகளிலும் உறுப்பினர் தகுதிகள், சந்தா, தலைவர், செயலர், பொருளர் போன்ற அமைப்பாளர்களுக்கான சட்ட நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஒரே மையக் கருத்தில் அனைத்து இயக்கங்களும் தங்கள் அமைப்புகளில் கூடி, கலந்துரையாடி, கருத்துகளைப் பகிர்ந்து தொடர் செயல் திட்டங்களை வகுத்தன.

இயக்கத்திற்கு எல்லை இல்லை, இவ்வியக்கங்கள் பங்கிற்கு அப்பாலும் தாக்கத்தை ஏற்படுத்தின, பரவின. பிற இடங்களில் உள்ள இளைஞர்கள் இவர்களின் துணை கொண்டு மக்கள் முன்னேற்ற மன்றம் (MMM) என்ற அமைப்பினை அமைத்தனர். மேற்கண்ட இயக்கங்களில் இருந்தவர்கள் இன்று திண்டுக்கல் மாவட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்களாகவும், சமூகத் தொண்டு நிறுவுநர்களாகவும், ஆசிரிய சங்கங்களில் பொறுப்பாளர்களாகவும், முன்னணிச் சொற்பொழிவாளர்களாகவும் திகழ்கின்றனர்; பல அருள்பணியாளர்களும் இதே இயக்கச் சிந்தனைகளோடு தங்கள் பணித்தளங்களில் சிறப்புடன் பணியாற்றுகின்றனர்.

இவ் அமைப்புகளில் குறிப்பிடத்தக்க தனித்தன்மை வாய்ந்த இயக்கம் நற்செய்தித் தம்பதியர் இயக்கம். திருச்சி மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோணி டிவோட்டா அவர்கள் 2003ஆம் ஆண்டு திருத்தந்தை அவர்களைச் (AD LIMINA) சந்திக்கச் சென்றார். திருத்தந்தை ஆயரிடம், ''உங்கள் மறைமாவட்டத்தில் ஏதாவது வித்தியாசமான செயல்பாடுகள் உண்டா?'' என்று கேட்டதற்கு ஆயர், ''ஆம், நற்செய்தித் தம்பதியர் இயக்கம் இருக்கிறது'' என்கிறார். உடனே, திருத்தந்தை வியப்புடன், ''தனி நபர்கள், குழுக்கள், அவைகள் நற்செய்தி அறிவிப்புப் பணியினை மேற்கொண்டு வருகின்றன. தம்பதியர் குழு அமைத்து நற்செய்திப் பணி செய்கிறார்களா? அது பற்றிய விவரங்களைக் கூறுங்கள்'' என்று ஆர்வத்தோடு விசாரித்ததாக நற்செய்தித் தம்பதியர் ஆண்டு விழாவில் ஆயர் பகிர்ந்துகொண்டார்.

தொடக்க நிலையில் இவ் இயக்கத்திற்கு ஆண்களிடமிருந்து வரவேற்பு கிடைக்கவில்லை; வரத் தயங்கினார்கள். ஆனால், காலப்போக்கில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து கூட்டங்களில் கலந்துகொண்டனர். பங்கில் 50 தம்பதியினரை உறுப்பினராக்குவது என்ற இலக்கு வெகு விரைவில் எட்டப்பட்டது. நூறு தம்பதியர் உறுப்பினர்களானால் நான்கு குழுக்களாக மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என நற்செய்தியாளர்களின் பெயரில் செயல்பட்டனர். பிற இயக்கங்களைப்போல தலைவர், செயலர், பொருளர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரத்திற்கு ஒரு முறை கூட்டம் நடைபெற்றது. அருள்வாழ்வு, பொருளாதார, சமூக அனுபவங்களை இயேசுவின் பார்வையில் நற்செய்தி மதிப்பீடுகளின்படி தாங்களும் உணர்ந்து மற்றவர்களில் அவை மலரத் தம்பதியர் முயன்று வருகின்றனர். உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:

- இயேசுவின் மதிப்பீடுகளைக் கடைப்பிடித்து எளிய மனம் கொண்டவர்களாய் வாழ்வது.
- போதைப் பொருட்கள் பயன்படுத்தாமல் இருப்பது.
- அருளடையாளங்களைத் தக்க பருவத்தில் பெற்றுப் பிறரும் பெறத் தயாரிப்பது.
- வாரத்தில் ஒரு முறை தம்பதியராகச் சமயப் பாகுபாடின்றி ஒரு குடும்பத்தையாவது சந்திப்பது.
- அருள்வாழ்வு, சமூக, பொருளாதார வாழ்வில் எல்லா நிலைகளிலும் தியாகமும் பகிர்வு மனப்பான்மையும் கொண்டு வாழ்வது.

ஆண்டுக்கு ஒருமுறை திண்டுக்கல் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் புனித வளனார் தலைமைக்கோவிலில் ஆண்டுவிழா நடைபெறுகிறது. கடந்த ஆண்டு கொண்டாட்டத்தின்போது 400க்கும் மேற்பட்ட தம்பதியர் சீருடை அணிந்து கணவன் மனைவியாகப் பங்கேற்றனர்.

இவ் இயக்கத்திற்குத் துணை நிற்பவர்கள் பங்கில் பணியாற்றும் திருச்சிலுவை அருள் சகோதரிகள் (கொட்டியம், கேரளா) ஆவர். தற்பொழுது திண்டுக்கல் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் இவ் இயக்கம் செயல்படுகின்றது.

சிறைப்பணியில் பவுல் இறையியல் கல்லூரி



பணி. சகேஷ் சந்தியா
தூத்துக்குடி மறைமாவட்டம்

விடுதலை இறையியலைத் தமிழகத்தில் முன்னெடுத்த பவுல் இறையியல் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. விளிம்புநிலை மக்களின் பார்வையில் இறையியலைக் கற்கத் தூண்டி இறைவனை, இறையியலை விண்ணிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் மண்ணுக்கு, தமிழகத்திற்கு அழைத்து வந்தது பவுல் இறையியல் கல்லூரி என்பதை வரலாறு மறக்காது. மண்ணுக்கேற்ற இறையியல் என்பது அறிவுசார் களத்தில் கலந்துரையாடல் செய்து ஆய்வுக் கட்டுரை எழுதுவதை அல்ல; மாறாகக் களத்தில் மக்களோடு மக்களாக அதுவும் ஒடுக்கப்பட்ட, புறம் தள்ளப்பட்ட, விளிம்புநிலை, பட்டியலின மக்களிடமிருந்து இறையியலைக் கற்றுத்தந்தது எம் பவுல் கல்லூரி. தமிழகத்தின் அனைத்து மாற்றுப் பணிகளையும் தொடங்கிவைத்ததும், தொடர்ந்துகொண்டிருப்பதும் பவுல் கல்லூரியின் சிறப்புகளுள் ஒன்று. அதில் மிகவும் மெச்சத்தக்கது சிறைப்பணி என்பேன். தமிழகத்தில் முதன் முதலில் சிறையில் அனுமதி பெற்று இப்பணியைச் செய்தது பவுல் கல்லூரி என்பதைப் பதிவு செய்யவேண்டும். 50 ஆண்டுகளுக்கும் மேலாக திருச்சி, மையச் சிறைச்சாலையில் பவுல் கல்லூரி மாணவர்களின் சிறைப்பணி நடந்துள்ளது; அது இன்றும் தொடர்கிறது என்பது எமக்குப் பெருமையே.

சிறை அன்பர்களின் தாய்வீடு

நெடுநாள் சிறையிலிருக்கும் சிறைவாசிகளுக்கும் நிரந்தர முகவரி பவுல் கல்லூரிதான். உறவினர்கள், நண்பர்கள், உடன்பிறப்புகள், பெற்றோர் அனைவரும் புறக்கணித்தாலும் பவுல் கல்லூரி எந்தச் சிறைவாசியையும் பிரித்துப் பார்த்ததில்லை. எம் வருகைக்காக இல்ல வாசிகள் வாயில் கதவருகே காத்து நிற்பார்கள். ஒரு வாரம் நாங்கள் செல்லவில்லை என்றால் கல்லூரிக்கே கடிதம் எழுதிவிடுவார்கள். விடுதலையானதும் அல்லது பிணை கிடைத்ததும் முதலில் பவுல் கல்லூரி வந்து நன்றி கூறிச் செல்வார்கள். அவர்களின் சிறுசேமிப்பையும் எம்மிடம் தந்து பிறருக்கு உதவிடச் செய்வார்கள். குற்றம்புரிந்தோர் இயேசுவின் இறையாட்சி மதிப்பீடுகளோடு மீண்டும் வாழக் கற்றுக்கொடுத்தது பவுல் கல்லூரிதான். இது சிறைவாசிகளின் தாய்வீடு என்றால் பொருத்தமே. சமயச் சடங்குகளைச் சரிவரச் செய்தால் மோட்சம் கிடைக்கும் என்ற மேட்டுக்குடியின் உளுத்துப்போன இறையியலுக்கு நடுவில், சிறையில் வாழும் மனிதத்தை இறையாட்சி மதிப்பீடுகளின்படி நெறிப்படுத்துவதே இயேசுவின் இலக்கு என்பதைக் கற்றுத் தந்தது எம் பவுல் கல்லூரி.

சிறைப்பணி ஒருங்கிணைப்பு

இந்தியச் சிறைப்பணி அமைப்போடு பின்னாளில் இணைந்து திருச்சி மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவற அமைப்புகளை ஒருங்கிணைத்துக் கூட்டுப் பொறுப்புடன் சிறைப்பணி செய்யப்பட்டது. பல்வேறு பணிக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை கல்விப் பணிக்குழு, சட்டப் பணிக்குழு, பொருளாதாரப் பணிக்குழு, மறுவாழ்வுப் பணிக்குழு, வீடு சந்திப்புக் குழு, இசைக் குழு, ஆற்றுப்படுத்தும் குழு, கலைக்குழு, வழிபாட்டுக்குழு, மருத்துவப் பணிக்குழு முதலியவை ஆகும். மேற்கண்ட குழுக்களில் தகுதியான அருள்சகோதரிகள், அருள்சகோதரர்கள், அருள்பணியாளர்களை நியமித்து, அவர்களைப் பவுல் இறையியல் கல்லூரி ஒருங்கிணைத்து சிறைவாசிகளின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பது நிகழ்காலச் சான்று. இதன் ஒருங்கிணைப்பு அலுவலகம் பவுல் கல்லூரியில்தான் இருக்கும், இங்கிருந்து வழக்குரைஞர்களைச் சந்திப்பது, நீதிமன்றம் செல்வது, பிணை எடுப்பது, ஆய்வுத் தண்டனைக் கைதிகளின் குடும்பங்களை ஆற்றுப்படுத்துவது, அவர்களின் குழந்தைகளைக் கல்வி நிலையங்களில் சேர்ப்பது, தன்னார்வப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம், திறனாய்வு, பயிற்சி என்று அத்தனை பணிகளையும் செய்தது எம் கல்லூரிதான்.

சிறைச்சாலையைக் கல்விச் சாலையாக மாற்றியதே எமது பெரும் வெற்றி எனலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10.00 மணி முதல் பகல் ஒரு மணி வரை கணக்கு, அறிவியல், ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டது. சிறைக்குள் வகுப்பறை ஏற்பாடு செய்து தருவார்கள். தொலைதூர வழியில் கல்வி கற்கும் சிறை அன்பர்கள் தங்களுக்கு எழும் ஐயங்களை வகுப்பறையில் நீக்கித் தெளிவு பெற்றார்கள். ஆயுள் தண்டனைக் கைதியான பாலு சிறைக்கு வந்த போது 19 வயது, ஒன்பதாம் வகுப்பு மட்டுமே படித்த இடைநின்ற மாணவர், இப்பொழுது அவர் முதுகலைப் படிப்பு முடித்துச் சிறையிலிருந்து மீண்டு இன்று குடும்பத்தோடு மகிழ்வாக வாழ்கிறார்.

மாதம் ஒரு முறை ஞாயிறு திருப்பலி, ஒப்புரவு அருளடையாளம், செப்டம்பரில் மாதா திருவிழா, டிசம்பரில் கிறிஸ்து பிறப்பு விழா, புனித வார வழிபாடுகள் நடத்தப்பட்டன. சிறைச்சாலையை அறிவுச் சாலையாக மாற்றிய பெருமை நம் பவுல் கல்லூரி மாணவர்களுக்கு உண்டு. சிறைவாசிகளின் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் தொகுக்கப்பட்டு அவை நூல்களாக வெளிவந்துள்ளன. பல்வேறு வார, மாத இதழ்களில் அவர்களின் கட்டுரை, கவிதையை வரச் செய்து, அவர்களின் தனிமையை இலக்கியமாக்கி, அவர்களை மதிப்பீட்டு மனிதர்களாக மாற்றியது நமது கல்லூரிதான்.

தருமம் எடுத்த அனுபவம்

சிறைப்பணி செய்யும்போது இப்பணிக்கான நிதி ஆதாரம் பெற நன்கொடையாளர்களை நாடுவதில்லை. மாறாக, பங்குப் பணித்தளங்களில் ஞாயிறு திருப்பலி முடிந்தவுடன் கோயிலுக்கு வெளியில் கையில் தட்டை ஏந்தி நிற்போம். மக்கள் கொடுக்கும் சிறு தொகையைச் சேகரித்து அதைக் கொண்டு சிறை அன்பர்களுக்கான பணியைச் செய்வோம். பல குற்றங்கள் புரிந்தவர்களுக்காக நாங்கள் பொதுவெளியில் தருமம் எடுக்கும் நிகழ்வு பல சிறைவாசிகளை மனமாற்றியது. இந்த நிகழ்வின் மூலம் மனிதத்தின் மேன்மையையும் மதிப்பீடுகளையும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

சிறையில் பிறந்த குழந்தைகளை எடுத்து அருள்சகோதரிகள் இல்லத்தில் பராமரிப்புச் செய்து உரிய காலத்தில் பெற்றோரிடம் சேர்ப்பது, தாய் தந்தையர்கள் சிறைப்படுத்தப்படும்போது அவர்களுடைய குழந்தைகளின் கல்வி தடைபடாமல் காப்பது, அதற்காக உரிய மாணவ, மாணவியர் விடுதியை தேடிச் சேர்ப்பது, பள்ளி கல்லூரிக் கட்டணத்தை நேரில் செலுத்துவது முதலியன முதன்மைக் கல்விப் பணியாக இருந்தது. பட்டுப்பூச்சி வளர்ப்பு, மெழுகுதிரி தயாரித்தல், காளான் வளர்த்தல், தோட்ட வேலைகள் என்று சிறைக்குள்ளே வருவாய் ஈட்டுவதற்கான பணிகளை மேற்கொண்டோம். அவர்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட தென்றல் இசைக்குழு திருச்சி மையச் சிறையில் அனைவரின் இதயங்களையும் கவர்ந்தது. தங்கள் துன்ப துயரங்களைப் பாடல்கள் மூலம் மறக்கச் செய்தது இந்த இசைக் குழுவின் சிறப்புப் பணி. சிறையில் சூழ்நிலை காரணமாகக் குற்றம் புரிந்த இளையோர்களை இசைக் கலைஞர்களாக மாற்றியது அனைவராலும் பாராட்டப்பட்டது. அனைத்து இசைக் கருவிகளையும் இசைக்க முறையான பயிற்சி ஆசிரியர்களை அழைத்துச் சென்று, பயிற்சி கொடுத்து, சுதந்திர நாள், குடியரசு நாள், பெண்கள் நாள், காந்தி பிறந்த நாள் முதலிய நாள்களில் இன்னிசைக் கச்சேரியினைச் சிறையில் நடத்த ஏற்பாடு செய்தோம்.

சிறைக்குப் பிந்தைய வாழ்வு

சிறைவாசிகளைப் பொருத்தவரை சிறை வாழ்க்கையைவிடச் சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்பு அவர்களது வாழ்வு சில வேளைகளில் படுமோசமாக இருக்கும். பெண் சிறைவாசிகளைக் காண அவர்களின் குடும்பங்களிலிருந்து பார்வையாளர்கள் வருவதில்லை. சிறை செல்லும் பெண்கள் குடும்பத்திலிருந்து துண்டிக்கப்படுகிறார்கள். சிறையிலிருந்து வெளியேறிய பின்புகூட வீட்டில் பாதுகாப்பான முறையில் தங்க வாய்ப்பற்ற சூழல் நிலவுகிறது. இதனால் விடுதலைக்குப் பின்பு எங்குச் செல்வது என்று திசை தெரியாமல் வாழும் பெண்களைப் பாதுகாப்பான இடங்களில் பணியமர்த்துவது, தொடர்ந்து கண்காணிப்பது போன்றவை எம் பணியில் முன்னுரிமை பெற்றது.

இறையாட்சிப் பணி என்பது மனித மதிப்பீடுகளோடு சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவத்தில் நாம் வாழும் சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதே என்பது சிறைப்பணி மூலம் பவுல் கல்லூரி எனக்குக் கற்றுத் தந்த பாடம் என்று பதிவு செய்வதில் பெருமையே. அதையே எம் பணியில் தொடர்கிறோம்.

சமூக ஈடுபாட்டுப் பயிற்சியில் பவுல் கல்லூரி



அருள்பணி. அ. மனுவேல்
திருச்சி மறைமாவட்டம்

புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் இறையியல் முடித்து (1977-1981) 19.05.1981 அன்று அருட்பொழிவு செய்யப்பட்டேன். அது முதல் 1986 ஆண்டு வரை பாரம்பரியப் பங்குக் குருவாக, தனி மனித ஆன்மிகத்தை மையப்படுத்தி, பக்த சபைகளை ஊக்குவித்தல், திருவிழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுதல், கோயில் கட்டுவது எனப் பாரம்பரியப் பணிபுரிந்தேன். மேலும், குருத்துவக் கல்லூரியில் அருள்பணி. ச.தே. செல்வராசு எங்கள் குழு வழிகாட்டியாக வந்தபின், அவரது அருங்கொடை அனுபவம், குழுத் திருப்பலி தந்த தாக்கம், பவுல் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களான அருள்பணி. வல்தாரிஸ், அருள்பணி. பெர்க்மான்ஸ் போன்றோரின் தாக்கத்தால் அருங்கொடைப் பணியில் ஆர்வம்கொண்ட அருங்கொடைப் பணியாளரானேன்.

ஆனால், மனிதர் தனி மனிதர் மட்டுமல்ல ஒரு சமூகம் சார்ந்தவர்; தான் மட்டும் மாறினால் போதாது, தான் வாழும் சமூகத்தினையும் மாற்ற வேண்டும். அதற்கு அருங்கொடை முறை அதிகம் உதவவில்லை என்பதனைக் காலப்போக்கில் என் தனிப்பட்ட வாழ்வின் அனுபவத்தில் உணர்ந்தேன். இந்தத் தெளிவிற்கு வரக் குருத்துவக் கல்லூரியில் எங்களுக்கு அருள்பணி. ஏ.எம். லூர்துசாமி, அருள்பணி. பெலிக்ஸ் வில்பிரட் போன்ற பேராசிரியர்களால் கொடுக்கப்பட்ட விடுதலை இறையியல் பயிற்சியும் இறையியல் கல்லூரியோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் உதவின. இதனால் பின்னர் சமூக ஈடுபாடுடைய அருள்பணியாளராக மாறினேன். சாதியத்தில் ஊறிப்போன என்னைச் சாதியொழிப்புப் பணியாளராக மாற்றியது இந்தக் குருத்துவக் கல்லூரி தந்த பயிற்சிதான்.

களப்பயிற்சி அனுபவமும் பங்குப் பணிகளும்

குடந்தை மறைமாவட்டம் மணத்திடல் பங்கிற்கு 15 நாள் களப்பணி அனுபவத்துக்குச் சென்றோம். அருள்பணி. நீதிலால் ஐ.எம்.எஸ். அந்த முகாமை வழிநடத்தினார். பட்டியலினக் கிறித்தவர்கள் வாழ்ந்த கிளைக் கிராமங்களைக் கொண்ட பங்கு அது. இந்த மணத்திடல் பங்கில் கற்ற பாடம்தான் சாதியத்தில் ஊறிப்போன என்னை உருமாற்றிப்போட்டது. எனது அருள்வாழ்வு வழிகாட்டி அருள்பணி. லூர்துசாமி காட்டிய தொடர் வழிகாட்டுதலில் நான் கொஞ்சம் கொஞ்சமாக மாறினேன். மாட்டுக்கறி குருத்துவக் கல்லூரியில் வழங்கப்பட்டபோது முதலில் உண்ணாத நான் பிறகு சாப்பிடத் தொடங்கினேன். எனது குருத்துவ வெள்ளி விழாவின்போது சமபந்தி விருந்தும் பாதம் கழுவும் சடங்கும் நடத்தினேன். மாட்டுக்கறி உணவு அதில் பரிமாறப்பட்டது. அதில் பங்கு பெற்றவர்களுக்கும், ஆதரவு தெரிவித்த யாவருக்கும் பரிசுகளைத் தந்து ஊக்கப்படுத்தினேன். தெரசாள்புரம் பங்கில் திருமண மண்டபத் திறப்பு விழாவின்போது விரும்பியவர்களுக்கு மாட்டுக்கறி விருந்து கொடுத்தேன்.

சாதியின் ஊற்றுக்கண், நாற்றாங்கால் சாதிவாரித் திருமணம் என்பதால், பல இடர்ப்பாடுகளுக்கு நடுவில் 50 சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி உள்ளேன். தெரசாள்புரத் திருமண மண்டபத் திறப்பு விழாவில் சாதி மாறித் திருமணம் செய்த 25 ஜோடிகளை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தேன்.

சாதியம் களைவதில் சந்தித்த இடர்ப்பாடுகள்

பல பங்குக் கோயில்களில் சாதிவாரியாக மக்கள் அமர்ந்திருப்பதையும், உயர்த்தப்பட்ட சாதியினருக்கு முதலில் நற்கருணை வழங்கவேண்டும் என்பதையும், பாஸ்கா என்ற பரம்பரை நாடகத்தில் பட்டியலினக் கிறித்தவர் இடம்பெற முடியாது போன்ற ஏற்றத் தாழ்வுகளையும் களைய அருங்கொடை செபம், அருங்கொடைத் தியானம், தெருமுனைப் பிரசங்கம் முதலிய உத்திகளைக் கையாண்டேன்.

சாதிய ஆதிக்கம் மிக்க ஊர்ப் பொறுப்பாளர்கள் கடுமையாக எதிர்த்ததால் வேறு பங்கிற்கு மாற்றப்பட்டேன். அங்குச் சாதி மாறிக் காதல் திருமணம் செய்த குடும்பத்துக்கு இந்து சமய ஊர்ப் பெரியவர்களும், கிறித்தவ ஊர்ப் பெரியவர்களும் பெருந்தொகை அபராதம் விதித்துள்ளனர்.

இந்தப் பின்னணியில், நான் பொறுப்பேற்ற பின்னர் ஊர் விதித்த அந்த அபராதம் கட்டாத குடும்பத்தில் திருமணம் ஏற்பாடு ஆனது. அவர்கள் அபராதம் கட்டாமல் கோயிலில் திருமணம் நடத்தக் கூடாது என்று என்னை ஊர்ப் பொறுப்பாளர்கள் நிர்ப்பந்தம் செய்தனர். நான் துணிந்து திருமணத்தை முடித்துவைத்தேன். வழக்கம்போல் அவர்கள் ஆயரிடம் சென்றார்கள், பங்கிலிருந்து தூக்கப்பட்டேன். வேறு பணி தரவில்லை. பின்னர் அகில இந்தியக் குருக்கள் பேரவை (CPCI) தலையீட்டின் பேரில் மீண்டும் பங்குப் பணி கிடைத்தது.

அகில இந்திய அருள்பணியாளர்கள் பேரவைப் பணி

விடுதலை இறையியல் பயிற்சியின் பின்னணியில் பவுல் குருத்துவக் கல்லூரியில் பயின்றவர்கள் பல்வேறு புதிய பணிகளை மேற்கொண்டனர். கோட்டாறு மறைமாவட்டத்தில் 'இறையரசு இயக்கம்' தோன்றியது. சிவகங்கையில் 'உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்' தோன்றியது. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த மறைமாவட்ட அருள்பணியாளர்கள் பலர் மாற்றுப் பணிகளை முன்னெடுத்தனர். அதில் எழுந்த அறைகூவல்களைச் சந்திக்க மறைமாவட்ட அருள்பணியாளர்கள் ஒன்றுகூடி ஓர் அமைப்பைத் தொடங்கினர். இது பின்னர் விரிவடைந்து இந்திய அளவில் மறைமாவட்ட அருள்பணியாளர்களுக்கு இந்திய அருள்பணியாளர்கள் பேரவை என்ற அமைப்பாகத் தோன்றியது (CPCI - Catholic Priests' Conference of India). இந்த அமைப்பின் தமிழ்நாட்டுக் கிளையின் பொருளாளராகச் சில ஆண்டுகள் செயல்புரிந்தேன். இந்த அமைப்பு சமயம் கடந்த விதத்திலும் மக்களிடம் சமூகச் செயல்பாடுகளை முன்னெடுத்தது.

முதல்முறை சிறை சென்ற அனுபவம்

திண்டிவனத்தில் உள்ள கிறித்தவ நிறுவனத் தொழிற் கல்விக்கூடத்தில் தொழிலாளர்கள் கூட்டாகச் சேர்ந்து சங்கம் தொடங்கினர். அதை விரும்பாத அந்த நிறுவனம் 17 தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கியது. அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தப் பல கட்டப் பேச்சுவார்த்தை நடந்தது. அந்த அறவழிப் போராட்டத்தில் நான் பங்கெடுத்தேன். இறுதிக் கட்டமாக முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் பங்கெடுத்த ச.தே. செல்வராசு, அருள் சகோதரிகள் சிலர், தொழிலாளர்கள்மீது கொலை முயற்சி என்ற பொய்வழக்குப் போடப்பட்டு திண்டிவனம் சிறையில் அடைக்கப்பட்டோம். அதுதான் நான் முதல் முதலாக சிறை சென்ற அனுபவம். பின்னர் பிணையில் வெளிவந்து வழக்கு நடத்தி வெற்றி பெற்றோம்.

உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தில் என் பணி

என் வகுப்புத் தோழர் அருள்பணி. சேவியர் அருள்ராஜ் அவர்களாலும் சிவகங்கை அருள்பணியாளர்களாலும் 'உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்' ஏற்படுத்தப்பட்டது. இது சமயம் கடந்த ஓர் இயக்கம். மக்களின் அடிப்படைத் தேவைகளை, வாழ்வாதாரங்களை மீட்டெடுக்க, பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட இயக்கம்; தமிழகத்தில் எட்டு மாவட்டங்களில் செயல்படுகிறது. அதில் உறுப்பினராகிப் பணிசெய்தேன். அதன் பொருளாளராகி அந்த இயக்கச் செயல்பாட்டுக்கு நிதி திரட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ளேன். அவ் இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்ப, போராட்டங்களுக்கு ஆட்களைத் திரட்ட ஏற்படுத்தப்பட்ட கலைக்குழுவில் நானும் பங்கெடுத்துப் பேசினேன், பாடினேன், நடித்தேன். கவிஞர் இன்குலாப் எழுதிய ஔவை என்ற நாடகத்தை நடத்த இயக்கத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளித்து அந்த நாடகம் தஞ்சைப் பல்கலைக் கழகம், மதுரை தமுக்க மைதானம், திருச்சி, சென்னையில் நடைபெற, அதன் ஒருங்கிணைப்பாளராக நான் இருந்துள்ளேன்.


உழைக்கும் மக்கள் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் நான் கலந்துகொண்டு கைதாகி விடுதலை செய்யப்பட்டேன். அதில் ஒன்றினைக் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி மாவட்டம் சூரைக்குடிபட்டி, சந்தனத்தான் குறிச்சி, கோடங்கிபட்டி, யாகப்புடையான் பட்டி போன்ற ஊர்களுக்கு அன்றைய காலக்கட்டத்தில் குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, நகரப்பேருந்து வசதி இல்லை. அதற்காக அளுந்தூர் அருகில் சாலை மறியல் போராட்டம் ஏற்பாடு செய்தோம். அதில் பங்கேற்ற இயக்க மக்கள் ஏறத்தாழ 45 பேர், அருட்சகோதரிகள், அருள்பணி. சான் கென்னடி முதலானோரைக் காவல்துறையினர் மிகப் பலமாக லத்தியால் அடித்துக் கைது செய்தார்கள். நாங்கள் காவல்துறைமீது மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றி பெற்றோம். அவர்களுக்குத் தண்ணீர் வசதி, சாலை வசதி, நகரப்பேருந்து வசதி கிடைத்தன.

தமிழ்த் தேசியப் பேரியக்கப் பணி

தமிழ்த் தேசிய பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்து எனது அருள்பணியோடு இயக்கப் பணியினையும் செய்கின்றேன். இது தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க, தமிழ் மொழியைப் பாதுகாக்க, மொத்தத்தில் தமிழ் இனத்தைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட இயக்கமாகும். அயல் மாநிலத்தவராலும் வட மாநிலத்தவராலும் தமிழர்களின் வாழ்வு பாதிக்கப்படுவதிலிருந்து தமிழர்களை மீட்டு எடுப்பதுதான் இதன்பணி. அதற்காக மக்களைச் சமயம் கடந்த, சாதி கடந்த நிலையில் ஒன்று திரட்டி அறவழியில் போராடித் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதே இதன் நோக்கம். அண்மையில் பொன்மலையில் உள்ள தொடர்வண்டிப் பணிமனையில் மிகக் குறைந்த தமிழர்களே பணி அமர்த்தப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட தொடர் மறியல் போராட்டத்தில் நானும் பங்கேற்றேன். டாஸ்மாக் கடையைத் திறக்க எதிர்ப்புப் போராட்டம், விவசாயிகள் போராட்டம் போன்றவற்றிலும் கலந்துகொண்டேன்.

பவுல் கல்லூரித் தாய்க்கு எனது பணிவான பரிந்துரை

இயேசுவின் இறையாட்சிப் பணியை மீட்டெடுக்கச் சாதிய நோய், சமய வெறி நோய், தனிச்சொத்துப் பெருக்கம் போன்ற தீமைகளைக் களையப் பாதுகாவலர் பவுலின் எடுத்துகாட்டினைப் பின்பற்றுவோம்; அவர் கிறித்தவத்தைப் பரப்பத் தம் உயிரை கொடுத்ததுபோல நாம் வாழும் இந்திய, தமிழக மண்ணில் இறையாட்சிப் பணியினை வளர்த்தெடுக்க நம்மை அர்ப்பணிப்போம்.



தமிழக இளம் பணியாளர் இயக்கம்



பணி. பாரிவளன்
மதுரை உயர்மறைமாவட்டம்

மதுரை உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான் 1996ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை நம் புனித பவுல் இறையியல் கல்லூரியில் பயின்று திருப்பொழிவு பெற்றேன். என்னைப் பண்படுத்தி, களர் நிலத்தை விளை நிலமாக மாற்றுவதுபோல் என்னை உருவாக்கிய பெருமை புனித பவுல் இறையியல் கல்லூரியையே சாரும். இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் இயேசுவைப்போல மரபு சார்ந்த சமயப் பணிகளில் மட்டுமல்ல, மக்கள் வாழ்வியலில் ஏற்படும் பல்வேறு சமூக, அரசியல் சிக்கல்களிலும் தலையீடு செய்து பல தளங்களில் ஈடுபாட்டுடன் அருள்பணியைச் செய்துவருவது மகிழ்விற்குரியது. புனித பவுல் கல்லூரியின் உருவாக்கத்தின் வெளிப்பாடுகளில் ஒன்று, அருள்பணியாளர்கள் பல்வேறு மக்கள் இயக்கங்களில் இணைந்து செயலாற்றுவதாகும். அதைவிடச் சிறப்பு, தங்களுக்கென ஓர் அமைப்பை உருவாக்கி அதன்வழி சமூகத்தில் விடுதலைக்கான பணிகளை முன்னெடுப்பது. அத்தகைய ஓர் அமைப்புதான் தமிழக இளம் பணியாளர் இயக்கம். இவ்வியக்கம், மரபு சார்ந்த பணிகளைக் கடந்து மக்கள் பணியில் ஆர்வம் கொண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

தமிழக இளம் பணியாளர் இயக்கம்

1990களில் மக்கள் இயக்கங்கள் பல தமிழகத்திலே உருவாகின. மாற்றுச் சிந்தனைகளைத் தாங்கிய சமூக அக்கறையாளர்கள் ஈகைக் குணத்துடன் சமூகத்திற்காகச் சிந்தித்தனர், போராடினர். மக்கள் இயக்கங்களின் செயல்பாடுகள் சமூகத்தில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கிக் கொண்டிருந்தன, மாற்றத்திற்கு வித்திட்டன. குறிப்பாக, தமிழ்த் தேசிய அரசியல், தாய் மொழிக் கல்வி, சாதி ஒழிப்பு முதலியவை இவ்வியக்கங்களின் நோக்கங்களாக இருந்தன.

சமூகத்தின் நீரோட்டத்தை அறிந்து தங்களையும் அதோடு இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற பொதுமை உணர்வில், 1990களில் சென்னை பூவிருந்தவல்லி தூய நெஞ்ச இறையியல் கல்லூரியில் பயின்ற இறையியல் மாணவர்கள் உருவாக்கியதுதான் ''தமிழக இளம் பணியாளர் இயக்கம்.'' இறையியல் கல்லூரியில் உருவான இவ்வியக்கம், 1995ஆம் ஆண்டிற்குப்பின் திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்ட அருள்பணியாளர்களை உறுப்பினர்களாக இணைத்துக்கொண்டது.

இயக்கத்தின் இலக்காக, 'சாதிகள் ஒழிந்த சமநிலை கொண்ட தன்னுரிமைத் தமிழ்த் தேசியம்....' எனக் கொண்டு இவ்விலக்கை அடையப் பல வழிமுறைகளைக் கையாண்டது. ஆர்வமுள்ள அருள்பணியாளர்களை ஒன்றிணைத்துச் சிந்தனைகளைப் பகிர்ந்து தங்களது ஈடுபாட்டு உணர்வை ஆழப்படுத்திக் கொண்டு கருத்தமர்வுகள், கருத்துப் பாசறைகள், நூல்கள் வெளியிடல், சிக்கல்கள் குறித்த நிலைப்பாடுகளை மடல்கள்வழி தெரிவித்தல், துண்டறிக்கைகள் வெளியிடல் எனப் பல நிலைகளில் அருள்பணியாளர்கள் தங்களை உருவாக்கிக் கொண்டார்கள். மக்கள் போராட்டங்களை இயக்கத்தின் பெயரில் முன்னெடுக்காவிட்டாலும், அந்தந்தப் பகுதிகளில் செயல்பட்டு வந்த மக்கள் இயக்கங்களோடு இணைந்து தங்களது போராட்டக் களத்தை அமைத்துக் கொண்டார்கள் எம் அருள்பணியாளர்கள். தமிழ்த் தேசியம், மொழி உணர்வு, சாதி மறுப்பு, சாதி ஒழிப்புக் கொள்கை, பணித் தளங்களில் போராட்டங்களில் விடுதலைச் சிந்தனைகளைச் செயலாக்குதல், தமிழ், தமிழர் நலன், சமூக விடுதலைக்கான மக்கள் இயக்கங்களோடு இணைந்த செயல்பாடு ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டது இவ்வியக்கம்.

மேலும், பணியாளர்கள் தங்கள் மறைமாவட்டங்களில் பணம், பதவி, சாதி, தன்னலம் சார்ந்த குறுகிய நீரோட்டங்களிலிருந்து விலகிச் செயல்படுபவர்களாகவும், தெளிந்த சிந்தனையும் விரிந்த பார்வையும் கொண்டு

தம்மையும் சமூகத்தையும் திறந்த மனநிலையோடு திறனாய்வு செய்பவர்களாகவும் இருக்கவேண்டும் என இது வலியுறுத்துகிறது.

இறையியல் கல்லூரிகளில் இயக்கத்தின் செயல்பாடு

அருள்பணியாளர்கள் மட்டுமல்ல, இறையியல் பயில்கின்ற மாணவர்களும் இவ்வியக்கத்தில் உறுப்பினர்களாகச் செயல்பட்டார்கள். சென்னை பூவிருந்தவல்லி தூய நெஞ்ச இறையியல் கல்லூரி, திருச்சி புனித பவுல் இறையியல் கல்லூரி, புனே பாப்பிறை இறையியல் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் பல மாணவர்கள் இவ்வியக்கத்தில் உறுப்பினர்களாகி, விடுமுறைக் காலங்களில் இவ்வியக்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு தொடக்கத்திலிருந்தே இக்கருத்தியலை உள்வாங்கிக் கொண்டனர்.

இயக்கத்தின் செயல்பாடு

இயக்க அருள்பணியாளர்கள், பல்வேறு மக்கள் இயக்கங்களோடு சேர்ந்து அந்தந்தப் பகுதிகளில் பணிகளை முன்னெடுக்கிறார்கள். குறிப்பாக, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தோடு மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், திருச்சி, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் பணியாற்றும் தோழர்கள் தங்களை இணைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள்.

தூத்துக்குடிப் பகுதியில் அமைந்துள்ள பெருமணல் கிராமத்தில் தாதுமணல் பெருமுதலாளிகளால் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில் அப்போராட்டத்தில் பலர் கலந்து கொண்டு சிறை சென்ற வரலாறு மறக்க இயலாதது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைப் போராட்டத்தில் இன்றுவரை தங்களை இணைத்துக்கொண்டு போராடிவருவதும், கூடங்குளம் அணுமின் நிலையப் போராட்டத்தில், குறிப்பாக 2003ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்களிலும் எம் இயக்கத் தோழர்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. இன்னும் பல நிலைகளில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களில் கலந்துகொண்டனர்.

நூல் பணி

மேலும், நாளொன்றுக்கு ஒரு சமூகப் போராளி குறித்துச் சிந்திப்பது என்ற அடிப்படையில் ஆண்டு முழுமைக்கும் *விடுதலைப் பாதையில்* என்ற நூல் நான்கு தொகுதிகளாக 2002ஆம் ஆண்டு இயக்க அருள்பணியாளர்களின் முழு முயற்சியால் வெளியிடப்பட்டது. காலத்தின் சூழலுக்கேற்பத் துண்டறிக்கைகள், சிறிய நூல்கள், ஆண்டு மலர்கள் வெளியிட்டு, தமிழ்த் தேசியச் சிந்தனையையும் மொழி உணர்வையும் சாதி மறுப்புக் கொள்கைகளையும் பரவலாக்கம் செய்தனர்.

அனைத்திற்கும் மேலாக, தமிழக இளம் பணியாளர் இயக்கத்தின் பாதையில் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம், இயேசு அவை அருள்பணியாளர்கள், மக்கள் அமைப்புகள் எனப் பலர் இணைந்து 2007ஆம் ஆண்டு மதுரை பாத்திமா கல்லூரியில் ''சாதி மறுப்பு கிறித்தவத்தின் நிபந்தனை'' என்ற முழக்கத்தோடு நடைபெற்ற இரண்டாம் இறையியல் எழுச்சி மாநாடு தமிழக இளம்பணியாளர் இயக்கத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்.

நிறைவாக

புனித பவுல் இறையியல் கல்லூரியில் பயின்ற பலர் இவ்வியக்கத்தில் உறுப்பினராகித் தங்களின் இறையாட்சி உருவாக்க இலக்கைக் கூர்மைப்படுத்திக்கொண்டு தாங்கள் பணியாற்றும் பணித்தளங்களிலும் சமூகத்திலும் மாற்றத்தை உருவாக்குவது நம் கல்லூரிக்குப் பெருமையே. அதற்கு உறுதுணையாக இருந்து உருவாக்கி ஊக்கமூட்டிய அனைத்துப் பேராசிரியர்களையும் நன்றியோடு நினைவுகூருகிறோம்.

அதே வேளையில், இன்றைய உலகியல் போக்கு அனைத்து நிலைகளிலும் அறைகூவல் நிறைந்த ஒன்றாக இருக்கும் கட்டத்தில், இன்னும் கூடுதலாக இத்தகையப் பணிகளைச் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து, இன்று உருவாகிவரும் அருள்பணியாளர்கள் இத்தடத்தில் பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இது அவர்களது கடமையும்கூட.

தமிழ்ச் சிந்தனை வழியில் இறையியலாக்கம்



அருள்பணி. சகாயதாசு
குழித்துறை மறைமாவட்டம்

புனித பவுல் இறையியல் கல்லூரியில் 1996 முதல் 1999 வரை நான் பயின்ற காலங்களில் தமிழ்ச் சிந்தனைகள், தமிழ் அமைப்புகளுடனான தொடர்புகள் என்னை எப்படி உருவாக்கின என்பதையும், அந்த உருவாக்கம் எனது பணி வாழ்விற்கு எப்படி உதவியது என்பதையும் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் பவுல் இறையியல் கல்லூரி ஒரு பல்கலைக்கழகம். இறையியலை வாழ்வியலாக்கப் பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கித் தந்த பயிற்சிக் களம். வெவ்வேறு துறைகளில் புலமை பெற்ற அறிவில் சிறந்த பேராசிரியர்கள், அறிவை வளர்க்கும் நூலகம், அனுபவம் தரும் களப் பயிற்சிகள், திறன்களை வளர்க்கும் கலைக் களம், உடல் தகுதி வளர்க்கும் விளையாட்டுகள் என உயரங்களைக் காட்டிய சீரிய கலைமனை. குறிப்பாக, தொண்ணூறுகளில் தமிழ்ச் சமூகத்தில் அழுத்தமாகப் பதியத் தொடங்கிய தமிழ்த் தேசியச் சிந்தனைகளை மெருகூட்டிக்கொள்ளப் பவுல் கல்லூரி தந்த வாய்ப்புகளைப் பதிவு செய்வதும் பணி வாழ்வில் இச்சிந்தனை அடிப்படையில் ஒத்த சிந்தனையுடைய நண்பர்களோடு அமைப்பில் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைப் பகிர்வதுமே இந்த எளிய பதிவின் நோக்கம்.

மண்ணை, மரபை, மக்களை, மொழியைச் சிறுமைப்படுத்தி 'வளர்ச்சி' என்னும் பெயரில் அனைத்தையும் ஓரங்கட்டும் பெருநிறுவன அரசியல் உலகில் வாழ்ந்து வருகிறோம். வல்லரசு நாடுகள்முதல் திருஅவையின் அடிப்படை அலகாகிய அன்பியங்கள்வரை இன்று இந்தப் பெருநிறுவன அரசியல் ஆக்கிரமித்துள்ளது. தமிழ்த் தேசியம் மண்ணையும் மக்களையும் மரபையும் மொழியினையும் பண்பாட்டுக் கூறுகளையும் முதன்மைப்படுத்துவது. சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பின்னர் தேசிய இன அரசியல் உலகின் கருத்தை ஈர்த்துவந்த நிலையில்தான் பவுல் கல்லூரியும் இச்சிந்தனை அடிப்படையில் பல்வேறு பயிற்சிகளை ஒருங்கிணைத்தது. இறையியல் படிப்பின் மொழி தாய் மொழியாம் தமிழில் இருந்தது மிகச் சிறப்பு. அருள்பணி. ச.தே. செல்வராசு, ஆயர் சூசைமாணிக்கம், அருள்பணி. இளங்கோ, அருள்பணி. பால், அருள்பணி. தே. அல்போன்சு, அருள்பணி. எரோணிமுசு என்று அனைத்துப் பேராசிரியர்களும் திறந்த மனதுடன் தமிழ் மொழியிலேயே பாடங்களை நடத்தினர். மக்களுக்கு நெருக்கமாகப் பணி புரிய மக்களுக்கு நெருக்கமான மொழி ஆளுகை நிச்சயமாகத் தேவை. அதைப் பவுல் கல்லூரி சிறப்பாகத் தந்தது.

அன்றைய நாளில் தெளிவான தேசிய இன அரசியல் பார்வை கொண்டிருந்த முனைவர் கோ. கேசவன், கோவை ஞானி, குணா, அ. மார்க்சு, இரா. இளங்குமரனார், பெ. மணியரசன், அருளியார் முதலான அறிஞர் பெருமக்கள் பவுல் கல்லூரிக்கு வந்து உரையாற்றினர். குறிப்பாக, ச.தே. செல்வராசு அவர்கள் இவ் அறிஞர்களோடு உரையாடவும் உறவாடவும் கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தார். தமிழ்க் கலைகளை வளர்த்தெடுக்கக் கலைக்குழு உருவாக்கப்பட்டது. பறையாட்டம், களியலாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம் என்று திருச்சி மாநகரில் சிறிய தெருக்கள் முதல் கிராமங்கள் வரை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேற்றம் கண்டன. எங்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்த அண்ணன்கள் மெல்சன், வில்லியம், அரசு, பிரிட்டோ செயபாலன், சாமிநாதன் ஆகியோரின் வழிகாட்டுதலும் ஊக்கப்படுத்துதலும் எங்களில் கலை ஆர்வம் வளரத் துணை செய்தன. 'தாய் மண்ணுக்கும் தமிழ் மொழிக்கும் எங்கள் வணக்கம்; இனமானத் தமிழருக்கும் எங்கள் வணக்கம்' என்று களியல் அடித்து ஆடும் போது நரம்புகள் புடைத்து மயிர் சிலிர்க்கும். விழிப்புணர்வுப் பாடல் ஒலிப்பேழை தயாரித்துத் திருத்தொண்டரான நேரத்திலேயே வெளியிட்ட பெருமை எமது மூத்த அண்ணன்களையே சாரும். பின்னர் அது எங்களது தம்பிகள் ஜாய், விக்டர், டென்சிங் ஆகியோர்வழி மேலும் வலுப்பெற்றது. பின்னாளில் டென்சிங், ஜாய் ஆகியோர் களரி மக்கள் பண்பாட்டு மைய இயக்குநர்களாகச் சிறப்பாகப் பணியாற்ற இந்தக் கலைக்குழு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

நூலகம் எமது கருத்தியல் உருவாக்கத்திற்குப் பெரும் துணை செய்தது. நான் ஓர் ஆண்டு நூலகப் பொறுப்பாளராக இருந்த நேரம் ஆயர் சூசைமாணிக்கம் அவர்களது வழிகாட்டலில் ஏராளமான நூல்களின் அறிமுகம் கிடைத்தது. விடுமுறையின்போது நூல்களை ஒருங்கிணைத்து வரிசைப்படுத்தும் பணி பல புதிய நூல்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. ஆயர் சூசைமாணிக்கம் அவர்களின் வழிகாட்டலில் எழுதப்பட்ட விருப்பப்பாடக் கட்டுரைத் தொகுப்பு பின்னாட்களில் *தாய்மண்ணைத் தேடி* என்ற நூலாக வைகறை வெளியீட்டகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இறையியல் படிப்பில் ஆய்வுக் கட்டுரையை ஆயர் சூசைமாணிக்கம் அவர்களின் வழிகாட்டுதலிலே 'யூத தேசிய இன உருவாக்கமும் தமிழ்த் தேசிய இன விடுதலையும்' என்ற தலைப்பில் எழுதுவதற்கு மூன்று ஆண்டுகள் கல்லூரியில் தேசிய இன அரசியல் குறித்து நான் பெற்றுக்கொண்ட படிப்பினைகளும் களப் பயிற்சிகளும் துணை செய்தன.

2000ஆம் ஆண்டு அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்றபின் மறைமாவட்டத்தில் தேசிய இன அரசியல் சிந்தனை கொண்ட மூத்த அண்ணன்களோடு சேர்ந்து பணியாற்றத் தொடங்கினோம். பங்குப் பணிகளிலும் மொழி, பண்பாடு, கலை, விழிப்புணர்வுப் பாடல்கள் வழியாக மண்ணும் மக்களும் சார்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுத்தோம். அனல் வெளியீட்டகம் என்ற புத்தகப் பதிப்பகம் அண்ணன்களால் வழிநடத்தப்பட்டு வந்தது. நண்பர் அருள்பணி. அலெக்சு அவர்கள் பொறுப்பில் இன்று 100 நூல்கள் வெளியிடப்பட்டுச் சிறந்த பதிப்பகமாக அது உயர்ந்து நிற்கிறது. ஏராளமான பயிலரங்கங்கள், மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடுகள் என்று மக்களுக்கான அமர்வுகள் நடத்தினோம். நாகர்கோயில் நகரத்தில் நல்ல நூல் நிலையம் ஒன்று இல்லாத குறையைப் போக்க 2006ஆம் ஆண்டு திருவள்ளுவர் நூல் நிலையம் என்ற முற்போக்கு நூல்கள் விற்பனையகத்தைத் தொடங்கி இன்றளவும் நடத்திவருகிறோம்.

பங்குப் பணிகளிலும் மக்களோடு நெருங்கி மந்தையின் மணம் அறியும் ஆயர்களாய்த் திகழ்ந்திட பவுல் கல்லூரியில் பயின்ற இறையியல் எங்களுக்குத் துணைசெய்கிறது. பங்குச் சமூகங்களின் பார்வைக்கு வராத எளிய குரலற்ற மக்களின் குரலாகப் பங்குத் திருஅவை திகழ்ந்திடத் தொடர்ந்து உழைத்துவருகிறோம். காலப்போக்கில் அனைத்து மக்கள் அமைப்புகளும் சந்திக்கும் எல்லா சிக்கல்களையும் எமது குழுவும் சந்தித்துவருகிறது. மறைமாவட்ட அரசியலில் ஆர்வமின்றிச் சமூகப் பணிகளில் மட்டும் பங்களிப்புச் செய்வதால் பலரும் பிரிந்துபோயினர். பிரிவினையாளர்கள், தீவிரப்போக்காளர்கள், இன மேட்டிமையாளர்கள் முதலிய குற்றப் பார்வைகள் தேசிய இன அரசியல் சார்ந்து சிந்திப்போர்மீது தொடர்ந்து சொல்லப்பட்டுக்கொண்டே வருகிறது. ஆயினும், கொள்கையில் உறுதியோடு எமது பயணம் தொடர்கிறது. இதற்குக் காரணி பவுல் கல்லூரி எமக்குத் தந்த அருமையான அடித்தளம்.

இன்று பவுல் கல்லூரி அதிகம் மாறிவிட்டது போன்று தோன்றுகிறது. மொழிப் பயன்பாட்டிலிருந்து இறையியலாக்கப் பார்வை வரையில் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பொறுப்பான சுதந்திரத்தோடு கூடிய உருவாக்கத்துக்கான வாய்ப்புகளும் குறைக்கப்பட்டுள்ளன. பேசுவதை வாழ்வாக்கும் பேராசிரியர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. பவுல் கல்லூரி தனது விடுதலை இறையியல் மரபில் தேசிய இன அரசியல், தலித் அரசியல், பெண்ணிய அரசியல், பண்பாட்டு அரசியல், சூழலியல் அரசியல் முதலிய தன் வேர்களை மீள்கண்டுபிடிப்புச் செய்து வளர்த்தெடுக்க வேண்டும். தாய் மொழியிலேயே இறையியல் கற்றுக்கொடுக்கும் தளமாகப் பவுல் இறையியல் கல்லூரி திகழ வேண்டும். மக்கள் கலைகளை, மொழியை, பண்பாட்டை வளர்த்தெடுக்கும் கலைமனையாகத் திகழவேண்டும் என்பதே முன்னாள் மாணவர்களாகிய எங்களின் விருப்பமாகும்.

> அப்பா கடவுளின் அன்பு ஆற்றல் மிக்கது; அதற்கு அடைக்கும் தாழ் ஏதும் இல்லை. மனிதருடைய தன்னலத்தைவிட அவரது தியாகம் அருள்மிக்கது; மனிதருடைய ஆதிக்கங்களைவிட அவரது அன்பு வலிமை மிக்கது. அடிமைத்தனங்களை அவர் அறுத்துவிடுபவர்; அக்கிரமத்தின் சங்கிலிகளை எல்லாம் அவர் உடைத்தெறிபவர்; சாவுக்கே அவர் சாவுமணி அடிப்பவர்; சரித்திரத்தையே அவர் மாற்றி அமைப்பவர்; வலுவற்றதைத் தூக்கி நிறுத்தி மனித உள்ளங்கள், உறவுகள், சமூகங்களில் வாழ்வும் மகிழ்வும் எங்கும் பொங்கிப் பெருகச் செய்பவர்.
>
> **(*உங்கள் தந்தை ஒருவரே* என்ற நூலிலிருந்து)**

கலை வழி அருள்பணி



அருள்பணி. லூ. அந்துவான்
மறைமாவட்ட முதன்மை குரு
திருச்சி மறைமாவட்டம்

''இசை கேட்டால் புவி அசைந்தாடும்'' எனும் இனிய கூற்று இசையின் ஆற்றலையும் தாக்கத்தையும் எடுத்துரைக்கிறது. கலை – குறிப்பாக, கவின்கலை – மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. நெறிப்படுத்தப்பட்ட முறையில் வெளிப்படுத்தப்படும் மனித உணர்வுகள்தாம் பல்வேறு கலை வடிவங்கள். இவ்வாறு முறைப்படுத்தப்பட்ட மனித உணர்வுகளின் வெளிப்பாடு இலக்கிய இலக்கணங்களுக்கு உட்படும்போது அது முறையான, முழுமையான கலை வடிவம் பெறுவதைக் காண்கிறோம்.

திருஅவையும் கலைகளைப் போற்றி வளர்க்கிறது. ''மனிதரின் கூரறிவு தோற்றுவித்தவற்றில் மிக மேன்மையாக எண்ணப்படத் தகுந்தவை கவின்கலைகள் எனத் துணிந்து கூறலாம்'' (காண் *திருவழிபாடு*, 122). சமய வழிபாட்டோடு தொடர்புடைய கலை வடிவங்களைத் திருஅவை ''திருக்கலைகள்'' என அழைக்கிறது. எனவே, ''திருக்கலை உணர்விலும் திருவழிபாட்டு உணர்விலும் கலைஞர்கள் உருவாகிட, ஆயர்கள் தாமாகவோ கலையில் தேர்ச்சியும் ஆர்வமும் படைத்த தகுதிவாய்ந்த திருப்பணியாளர்களைக் கொண்டோ அவர்களை ஆதரித்துப் பேண வேண்டும்'' (காண் *திருவழிபாடு*, 127).

நூற்றாண்டு விழாக் காணும் புனித பவுல் இறையியல் கல்லூரி இத்தகைய கலை ஆர்வம் கொண்ட திருப்பணியாளர்களை உருவாக்கிய பெருமைக்கு உரியது. ''இசையருவி'' என்கிற பெயருடன் என்றும் மனத்தில் நிற்கக்கூடியனவும் பக்தி பரவசம் ஊட்டக்கூடியனவும் இன்றும் திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படுவனவுமாகிய நெஞ்சைவிட்டு நீங்காத பாடல்கள் பலவற்றை வெளியிட்ட பெருமை புனித பவுல் இறையியல் கல்லூரிக்கு உண்டு. இப்பணிகளில் நானும் சிறிது பங்கேற்க வாய்ப்புக் கிடைத்தது எனக்குப் பெருமை.

நான் பயின்ற காலங்களில் இசை ஆர்வம் எனக்கு அதிகம் இருந்தபோதிலும், அதில் வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் கிடைத்தபோதிலும் அதில் வளரவும் பயன்படுத்துவதற்குமான சூழல் இல்லை. புனித பவுல் இறையியல் கல்லூரியின் குறிப்பிடத்தக்க பணிகளில் ஒன்றான நூல்கள் வெளியீட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டதால் இசை ஆற்றலில் வளர இயலவில்லை. இருப்பினும் அதன் தேவையை உணர்ந்தேன். ஆர்வம் தணியாமல் பார்த்துக்கொண்டேன். எனவே, கல்லூரியின் கலைப் படைப்புகளில், கலை நிகழ்வுகளில் என்னுடைய பங்கு எப்போதும் இருந்ததுண்டு.

இந்த ஆர்வத்தினாலும் அனுபவத்தினாலும்தான், நான் 1985ஆம் ஆண்டு அருட்பொழிவு பெற்ற பிறகு, இளம் அருள்பணியாளராகத் திண்டுக்கல் மறைவட்டத்தில் பணியாற்றியபோது தவக்காலத்தில் சிலுவைப்பாதை ஒலி-ஒளிக் காட்சி உருவாக்கி, கலைஞர்களை ஒன்றிணைத்துப் பல பங்குகளில் அரங்கேற்ற முடிந்தது.

''கலை வளர மனிதம் மலர'' எனும் விருதுவாக்கோடு செயல்படும் கலைக்காவிரி கவின்கலைக் கல்லூரியின் செயலராகப் பணியாற்றியபோது சமூக மாற்றத்திற்குக் கவின்கலை – இயல், இசை, நாடகம் – ஓர் அடிப்படைக் கருவியாகப் பயன்படும் என்பதை உணர்ந்தேன்; அரை மணி நேரம் நாம் ஆற்றக்கூடிய மறையுரையின் மையக்கருத்தை ஐந்து நிமிடப் பாடலில் நடனத்தின் வழியாகக் கொடுக்கும்போது மக்களின் உள்ளத்தைத் தொடுகிறது என்பதை உணர்ந்தேன். ஒரு நடன நிகழ்ச்சிக்குப்பின் ஒரு பார்வையாளர் ''அணுகுமுறை ஆண்டவனை அறிமுகம் செய்யும்'' என்று தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். மனிதருடைய வாழ்வை மாற்றி அமைக்கக்கூடிய அனுபவத்தைக் கொடுக்கக்கூடியது கலை.

என்னுடைய திருப்பணிப் பயிற்சிக் காலங்களில் பல துறைகளில் ஈடுபட்டுப் பணியாற்றிய அனுபவங்கள், ''கலைவழியில் மனிதம் மலர'' இன்னும் அதிகமாகப் பணி செய்ய உதவின. கலைத் திறன்களையும் திறமைகளையும்

வளர்க்க வழிகாட்டுவது, தரமான புதிய நிகழ்வுகளை உருவாக்குவது, கலைஞர்களை ஒருங்கிணைப்பது, உற்சாகப்படுத்துவது, பயிற்சி அளிப்பது, புதிய தளங்களை உருவாக்கிக் கொடுப்பது போன்ற பல வழிகளில் கலைப் பணி செய்ய என்னைத் தூண்டியதும் துணையாயிருந்ததும் என்னுடைய திருப்பணிப் பயிற்சிக் காலத்தில் நான் பெற்ற பயிற்சியும் அனுபவமும் தாம்.

கலையின் தூய்மை இன்று மறைக்கப்பட்டு, மறுக்கப்பட்டு ஒரு நுகர்வுப் பொருளாகவே பார்க்கப்படுவது பரிதாபமான நிலை ஆகும். கலைஞர்கள் வருமானத்திற்காக மட்டும் தங்கள் திறன்களையும் திறமைகளையும் பயன்படுத்துவதும், இரசிகர்கள் அதை ஒரு பொழுதுபோக்கு நுகர்வு அம்சமாக மட்டும் கருதுவதும் வேதனைக்குரியது. பொது நன்மைக்காகவே பல ஆற்றல்கள், கொடைகள் கொடுக்கப்படுகின்றன என்கிற கடவுளின் திட்டம் வலியுறுத்தப்பட வேண்டும். சமூக மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் வழிவகுக்கக்கூடிய கலை வடிவங்களைப் போற்றிப் பாதுகாக்கத் திருஅவை அழைக்கிறது. அதில் அருள்பணியாளர்களின் பங்கினையும், அதற்கான திருப்பணியாளர் பயிற்சியின் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறுகிறது. ''பாட்டுப்பூசை வைக்கக்கூடிய அளவிற்கு இசைப் பயிற்சி கொடுத்தால் போதும்'' என்கிற பயிற்சியாளர்களின் குறுகிய எண்ணம் பரிதாபத்துக்குரியது. கலை மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி என்கிற நிலையில் அதில் வளர, அதைப் பணிக்குப் பயன்படுத்த வேண்டும் என்பது கடவுளின் திட்டம், விருப்பம். அதுதான் திருஅவையின் கடமையாகவும் இருக்கவேண்டும்.

நூற்றாண்டு விழாக் காணும் இந்நாள்களில் நான் பயிற்சிபெற்ற புனித பவுல் இறையியல் கல்லூரியையும் என்னுடைய மாண்புக்குரிய பேராசிரியர்களையும் பயிற்சியாளர்களையும் பெருமையுடனும் நன்றியுடனும் நினைக்கிறேன். இன்றைய சமூகத்தின் தேவைக்கேற்பவும் திருஅவையின் தேவைகளுக்கேற்பவும் பல்நோக்குத் திறன்களையும் திறமைகளையும் கொண்ட அருள்பணியாளர்களை உருவாக்க என் இனிய வாழ்த்துகள்.

பொறுப்புள்ள குடிமக்களாய்...

கிறித்தவர்கள் நாம் இம்மண்ணின் மைந்தர்கள். இந்நாட்டின் உரிமைக் குடிமக்கள். சுதந்திரம், நீதி, சமத்துவம், மனித மாண்பு போன்ற இயேசுவின் மதிப்பீடுகளில் நம்பிக்கை கொண்டவர்கள். அம்மதிப்பீடுகளை இந்திய அரசியல் சாசனமும் உறுதி செய்கிறது...

அனைத்து மதங்களையும் நாம் மதிக்கிறோம். ஒவ்வொரு மனிதரும் நம் சகோதர, சகோதரிகள் ஆவர். எனவே, மதவாத எதிர்ப்பு என்பது எந்த ஒரு மதத்தையும், எதிர்ப்பதல்ல. மாறாக, மதத்தின் பெயரால் செய்யப்படும் அரசியலை எதிர்ப்பதே ஆகும். இந்த அணுகுமுறையை நாம் தெளிவாகப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

கிறித்தவர்கள் என்ற அடிப்படையில் எவ்வகையிலும் சிறுபான்மை மதவாதத்தை ஆதரிக்க முடியாது. உலகெங்கும் சமய, சமூக நல்லிணகக்கத்தை வளர்ப்பதில் நம் வணக்கத்திற்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் முன்னோடிச் சிற்பியாய்த் திகழ்கிறார். எனவே, மதம் தாண்டிய மாந்தநேய அரசியலும், சமயச்சார்பற்ற சனநாயக அணுகுமுறையும் மட்டுமே மதவாதத்தை வீழ்த்தும் ஒரே வழி என்பதை நாம் உணர வேண்டும்.

பொறுப்புள்ள குடிமக்களாய், சனநாயகத் திசையில் நம் பயணத்தைத் தொடர்வோம்!

உரிய காலத்தில் உரியவற்றைச் செய்து, சமூகக் கடமையாற்றுவோம்!

ஒத்திசைவுக் கொண்ட தோழமை சக்திகளுடன் கரம் கோர்ப்போம்!

– கிறித்தவர்களின் நிலைப்பாடு குறித்துத் தமிழக ஆயர் பேரவை அறிக்கை (2019)

புனித பவுல் கலைப் பட்டறை



அருள்பணி. ஜாய்
கோட்டாறு மறைமாவட்டம்

என்னையும் சேர்த்துப் பலரையும் பட்டை தீட்டிய கலைப் பட்டறைதான் திருச்சி புனித பவுல் இறையியல் கல்லூரி.

ஒரு ஞாயிறன்று (1997) நானும் என் நண்பர் பாரிவளனும் திருச்சியிலுள்ள சிறார் கூர்நோக்கு இல்லத்தைச் (சிறார் சிறைச் சாலை) சந்தித்து விட்டு மலைக்கோட்டை காந்தி மார்க்கெட் சாலையில் வந்துகொண்டிருந்தோம். தலையில் மாலை அணிவிக்கப்பட்ட குடங்களில் காவிரி நீருடன் நீண்ட வரிசையில் பால் குடம் எடுக்கும் பக்தர்களின் பக்தி பரவசமான ஊர்வலம் சென்று கொண்டிருந்தது அதன் முன்னணியில் பம்பை மேளத்துக்கு நான் என் வாழ்வில் அதுவரை கண்டிராத புதுவகையான ஆட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் மிதிவண்டியை ஓரங்கட்டிவிட்டு ஆட்டத்துக்குப் பின்னால் பயணித்தோம். தாராநல்லூர் அம்மன் கோயில் வளாகத்துக்குச் சென்றடைந்தோம். ஆசான் மகாமணி, ஆசான் பாண்டி ஆகிய இருவரிடமும் அறிமுகமானோம். ஆட்டத்தின் பெயர் சக்கைக் குச்சியாட்டம். பாலக்கரை வாழைக்காய் மண்டியில் பாரம் ஏற்றி இறக்கும் தொழிலாளர்களின் கலை அது. சக்கையாட்டம், சாட்டைக் குச்சியாட்டம், நெடுங்குச்சியாட்டம் என மூன்று ஆட்ட வகைகளின் தொகுப்புதான் அந்தச் சக்கைக் குச்சியாட்டமாகும்.

கல்லூரி திரும்பினோம். பேராசிரியர்களிடத்தில் பகிர்ந்தபோது கற்றுக்கொள்ள உற்சாகமளித்தனர். ஆசான்களைக் கல்லூரிக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரத்தில் அழைத்து வந்து ஒரு வருடம் தொடர்ந்து கற்றோம். கல்லூரிக் குடும்ப விழாவில் அரங்கேற்றினோம்.

இன்று உலகின் எட்டுத் திக்கும் சக்கைக் குச்சியாட்டம் பல கலைக்குழுக்களால் நிகழ்த்தப்படுகிறது. பவுல் கல்லூரியால் வெளிக்கொணரப்பட்ட திருச்சி தாராநல்லூர் ஒடுக்கப்பட்ட மக்களின் கலையான சக்கைக் குச்சியாட்டம் பற்றி இன்று தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் அறியும். அது போன்றே குமரி மாவட்டத்தில் முளவிளை ஊரின் ஆசான் ஜார்ஜ் அவர்களிடம் கற்ற வீரமிகு களியலாட்டம், புதுக்கோட்டை மாவட்டம் கீழப்பஞ்சப்பூர் ஊரின் ஆசான் செல்வன் அவர்களிடம் கற்ற எழுச்சிமிகு சிலா ஆட்டம் என ஒவ்வோர் ஆண்டும் மக்கள் கலைஞர்களிடம் வெவ்வேறு ஆட்டங்களைக் கற்று வெகுசன மக்கள் தளத்துக்கு எடுத்துச் சென்ற மகத்தான பணியின் காலம் எங்கள் காலம்.

கல்லூரியின் அனைத்து அரங்க நிகழ்விலும் மக்கள் கலைகள் நிகழ்த்த வாய்ப்புகள் வழங்கப்பட்டன. தமிழ் மன்ற விழாக்கள், பொங்கல் விழா, குடும்ப விழா அனைத்திலும் மக்கள் கலைகளுக்கும் வீதி நாடகங்களுக்கும் எப்போதும் இடமுண்டு. இன்று மக்கள் கலைகளை மண்ணின் அரசியலோடு பயில இறையியல் முதலாமாண்டில் சமூகப் பகுப்பாய்வு முகாமில் மக்கள் கலைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

நாங்கள் இறையியல் முதலாமாண்டு பயின்றபோது சமூகப் பகுப்பாய்வு முகாம் சிவகங்கை மறைமாவட்டம் கீழ உச்சாணியில் அமைந்திருந்தது. அங்கு, பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் செம்மணி கலைக்குழுவின் பயிற்றுநர் ஆசான் சாந்தப்பன் நேர்த்தியாக மக்கள் கலைகளைக் கற்றுத்தந்தார்.

கற்ற கலைகளை மெருகேற்றப் பயிற்சி அவசியம். கல்லூரியில் தினமும் மதிய உணவுக்குப்பின் முறையாகத் தொடர் பயிற்சி நடக்கும். ‘‘தப்படி மட்டும் தப்பாமல் நடக்குது’’ என்ற விமர்சனத்துக்கிடையில் ஆர்வமுள்ள அனைத்து அருள்சகோதரர்களும் இணைந்து கலைப்பயிற்சி மேற்கொள்வோம். இதற்கான பாரம்பரியத்தை விதைத்தவர்கள் முந்தைய ஆண்டுகளில் கல்லூரியில் பயின்ற சகோதரர்கள். கலைக்குழு என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இந்தக் கலைக்குழு உறுப்பினர்களை இரண்டு மூன்று குழுக்களாக இணைத்து அனைத்து வார இறுதிப் பணித்தளங்களின் ஆண்டுவிழாக்களிலும் விழிப்புணர்வுக் கலைநிகழ்வு நடத்திச் சிறப்பித்தோம்.

மக்கள் கலைகளைப் பயிலவும் பயிற்றுவிக்கவும் நிகழ்த்தவும் மட்டுமன்றி இம் மக்கள் கலைகளை இறையியலாக்கம் செய்யவும் பவுல் கல்லூரி தளம் அமைத்தது. பண்பாடு குறித்த கருத்தரங்குகள், விருப்பப் பாடங்கள் பல ஏற்பாடு செய்யப்பட்டன. இவை மக்களிடையே நிலவும் பன்மைப் பண்பாட்டை, நம்பிக்கைகளை, பழக்கவழக்கங்களை, வெகுசன சமயச் சடங்குகளை அறியவும் புரிந்துகொள்ளவும் பணித்தளங்களில் இன்று பல்சமயச் சூழமைவுகளில் பணிசெய்யவும் அடித்தளமாக அமைந்தது.

சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களின் கலையும் பண்பாடும்கூட ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட மக்கள் கலை வரலாற்றை அறிந்து மக்கள் கலைகளை நிகழ்த்துவது என்பது ஒரு பொழுதுபோக்குச் செயல்பாடல்ல, மாறாக, விடுதலைப் பண்பாடு. மக்கள் கலைகள் ஒடுக்குமுறைக்கு எதிராக விடுக்கப்படும் அறைகூவல் என உணர்ந்துகொண்டோம்.

மக்கள் கலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளக் கல்லூரி வாய்ப்புகளை வழங்கியது. பேராசிரியர் சூசைமாணிக்கம் அவர்களின் நெறியாளுகையில் 13 மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று நிலம் தொடர்பான பல்வேறு பரிமாணங்களை ஆய்வு செய்து கட்டுரைகளைத் தொகுத்து அளித்தது. அத்தொகுப்பு பின்னர் *தாய் மண்ணைத் தேடி* என்ற நூலாக வெளியிடப்பட்டது. நான்காம் ஆண்டு எனது ஆய்வேட்டிற்கு ''விவிலிய ஞான நூல்களும் தமிழக நாட்டார் கலைகளும்: ஓர் ஒப்பீட்டுப் பார்வை'' என்பதைத் தலைப்பாக கொண்டு ஆய்வுக்கட்டுரை ஒப்படைத்தேன்.

மக்கள் கலைகளில் அடுத்த தலைமுறை ஆர்வம் கொள்வதற்கு, எளிய மக்களிடையே உருவாகி வளர்ந்த மண்ணின் கலைகளை – தமிழ் நாட்டிலுள்ள, பிற மாநிலங்களிலுள்ள கலைகளைக் கற்று மேடையேற்றியுள்ளோம்.

மேற்கண்ட மக்கள் கலைசார் பணிகளுக்கு அடித்தளம் அமைத்த புனித பவுல் இறையியல் கல்லூரியை நன்றியுடன் எண்ணிப்பார்ப்பதோடு இப்பாரம்பரியத்தை மீண்டும் புதுப்பித்து இறையியல் பட்டறையில் கலைஞர்களையும் உருவாக்க வேண்டும் என்பதை எமது பரிந்துரையாகவும் முன்வைக்கின்றேன்.

எனது குருத்துவப் பணிவாழ்வில் இருபது ஆண்டுகளாக மக்கள் கலை சிறப்புப் பங்கு வகிக்கிறது. முரசு கலைக்குழுமம் என்ற கலைக்குழு உருவாக்கம், களரி மக்கள் பண்பாட்டு மைய இயக்குநராக ஐந்தாண்டுகள் என்று மக்கள் கலைகளில் தொடர்ந்து பயணிக்க, பல்வேறு தடைகளைத் தாண்டிப் பயணிக்க ஊக்கம் அளிப்பது பவுல் இறையியல் கல்லூரி கற்றுத்தந்த மக்கள் இறையியல்தான்.

புனித பவுல் கலைப் பட்டறையில் பயின்ற கலைகளும் பெற்றுக்கொண்ட கலையார்வமும் ஒவ்வொரு பணித்தளத்திலும் எதிரொலிப்பாயின. நான் தொடங்கி நடத்திய முரசுக் கலைக்குழுவாயினும், மறைமாவட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள களரி பண்பாட்டு மையமாயினும் மக்கள் கலைகளை எல்லாத் தளங்களிலும் கொண்டு செல்ல உதவியாய் இருந்தன. தமிழகத்திலுள்ள மக்கள் கலைஞர்களை ஒருங்கிணைத்துக் கலைகளை சென்னை வீதியெங்கும் மேடையேற்றிய சென்னை சங்கமம் நிகழ்ச்சி, தொடர்ந்து கோவையில் நடைபெற்ற செம்மொழித் தமிழ் மாநாடு, குமரிச் சங்கமம் ஆகிய அரசுசார் நிகழ்வுகளில் மக்கள் கலைகள் மூலமாகத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்களை வெளிக்கொணர்ந்தோம்.

மறைமாவட்டப் பங்குகளிலும் பள்ளிகளிலும் திரைப்படம்சார் நிகழ்ச்சிகளை ஒட்டுமொத்தமாகத் தடை செய்து மக்கள் கலைகளை மேம்படுத்துவதற்கும், கல்வி கற்க இயலாத நிலையிலுள்ள மாணவர்கள் மக்கள் கலைகளைக் கற்றுப் பயிற்சியாளராக வளர்வதற்கும் வழிகாட்டுதலும் பயிற்சியும் கொடுத்துள்ளோம்.

தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளில் நடைபெற்ற மீனவர் உரிமைசார் போராட்டங்கள், இணயம், கன்னியாகுமரி சரக்குப் பெட்டக எதிர்ப்புப் போராட்டங்கள், குடிநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஈழத்து இனப்படுகொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், பல்சமய உரையாடல் நிகழ்ச்சிகள், மாவட்டம் சார்ந்த பொது நிகழ்ச்சிகள், தலித் மக்கள் கலை இரவுகள், தமிழ் மக்கள் விழாக்கள் எனக் கலைப் பயணங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சமூக ஊடகப் பணிகளில் கலைக்காவிரி



அருள்பணி. ஞா. சாமிநாதன்
திருச்சி மறைமாவட்டம்

திருநிலைத் திருப்பணியாளர்களின் உருவாக்கத்தில் 100 ஆண்டுகளைத் தொட்டு வரலாறு படைத்துள்ள எம் பவுல் குருத்துவக் கல்லூரிக்கு வாழ்த்துகள். இந்தியத் திருஅவைக்கும் அனைத்துலகத் திருஅவைக்கும் பெருமையும் மாண்பும் சேர்த்திருக்கும் கலைக்கோயில், திருச்சி கலைக்காவிரி எனும் சமூகத் தொடர்பு மையத்தினை வழங்கிய பேரருள்திரு. எஸ்.எம். ஜார்ஜ் அடிகளாரை உருவாக்கியதே இந்தப் பவுல் குருத்துவக் கல்லூரிதான்.

நடந்தாய்வாழி கலைக்காவிரி

'நடந்தாய் வாழி கலைக்காவிரி' என்பதற்கேற்பத் திருச்சிக்கும் திருஅவை வரலாற்றுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக, கலை வளர்க்கும் மையமாய்ப் பரிணமித்து வருவதே கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி. 1977ஆம் ஆண்டு 'கலைக்காவலர்' அருள்பணி. எஸ்.எம். ஜார்ஜ் அவர்களால் தொடங்கப்பட்டு வானொலி நிகழ்ச்சி, ஒலிநாடாத் தயாரிப்பு, மேடை நாடகம், ஒலி-ஒளிப்பதிவுக் கூடம், கலைவிழாப் போட்டிகள் என்பன அதன் தொடக்க காலப் பணிகளாயின.

இயேசு காவியம் எனும் இயேசு பற்றிய கவிதைத் தொகுப்பினைக் கவிஞர் கண்ணதாசன் எழுதிடத் தூண்டுதல் கொடுத்து 1982ஆம் ஆண்டு புனித பவுல் இறையியல் கல்லூரியில் கலைக்காவிரி வெளியிட்டது.

இந்திய நாட்டின் பெருமைமிக்க நடன, இசைக் கலைகளை வளர்த்திடும் நோக்கில், கலை வளர்க்கும் பணியில் கால் பதித்தது கலைக்காவிரி. நடன, இசைப் பள்ளிகளைத் திருச்சி பாரதிதாசன் கல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு (1990) தொடங்கி வெற்றிநடை பயின்ற கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியாக (1996), அரசு நிதி உதவி பெறும் கல்லூரியாக (2000) வளர்ச்சி பெற்றது; தமிழக அரசின் சிறந்த கலை நிறுவன விருதினையும் பெற்றது. பரதநாட்டியத்திற்கென்று பட்டம் வழங்கும் தமிழகத்தின் முதல் நுண்கலைக் கல்லூரி என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு இயல், இசை, நாடக மன்றம் கலைக்காவிரி நிறுவனத்தைச் சிறந்த கலைநிறுவனமாகத் தேர்ந்தெடுத்துக் கலைமாமணிவிருது வழங்கியது (2000).

பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம் ஆகியவற்றுக்கு இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப் படிப்பு வழங்கும் தமிழகத்தின் தனித்துவமிக்க பெருமையைக் கொண்டது இக்கல்லூரி.

1981ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை செர்மனி, பிரான்சு, இத்தாலி, ஆஸ்திரியா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, ஹாலந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, மொரிசியசு, லா-ரீயூனியன் ஆகிய நாடுகளிலும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஏறத்தாழ 2200க்கும் மேற்பட்ட கலை நிகழ்வுகள் நடத்திய பெருமை கொண்டது கலைக்காவிரி.

திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் இரு முறை இதன் கலைநிகழ்வுகளில் கலந்து கொண்டு பாராட்டும் ஆசியும் வழங்கியுள்ளார். 2004ஆம் ஆண்டு முதல் தொலைதூரக் கல்வி மையமும் இங்குத் தொடங்கப்பட்டு, நடனத்திலும் இசையிலும் தேர்ச்சி பெற்றவருக்குப் பட்டயமும், இளநுண்கலை, முதுநுண்கலைப் பட்டங்களும் வழங்குகின்றது. இங்குப் பயின்ற மாணவ, மாணவியர் தமிழ்நாடு, இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் கலைப்பணி புரிந்துவருகின்றனர். கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் கலைப்பணியால் இந்திய நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் குறிப்பாகத் திருச்சிக்கும் உலக அரங்கில் மிகப் பெரிய சிறப்பும் பெருமையும் ஏற்பட்டுள்ளது. இந்திய மண்ணின் பெருமைக்குரிய செவ்வியல், நாட்டார் நடனங்களையும் இசை வடிவங்களையும் அனைவருக்கும் பொதுவானதாக்கி, கலையை நலிந்துவிடாமல் காத்து, மானுடம் பேணி, கலை வழியில் இறைப்பணியினை முன்னெடுக்கிறது கலைக்காவிரி.

வரலாற்று ஏடுகளின் வெளிச்சத்தில்... (நேற்று)

''சமூகத் தொடர்புக் கருவிகள் கடவுளின் கொடைகள்'' என்கிறார் திருத்தந்தை 12ஆம் பயஸ். காலத்தைக் கரைக்கும் நிகழ்வுகள் அல்ல, மாறாக அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமூகத் தொடர்புக் கருவிகள் தேவை என இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது. மனிதச் சமுதாயத்தின் எதிர்காலம் இத்துறையைச் சரியாகப் பயன்படுத்துவதில் அடங்கியுள்ளமையால் மனித நலனுக்காக இதனைக் கையாளுமாறு இச்சங்கம் அழைக்கிறது (*சமூகத் தொடர்புக் கருவிகள்*, 24).

தொடர்புக் கருவிகளைப் பொறுப்புடன் கையாளத் தகுந்த தயாரிப்பு திருப்பணியாளர்களுக்குத் தேவை என உணர்ந்து முனைந்து திருஅவை செயல்படத் தொடங்கியது. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மனிதப் பண்பாட்டிலும் அறிவிலும் அருள்வாழ்விலும் மாணவர்கள் வளர்ந்து முதிர்ச்சியடையத் திருப்பணிப் பயிற்சி ஏதுவாக இருக்கவேண்டும் என்று அது தனது அக்கறையை வெளிப்படுத்தியது. அடுத்த தலைமுறையினரின் தேடல்களை மனதில் கொண்டு திருப்பணியாளர்களைத் தயார் செய்தாலும் சமூகத் தொடர்புக் கருவிகளால் திருஅவையின் திருப்பணிகள் பாதிக்கப்படலாம் எனும் அச்ச உணர்வோடு அது அணுகியது என்பதும்கூட மறக்க முடியாத உண்மைதான். ஆனாலும் இலக்கியம், வெள்ளித்திரை, சின்னத்திரை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி இவை எல்லாம் உலகினர், பொதுநிலையினர் ஈடுபட வேண்டிய எல்லைப் பகுதி என்ற மனநிலையிலிருந்து மெல்ல மெல்லத் திருஅவை தன்னை விடுவித்துக்கொண்டு புதிய பாதை அமைத்துப் பணிதேடிப் பயணித்தது.

திருப்பணியாளர்கள் பணியும் வாழ்வும் என்ற ஏட்டில் எண் 17இல் காண்பது போல ''கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப உலகப் பொருட்களை அவர்கள் சரியாகப் பயன்படுத்துவதன் பொருட்டும் தங்களது பணிக்கு இடையூறாய் இருப்பனவற்றைத் தள்ளிவிடும் பொருட்டும் தங்கள் வாழ்விலே எதிர்கொள்ளும் அனைத்தையும் நம்பிக்கை ஒளியிலே அவர்கள் தேர்ந்து தெளிய வேண்டும்'' என மிக அழகாக புரிந்துகொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைய நடைமுறையின் வெளிச்சத்தில் (இன்று)

ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இன்றைய அருள்பணியாளர்களின் பங்கேற்பினைக் காண்போம். ஊடகப் பயன்பாடு என்பது இறை உறவிலிருந்து நம்மைப் பிரித்துவிடுமோ என்ற அச்ச உணர்வும் ஐயப்பாடும் காணாமல் போய்விட்டன. மாறாக ஊடகங்களைக் கையாளுவதில் தேர்ச்சியும் புதியனவற்றைப் புதுமைக்குப் பயன்படுத்துவதற்குத் திறன்களையும் வாய்ப்புகளையும் தேடும் திருஅவையாக மலர்ந்துகொண்டிருக்கிறது. தனக்குத் தெரிந்தவரை கற்றுக்கொண்டவற்றைக் குழு வழிபாடுகளிலும், இயக்கக் கூட்டங்களிலும், சிறிய கொண்டாட்டங்களிலும் பயன்படுத்தி மக்களின் பாராட்டுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்க்காலாக மாற்றம் நோக்கிப் பயணிக்கின்றனர்.

இறைவழிபாட்டு இல்லங்களில் ஒலியமைப்பு, ஒளியமைப்பு, திரைவழி படிப்பது, கண்காணிப்புக் கருவி அமைப்பது, திருவிவிலியம், திருப்பாடல் புத்தகங்கள் போன்றவற்றின் குறிப்புகளைக் காணொளியில் கண்டு பின்பற்றுவது, பதிவு செய்து பத்திரப்படுத்துவது எனப் பல நிலைகளில் ஊடகங்களைப் பயன்படுத்தி இனிமையான வண்ணமயமான ஈடுபாட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர் அமைப்பாளர்கள். எதையும் எப்படியும் நடத்தலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாலும் திருப்பணியாளர்களின் முன்தயாரிப்பு இவற்றில் அடங்கியிருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

இன்றைய வெளிச்சத்தில் அடுத்த நிலையாக நாம் காண்பது பயிற்சியிலும் சரி பணியிலும் சரி சமூக ஊடகங்கள் நீக்கமற நிறைந்து இருக்கின்றன என்பதுதான். சமூக ஊடகங்கள் பற்றிய படிப்புகள், பயிற்சிகள், களங்கள், தளங்கள் பற்றிய தெளிவும் அறிவும் என்பது குருத்துவப் பணியில் ஒரு சிறப்புத் தகுதி நிலையாகப் பார்க்கப்படுகிறது.

நாளைய நம்பிக்கையின் வெளிச்சத்தில்... (நாளை)

- ஊடகங்கள் – கடவுளின் கொடைகள் என வர்ணிக்கப்பட்டாலும் அருள்நெறியும் அறநெறியும் வாழ்வை வளர்த்தெடுக்கத் தூண்டுதலாக அமையும்படி பொறுப்புணர்வுடன் பயன்படுத்தப் பயிற்சியளித்தல் வேண்டும்.

- சமூகப் பகுப்பாய்வை உள்வாங்கிக்கொண்டு ஊடகங்களைப் பயன்படுத்துவர்களாக மட்டுமல்லாது அவற்றை இயக்குபவர்களாக உருமாற வேண்டிய புரிதல் வேண்டும்.
- மனிதர்கள், பண்பாடு, கலை, மரபு, நம்பிக்கைகள், இவற்றால் வரும் வேறுபாடுகளைத் தகர்த்தெறிந்து ஒன்றிணைப்பதுதான் உண்மையான அருள்வாழ்வு என்பதை மலரச் செய்தல் இன்றைய தேவையாகிறது.
- மேலைநாட்டுக் கலைச் சிந்தனைகளை இறக்குமதி செய்யாது நம் நாட்டு மண்ணில் வேரூன்றியவர்களாக உருவாக்கம் பெறுவது.
- கவர்ச்சிக்காகவும் புதுமைக்காகவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்ற மனநிலைகள் மாறி மக்கள் மைய ஊடகங்களாக உருமாற்ற வலிமையையும் வளத்தையும் தெளிந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- இலக்கியம், நூல் வடிவங்கள், மின் நூல்கள், கிறித்தவப் பத்திரிகைகள் இவற்றை வாசித்து நேசிக்கப் பழகிக்கொள்ளல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.
- 'பொருள்களைப் பயன்படுத்தவும் மனிதர்களை நேசிக்கவும்' கற்றுக்கொடுக்கும் ஆன்மிகத் தூதுவர்களாகப் பயிற்சி பெறுவது.
- தொலைக்காட்சி அலைவரிசைகள் வழிபாட்டு நிகழ்வுகளுக்காக மட்டும் என்ற நிலையினை விடுத்து வாழ்வியல் பிரச்சினைகளையும் இணைத்துச் சிந்திக்க வேண்டும்.
- திருஅவையின் பிரச்சினைகளுக்கு மட்டுமே வெளிச்சம் தரும் கருவிகளாக ஊடகங்களைப் பார்க்காது, திருஅவையின் இயங்குதளமான சமூகத்தின் மனிதர், மனம், மண்சார்ந்த பிரச்சினைகளிலும் வெளிச்சத்தைத் திருப்பிடக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

நிறைவாக...

இன்றைய சமூகத்திற்குத் திருஅவையும், அருள்பணியாளர்களை உருவாக்கும் திருநிலைப் பயிற்சி இல்லங்களும் மொத்தத்தில் விடுதலையை வழங்கும் ஆற்றல் கொண்டவையாகவும் புதிய மறுமலர்ச்சியைத் தரக்கூடிய ஆற்றல் கொண்ட இயக்கங்களாகவும் வளர்ந்திடல் வேண்டும். அதற்கு முதலில் அருள்பணிப் பயிற்சி பெறுவோர் தங்களுக்குள் விடுதலையையும் உருமாற்றத்தையும் உணர்ந்து கொள்ளுதல் என்பது அடிப்படையாகிறது. கடவுளுக்கும் மனிதர்களுக்கும் உகந்தவராகத் திருப்பணியாற்ற இவ் ஊடகங்கள் உறவை வளர்க்கும் ஊடகங்களாக மாற்றம் காணவேண்டும் என்ற அறைகூவல்களை, இயேசுவின் பார்வைகளை நம்பிக்கையுடன் ஏற்றுப் பணியையும் வாழ்வையும் தொடர்வோம்.

''பொழுது விடியட்டும் என உறங்காதே
உனது விழிப்பால் பொழுது புலரட்டும்''!

மக்களை வலிமைப்படுத்தாத வரையில்,
அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தாத வரையில்,
இந்த வளங்கள் அவர்களுடையவை,
அவர்கள் அதைப் பாதுகாக்க வேண்டும் என்கிற புரிதலை ஏற்படுத்தாத வரையில்
சூழலைக் காக்க முடியாது.

– வங்காரி மாத்தாய்

சதங்கையின் கலைப் பயணம்



பணி. அன்பு செல்வம்
மதுரை உயர் மறைமாவட்டம்

"The seminary programs will help you as a young man
to lay a foundation for happiness and success in life" - Richard G. Scot.

குருத்துவக் கல்லூரி ஒவ்வோர் அருள்பணி மாணவருடைய வாழ்க்கையின் உருவாக்கத்திலும் சிறப்புப் பங்கு வகிக்கிறது. என்னுடைய பணி வாழ்விற்கும் என்னுடைய தாய்க் குருத்துவக் கல்லூரி பெரிய அளவில் வித்திட்டது என்றால் மிகையாகாது. ஆசிரியர் ரிச்சர்ட் ஸ்காட் மேலே குறிப்பிடுவதுபோல் மிகுந்த மகிழ்ச்சியையும் அனுபவத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது என் தாய்க் குருத்துவக் கல்லூரியான புனித பவுல் இறையியல் கல்லூரி.

தட்டிக் கொடுத்து அரவணைத்துச் சென்று பல்வேறு வகையான அனுபவங்களைக் கற்றுக்கொடுத்தது என் புனித பவுல் கல்லூரி. சிறிய துரும்பாக இருந்த என்னை உருவாக்கித் தயார்படுத்தி இந்த இறைச் சமூகத்திற்கு அனுப்பிவைத்தது. குறிப்பாகக் குருத்துவக் கல்லூரியில் கற்றுக்கொண்ட கலை அனுபவங்கள்தான் ஊடகங்களின்மீது கொண்ட ஆர்வத்தை ஊக்கப்படுத்தின. இன்று மதுரை உயர்மறைமாவட்டத்தில் உள்ள சதங்கை கலைத்தொடர்பகத்தி இணை இயக்குநராக என்னை மாற்றி இங்கே வர வைத்ததற்கு நம் இறையியல் கல்லூரி முழுமுதல் காரணி ஆகும். ஏனென்றால் நான் அங்கே பெற்ற அனுபவங்களும் பயிற்சிகளுமே இதற்கு அடிப்படை எனலாம்.

எடுத்துக்காட்டாக, 2011ஆம் ஆண்டு புனித பவுல் கல்லூரியில் சிறிய அனுபவங்களோடு நுழைந்த எனக்குக் கலைமொழி இறைவழி என்ற உணர்வை ஏற்படுத்தி, கிராமப்புற மக்களுக்குச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வைத் தூண்டியது. அதனுடைய வெளிப்பாடாக, அப்போது கலைக்குழுவிற்குப் பொறுப்பாளராக இருந்த அருள்பணி. மை. வில்லியம் அவர்கள் சிறிய குழுவினை ஏற்படுத்தி ஊக்கப்படுத்தினார். பின்னர் அவர் தம்முடைய மேற்படிப்பிற்காக உரோமை சென்றபோது அவரைத் தொடர்ந்து அருள்பணி. திருத்துவம் அவர்கள் மிகுந்த ஆர்வம் உடையவராகத் தூய பவுல் கலைக்குழுவை இன்னும் அதிகமாக ஊக்கப்படுத்தி எங்களோடு இருந்து அக்குழுவைச் சிறப்பாக வழிநடத்தினார். அக்குழுவை வழிநடத்திச் செல்லும் பொறுப்பினையும் எனக்கு வழங்கினார். நம் அருள்பணி மாணவர்கள் வார இறுதிக் களப்பணிக்குச் செல்லும் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று, கிறிஸ்துவின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு விழிப்புணர்வு நடனங்கள், பாடல்கள், நாடகங்கள் வழியாக எடுத்துரைத்தோம். அத்தோடு கலைக்குழுவில் இருந்த அனைவரும் அனைத்து நடனங்களையும் கற்றுக் கொள்ளவேண்டும் என்று எங்களுக்குப் பல விதமான பயிற்சிகளும் கல்லூரியில் வழங்கப்பட்டன. இத்தகைய சிறப்புப் பயிற்சியின் விளைவாக நாங்கள் கிராமங்களுக்குச் சென்று சிறுவர்களுக்குக் கலைப் பயிற்சி கொடுக்கக்கூடிய அளவிற்கு எங்களைத் தகுதியுள்ளவர்களாக மாற்றியது எனது தாய் குருத்துவ கல்லூரி.

இங்கு நான் கற்றுக்கொண்ட பாடம்தான் என் வாழ்வில் கலைத்துறையிலும் சமூக ஊடகப் பணியிலும் சிறந்து விளங்கச் செய்தது. மதுரையில் உள்ள சதங்கை கலைமையத்தின் நோக்கமே சமூகத்திற்குக் கலைகளின் வழியாக இறைப்பணியினைச் செய்வதுதான். இங்கு நாட்டுப்புறக் கலைகள், இசைக் கருவிகளான கீபோர்ட், கிட்டார், தபேலா, டிரம்ஸ், நடனப்பயிற்சி என்று பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் கலைமையத்திற்கும் நம்முடைய புனித பவுல் கல்லூரிக்கும் மிகப் பெரிய தொடர்பு எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும். ஏனெனில் இந்தக் கலைக்கல்லூரி 1981ஆம் ஆண்டு முதன்முதலாக அருள்பணி. வி.மா. அமலன் அவர்களால் தொடங்கப்பட்டது. இதில் சிறப்பு என்னவென்றால், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பணியை ஆரம்பித்த இவர் நம்முடைய கல்லூரியிலே பயின்றவர் என்பதாகும். இதில் நாம் மிகுந்த பெருமிதம் கொள்கிறோம். தம் விடாமுயற்சியாலும் ஆர்வத்தாலும் பலவிதமான கலைப் பயிற்சிகளையும், அவற்றை அடிப்படையாக வைத்து அவர் மிகப் பெரிய கலைக்குழுவையும்

ஆரம்பித்தார். மதுரை உயர்மறைமாவட்டத்தின் மிகச் சிறப்பான ஒரு பணிக்குழுவாக இந்தச் சதங்கை கலைமையத்தை உருவெடுக்க வைத்தார். அதன் வளர்ச்சிக்கு அடிக்கல்லாக இருந்த, புகழ்பெற்ற கலை நிகழ்வு **"சிவப்பு மூக்கர்கள்"**. இந்தக் குழு அனைத்து கிராமங்களுக்கும் சென்று, அன்றையச் சூழலுக்கு ஏற்பச் சமூக விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, எழுச்சியைக் கொண்டுவந்தது என்றால் மிகையாகாது. அத்தோடு சதங்கைக் கலைமையம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தோடு தன்னை இணைத்துக்கொண்டதால் இங்குப் பயில்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவரைத் தொடர்ந்து இங்குப் பணியாற்றிய அருள்பணியாளர்கள் அருள், மார்ட்டின், மரிய மைக்கில் என்று அனைத்து இயக்குநர்களும் நம்முடைய தாய்க் குருத்துவ கல்லூரியில் பயின்றவர்கள் என்று சொல்லும்போது, எனக்கு எப்போதும் ஒரு விதமான பெருமிதம் உண்டு.

இறுதியாக, என்னுடைய சதங்கை கலைமையத்தினுடைய பணி வாழ்வையும், புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் நாட்களையும் அனுபவங்களையும் எப்போதும் பிரித்துப்பார்க்க முடியாது. இவை இரண்டும் என் உணர்வில் ஒன்றாகக் கலந்துள்ளன. குருத்துவக் கல்லூரியில் கற்றுக் கொண்டவற்றை இப்போது என் பணி வாழ்வில் செயலாக்கப்படுத்திக்கொண்டு இருக்கிறேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று சொல்வதுபோல, என் வாழ்வின் எல்லாப் புகழும் நம் புனித பவுல் குருத்துவ கல்லூரிக்கே... நன்றி!

மறை அருவி

புனித பவுல் கல்லூரியின் இறையியல் இதழ்

45 ஆண்டுகள் கடந்து பொன்விழா காணவிருக்கும்
இறையியல் ஆய்விதழ் மறை அருவி

மறை கோட்பாட்டுக்குள் முடங்கிக் கிடக்கும்
மரபு இறையியலைக் கடந்து
மனித சமூகத்தின் மாற்றத்திற்கு வித்திடும்
ஈடுபாட்டு இறையியலைத் தமிழ் மண்ணில்
தழைக்கச் செய்கிறது மறை அருவி

இம்மண்ணின் மணத்தையும் மக்களின் தேடல்களையும்
சமூக நிகழ்வுகளையும்
இறைமொழி ஒளியில்
அலசிப்பார்க்கிறது மறை அருவி

மனிதம் மறுக்கப்பட்டு
சமூக விளிம்பில் நிற்கும்
ஒடுக்கப்பட்டோரின் குரலை
இறைவனின் குரலாக
ஓங்கி ஒலிக்கிறது மறைஅருவி

இறை மொழியை எடுத்துரைக்கும் பணியை
நேர்கொண்ட பார்வையோடு
லட்சிய வேட்கையோடு
தொடரும் மறை அருவிக்குத்
தாருங்கள் உங்கள் ஆதரவை!
விரைந்து அனுப்புங்கள் ஒரு உறுப்பினர் கட்டணத்தை!!
அறிமுகப்படுத்துங்கள் உங்கள் நண்பர்களுக்கும்

தொடர்பு கொள்க: ஆசிரியர், மறை அருவி, புனித பவுல் இறையியல் கல்லூரி, அ.பெ.எண். 36 திருச்சி-1.
அலைபேசி: 9443952490

ஆண்டுக் கட்டணம்: ரூ. 150

அருள்சகோதரரின் நினைவலைகளிலிருந்து...



சகோ. செ. இருதயசாமி சே.ச.
பெஸ்கி இல்லம், திண்டுக்கல்

1971இல் திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் பணிசெய்ய மதுரை மாநிலத் தலைவர் அருள்பணி. கார்டன் அவர்களால் அனுப்பப்பட்டேன். அப்போது கல்லூரியின் தலைவராக அருள்பணி. டி. வி. ஜோசப் இருந்தார். அருள்பணி மாணவர்களின் உணவகம், கால்நடை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பினை ஏற்றேன். என்னோடு சகோ. பிச்சைமுத்து கருமண்டபம் விவசாயத்தைக் கவனித்தார்; சகோ. சூசை மாணிக்கம் இல்ல அமைச்சராகப் பணியாற்றினார். சகோ. பிச்சைமுத்து 1972இல் ஓய்வு பெற்றபின் கருமண்டப விவசாயப் பணியையும் கவனித்துக் கொண்டேன். 1974இல் சகோ. திருத்துவராஜ் கல்லூரியில் பணி செய்ய வந்தபோது உணவகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவருக்குப்பின் சகோ. மைக்கேல் அந்தோணி உணவகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரும் வயோதிக காலத்தில் தான் இங்குப் பணிக்கு வந்தார். இவரும் ஒரு வருடம் தான் இருந்தார். வயோதிகத்தினால் இங்கு இறைவனடி சேர்ந்தார். இவரது உடல் திருச்சி கத்தீட்ரல் கல்லறையில்தான் அடக்கம் செய்யப்பட்டது. இதன்பின் நான் உணவகம், கால்நடை பராமரிப்பு, விவசாயம் (கருமண்டபம்) என முப்பணிகளையும் கவனித்து வந்தேன்.

1972ஆம் வருடம் பணி. மைக்கேல் ராஜ் சே.ச. நமது அருள்பணி மாணவர்களுக்கு, தொலைத்தொடர்பு கருவிகள் பற்றி வகுப்பு எடுத்தார்கள். 21.08.1972 அன்று இரவு ஜெர்மனிக்குப் போக இரவு இரயில் நிலையம் சென்றபோது நடைபாதை படிக்கட்டில் இறங்கும்போது நெஞ்சுவலி ஏற்பட்டு இறந்து போனார். இதனைக் கவனித்த ஓர் அருட்சகோதரி அவரை குழந்தை இயேசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்; இல்லத் தலைவருக்கு உடனே தகவல் கொடுத்தார்.

1973இல் திருச்சியில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கோரை ஆறு கரைகள் உடைந்து கருமண்டபமும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டது. அப்போது கருமண்டபத்தில் உள்ள குருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான வயல் 23 ஏக்கரிலும் விவசாயம் செய்து அறுவடைக்கு நெல் தயாராக இருந்தது. இரண்டு நாளில் அறுவடை செய்வதாக இருந்தது. 05.03.1973இல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நமது வயல் நெற்கதிர்கள் எல்லாம் நீரில் மூழ்கிவிட்டன. இரண்டு நாள்கள் கழித்து நீர் சிறிது வடிந்ததும் கருமண்டபம் மக்களின் உதவியுடன் நெல்லை இரவோடு இரவாக அறுவடை செய்து கதிர்களை மட்டும் அறுத்து கயிற்றுக் கட்டிலில் வைத்துத் தண்ணீரிலேயே தள்ளிக்கொண்டு வந்து களம் சேர்த்தோம். அறுத்த நெல் ஈரமாக இருந்தால் முளைத்து விடும் என்பதால் உப்பு மூட்டைகளை வாங்கிவந்து நெல்லில் கலந்து உடனே குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி அங்கு உள்ள எல்லா வராண்டாக்களிலும் காயவைத்து இரண்டு நாளில் நெல் அரைக்கும் ஆலைக்காரரிடம் பேசி உடனே அவித்து அரைக்க ஏற்பாடு செய்தேன். அதன்படி எல்லா நெல்லையும் அரைத்து அரிசியாக்கி களஞ்சியத்தில் சேர்த்தேன். அந்த அரிசியை உடனே சமைத்து பார்த்ததில் மிகவும் தூய்மையாகவும் மல்லிகைபோல் வெள்ளையாகவும் இருந்தது; சாப்பிடவும் ருசியாக இருந்தது. ஆனால் இறையருளாலும் சமயோசித செயலாலும் சிறிய இழப்பைத் தவிர இந்த ஆண்டுக்குரிய அரிசியைத் தயார் செய்து வைத்துக் கொண்டோம். அனைவரும் மிகவும் பாராட்டினார்கள்.

1974இல் ஓராண்டு ஆன்மிகப் பயிற்சிக்குப் பின் மீண்டும் குருத்துவக் கல்லூரிக்கு வந்தபோது எனக்கு இல்ல அமைச்சர் பொறுப்பைக் கொடுத்தனர். விவசாயம், பால்பண்ணைப் பொறுப்பினைச் சகோ. சைமன் ஏற்றுக்கொண்டார். 1975 ஆகஸ்ட் 15ம் தேதி நான் இயேசு அவையில் எனது இறுதி அர்ப்பணத்தை அளித்தேன்; அனைவரும் இவ்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். தொடர்ந்து நான் இல்ல அமைச்சராக 1977ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தேன். நான் பணியாற்றிய குருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழாக் காண்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உருவாக்கிய உங்களுக்கு

(இறுதி ஆண்டு மாணவன் ஒருவனது எண்ண அலைகள்)



தே. அல்போன்சு
(1970, *Home Review*)

அன்புச் சகோதரர்களே!

புனிதமான ஒரு பூங்கா; ஆண்டாண்டுதோறும் அதில் புதுப்புது மலர்கள் புன்னகைக்கின்றன; கடவுளின் பீடத்தில் அவை காணிக்கை ஆகின்றன. ஆம், கடந்த ஏழு ஆண்டுகளாக அவன் வாழ்ந்தது இந்தக் குருத்துவக் கல்லூரியில்; இனிதாய் அவனை வாழவைத்ததது கூடப் பிறவாதவர்களின் இந்தக் குடும்பம். இத்தோட்டத்திலே கொத்துக்கொத்தாக எத்தனையோ குருத்துவ மலர்கள் குவிவதுண்டு. இந்த ஆண்டும் மலர்கள் பல அங்கு இதழ் விரித்திருக்கின்றன. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு...! நாற்றாக உங்கள் நடுவிலே அவன் நடப்பட்டான்; தடாகமாகிய உங்கள் அன்பிலே அவன் தாமரைபோல வளர்ந்தான். உங்கள் அன்பின் ஆழம் எவ்வளவோ அவ்வளவுக்கு அவனும் உயர்ந்தான். இன்று அவன் அருள்பணியாளராக மலர்ந்துவிட்டான். இனி அன்பர் பணி செய்ய அவன் செல்லவேண்டும்.

உங்களது அன்பின் அனலிலே அவன் மகிழ்வு இன்பம் கண்ட காலம் இன்றோடு முடிவுறப்போகிறது. இதயத்தைப் பிளக்கும் இந்தப் பிரிவை அவன் விரும்பவில்லை. ஆனால் அவனை உங்களுக்கு உறவாக்கிய தெய்வம் அழைக்கிறது; அவன் போகவேண்டும். இந்நிலையில் அவனது இமைகளில் நீர்த்துளிகள் ததும்புகின்றன; இதயத்தில் உணர்வுகள் தத்தளிக்கின்றன; கடந்தகால நினைவுகள் உள்ளத்திலே கரைமோதுகின்றன. அவற்றில் சில சொல்லாகச் சிந்திச் சிதறுகின்றன.

இளமை வாழ்வின் வளமையான பகுதி அது. வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெறவேண்டிய அப்பொன்னான பருவத்தை உங்கள் நடுவிலே அவன் செலவிட்டிருக்கிறான்; அதுபற்றி அவன் பெரிதும் மகிழ்கிறான். மழைத்துளி சிப்பியில் வீழ்ந்தால் முத்தாக விளைகிறது; புழுதியில் வீழ்ந்தால் சகதி ஆகிறது. உயர்ந்த உங்கள் சமூகத்திலே உறுப்பினன் ஆகிய காரணத்தால் அவனும் உயர்வு பெற்றிருக்கிறான். சுற்றுப்புறம், சூழ்நிலை இவற்றின் தரமும் தன்மையும்தான் பெரும்பாலும் ஒருவனது வாழ்வையும் வளர்ச்சியையும் வகுக்கின்றன. எனவேதான் பண்பால் உயர்ந்திருக்கவேண்டிய உங்கள் சமூகத்தின் நிலையைப் படியிறங்க விடாதீர்கள் என்று அவன் கேண்டுகோள் விடுக்கின்றான்.

உங்களிடம் வரும்போது அவன் வடிக்கப்படாத ஒரு வைரம்; ஆனால் உங்கள் உறவால் இன்று அது பட்டை தீட்டப்பெற்று பளிச்சிடுகிறது. அவனிடம் ஏதாவது பண்புகள் வளர்ந்திருந்தால், சிறந்திருந்தால் அது உங்கள் சேர்க்கையினால்தான். சிலைவடிக்கும் சிற்பியைப்போல நீங்கள் அவனை வளர்த்து விட்டிருக்கிறீர்கள்; வடிவம் தந்திருக்கிறீர்கள். அவனை உருவாக்கிய பணியிலே உங்களுக்குப் பங்கு உண்டு. உங்களில் ஒருவரது உறவு அவனுக்குக் குறைபட்டிருந்தாலும் அவனது பயிற்சியின், வளர்ச்சியின் ஒரு கோணம் குறைபட்டதாகவே இருந்திருக்கும்.

'நீங்கள்' எனும் கண்ணாடியிலே அவன் 'நான்' எனும் உருவைக் கண்டான். ஆம், பிறரைப் பற்றிய அறிவு பெருகும்போதுதான் தன்னைப்பற்றிய அறிவும் வளரமுடியும். உங்கள் ஒவ்வொருவரிடமும் எத்தனையோ நற்பண்புகள்; சிறப்பு இயல்புகள்; தான் தவிர்க்கவேண்டிய குறைபாடுகள், தழுவித் தனதாக்கிக்கொள்ளவேண்டிய நிறைபண்புகள் – இவற்றையெல்லாம் உங்களிடமிருந்து அவன் கற்றுக்கொண்டான். ஆம், வகுப்பறையில் அறிந்துகொண்டதைவிட வாழ்க்கை எனும் கல்விக்கூடத்திலே அவன் கற்ற பயனுள்ள பாடங்கள் எத்தனை எத்தனையோ!

ஓட்டுக்குள் ஒதுங்கிக்கொள்கிறது நத்தை; அதுபோல் தான் எனும் சுற்று மதிலுக்குள் தனித்து நிற்கும் பண்பு ஒருகாலத்தில் அவனிடம் தலைதூக்கி நின்றது. ஆனால் அவன்பால் நீங்கள் காட்டிய அன்பும் அக்கறையும் அச்சுற்றுச் சுவரிலே அலைமோதி அதைச் சிதைத்தன; உறவு என்னும் புதியதோர் உலகைக் காண அவனது விழிகளைத் திறந்துவிட்டன. அந்த உறவுதான் அவனை இன்று உருவாக்கிவிட்டிருக்கிறது.

வழியோரத்திலே நிற்கின்றது நடுகல்; வருவோர் போவோர் வழிபடுவதன் காரணமாக அது சில வேளைகளில் கடவுளாக மாறுவதுண்டு. அதுபோல் நீங்கள் அவனை மதித்தீர்கள்; அவனும் தன்னை மதிக்கக் கற்றுக்கொண்டான். பிறர் அவன்மேல் நல்லெண்ணம் வைத்திருந்தனர்; இதனால்தான் தன் மேல் அவனுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

உள்ளம் கலங்கிய வேளைகளில் உங்களில் சிலரிடம் அவன் வருவதுண்டு. நெஞ்சத்தின் ஆழத்திலே புதைந்துகிடந்த ஏக்கங்களை, எண்ணங்களை உளம்திறந்து அவன் உரைப்பதுண்டு. அது அவனது அலையும் மனத்திற்கு அமைதி அளித்தது. அவனது வருத்தம் போக்கும் வடிகாலாக வாழ்ந்திருக்கின்றீர்கள்; அதுபோல் வாழ்விலே மகிழ்வைப் பாய்ச்சும் வாய்க்காலாகவும் இருந்திருக்கின்றீர்கள். ஓர் இளநகை, ஓர் இன்சொல், ஒரு வாழ்த்துமொழி, ஒரு பாராட்டுச்சொல் –– இவைதான் முடங்கிக்கிடந்த அவனுக்குத் தன்னம்பிக்கை எனும் விடுதலைக் கதவாய் விளங்கின. இன்னும் பலர் இருக்கலாம். அவர்கள்பால் நீங்கள் கொள்ளும் அக்கறை எனும் ஏணி எட்டாத காரணத்தால் தாழ்வு மனப்பான்மை எனும் தாழ்வாரத்திலே அவர்கள் தயங்கி நிற்கலாம். தங்களது சிறுமைக்குள்ளேயே சிறைபட்டுகிடக்கும் அவர்களை விடுவிக்க உங்களது உள்ளக் கதவுகளை அகலத் திறங்கள். இதுதான் அவனது இறுதி வேண்டுகோள்.

